Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-35 29-04 நவம்பர் 2004

## அரசால் புறக்கணிப்படும் இடம்பெயர்ந்தோர்



## மண்ணின் மைந்தர்கள்

# திருமுக அறிமுகம்



## சுவாமி ஞானப்பிரகாசர்

யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த மன்னர்களுள் ஆறாவது பரராஜ சேகரன் பரம்பரையில் ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்தவர்தான் சுவாமி ஞானப்பிரகாசர். இவர் 1875 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30 ஆம் திகதி சாமிநாதபிள்ளை தங்கமுத்து தம்பதிகளுக்கு மகனாகப்பிறந்தார்.

சாமிநாதபிள்ளை ஒரு ஆசிரியராவார். சுவாமி ஞானப்பிரகாசரின் இயற்பெயர் வைத்திலிங்கம் ஆகும். இவரை கனகரத்தினம் என செல்ல மாக அழைப்பர். சுவாமி அவர்களுக்கு 5வயது ஆகும் போதே தந்தையார் இறைவனடி சேர்ந்துவிட்டார். இதனால் ஞானப்பிரகாசரின் தாயார் அச்சுவேலியில் அச்சுக்கூடம் நடத்தி வந்த தம்பிமுத்து என்பவரை மறுமணம் செய்து கத்தோலிக்க மதத்தைத்தழுவினார். அப்போது சுவாமி அவர்களுக்கு ஞானப்பிரகாசர் என பெயர் சூட்டப்பட்டது.

அச்சுவேலி அமெரிக்க மிசன் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்த ஞானப்பிரகாசர் சிறுவயதிலேயே இலக்கணங்களைப் பிழையின்றி எழுதுவதை தனது வளர்ப்புத் தந்தையான தம்பிமுத்துவிடம் கற்றுக்கொண்டார். சிறுவயதில் இலக்கிய ஆர்வம் கொண்ட இவர் கவிதை எழுதும் ஆற்றல் உடையவராக விளங்கினார்.

ஆரம்பக்கல்வியை தொடர்ந்து புனிதபத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். சங்கீத ஞானம் உள்ளவராக விளங்கிய ஞானப்பிரகாசர் ஒரே நேரத்தில் பல வாத்தியக்கருவிகளை மீட்டக்கூடிய திறமை பெற்றிருந்தார். தனது படிப்பை முடித்துக்கொண்ட ஞானப்பிரகாசர் இலங்கை புகையிரத நிலையத்தில் வேலைக்கமர்ந்தார். ஆனால் அவர் அவ்வேலையை மூன்று வருடங்களே மேற்கொண்டார். பின்னர் கத்தோலிக்க மதகுருவாக மாறவிரும்பி குருமடத்தில் சேர்ந்துகொண்டார். 1907 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1 ஆம் திகதி அவர் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அவர் கத்தோலிக்க மதத்திற்கு ஆற்றிய தொண்டுகள் பல. எந்தக் குருவானவரும் செய்திராத தொண்டுகள் புரிந்தார். கிட்டத்தட்ட 37 தேவாலயங்களைக் கட்டுவித்தார். பல வாசிக சாலைகளை உருவாக்கினார். சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், ஆய்வாளராகவும் விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசர் வீரமா முனிவருக்குப் பிறகு தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் முதன்மையானவராகக் கருதப்பட்டார்.

72 மொழிகளை அறிந்திருந்தார், 12 மொழிகளைக் கற்று பாண்டித்தியம் பெற்றார். தொன்மையான தமிழ் மொழியை ஆர்வத்தோடு ஆழமாகக் கற்றார். மொழிகளில் மாத்திரமின்றி சமயம், தத்துவம், சரித்திரம் போன்றவற்றிலும் ஆழ்ந்த ஞானம் பெற்று விளங்கினார். யாழ்ப்பாணச் சரித்திரத்தை முதலில் வெளியிட்டவர் சுவாமியவர்களேயாவார். ஞானப்பிரகாசரின் கட்டுரைகள் மதுரை தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய 'கலைமகள்','சத்தியநேசன்','கலாநிலையம்' என்ற கட்டுரைகளும் தமிழ் நாட்டு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இன்னும்பல முக்கிய கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன.

12 ஆண்டுகள் ஆராய்ந்து " சொற்பிறப்பு ஒப்பியல்" என்ற தமிழ் அகராதியை இருபது பாகங்களாக எழுதி இதில் முதல் ஆறு பாகங்களை வெளியிட்டார். அகராதி தமிழ்ச் சொற்கள் பற்றிய ஆராய்ச்சி நூலாகும். இந்நூலின் ஏனைய பாகங்களை வெளியிடும் முன்னரே சுவாமி அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். துரதிஷ்டவசமாக கையெழுத்துப்பிரதியாக இருந்த ஏனைய பிரதிகள் பாதுகாக்கப்படவில்லை. தமிழ் வளர்க்க அரும்பாடுபட்ட ஞானப்பிரகாசரின் தமிழ் அகராதி நூல் தமிழ் ஆய்வுகளுக்கு நன்கு உதவுகின்றன.

1896 ஆம் ஆண்டிலிருந்து 1906 ஆம் ஆண்டுவரை "அமலோற்பவ இராக்கினித் தூதன்" என்னும் மாதச் சஞ்சிகையின் ஆசிரியராக சுவாமிகள் விளங்கினார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், அவர் பெரும் தொண்டாற்றியுள்ளார். தமிழ் மொழி தொன்மையான மொழி எனவும், பல பிற மொழிகளுக்கு தாயாக உள்ளது எனவும் ஆய்ந்து கூறியவர்.

அவரின் சமூகப்பணிகளிலே, ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் உபதலைவராக இருந்தார். அத்தோடு ஆசிய அரசசபையின் இலங்கை இணைத்தலைவராகவும் இருந்தார்.

சுவாமிகள் தமிழ் ஆய்வு செய்த காலத்தில் பிரயாண வசதிகளன்றி, கால் நடையாகவும்,சைக்கிளிலும், மாட்டுவண்டியிலும் பிரயாணம் செய்தும் குப்பி விளக்கிலே படித்தும், தமிழ் ஆய்வு செய்து தமிழுக்கு தொண்டாற்றிய பெரும் அறிஞராவார்.

தான்பிறந்த மானிப்பாயில் உள்ள வைத்திய சாலையில் நோய்வாய்ப்பட்ட நிலையில் 1947 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். 1981 ஆம் ஆண்டு இலங்கையரசு அவரது உருவம் பொறித்த தபால்முத்திரையொன்றை வெளியிட்டது. சுவாமி ஞானப்பிரகாசர் இம்மண்ணை விட்டு மறைந்தாலும் அவர் தமிழுக்கு செய்ததொண்டுகள் இன்றும் நிலைத்திருக்கின்றன.

# கார சாரம்

## மக்களை மதியுங்கள் அவர்களுக்கு சேவை புரியுங்கள்...!

சண்டை நிண்டு போச்சு சாமான் சக்கட்டும் வந்து பொலியுது கட்டடங்களும் மளமளண்டு எழும்புதுகள். அதில வந்து பாருங்கோ- காணிநிலமுள்ளவை வீடு கட்ட காணி நிலம் இல்லாதவை என்ன செய்யினம். தங்களுக்குச் சொந்தமில்லாத வேற ஆற்றயும் நிலத்தைப்பிடிச்சு அதில வீடுகட்டுகினம். காணிச் சொந்தக்காறர் இடம்பெயர்ந்துபோன இடத்தால சாவகாசமா உறுதியோட வந்து பார்த்தா இஞ்ச ஆராரோ வீடுகட்டியிருக்கினம்.

அவையளக் கேட்டா இது நாங்கள் விலைக்கு வாங்கின காணி எண்டு சொல்லுகினம். ஆற்ற காணிய ஆர்விக்கிறது. ஆர்வாங்கிறது எண்ட ஒரு வரைமுறையே இல்லை. வாங்குறவையும் உறுதியோ, அனுமதிப்பத்திரமோ இருக்குதா? இல்லையா? எண்டதக் கவனிக்கிறதில்லை.

உண்மையிலயே உரிமையிருந்து, தன்னுடைய உரித்தை சேரவேண்டிய ஒருவருக்கு வழங்கி அந்தக் காணியை பெற்றவர் மாற்றி எடுப்பது பெரும் சிரமம். இந்தக் கந்தோருக்கும் அந்தக் கந்தோருக்கும் எண்டு மாறி மாறி அலையுறதில வாணாள் போயிடும்.

அதே நேரம் ஒருவரின்ர அனுமதியுமில்லாம அடாத்தா அடுத்தவன்ர நிலத்தைப்பிடிச்சவன் ஓடுபோட்டே வீடு கட்டிருவான். அதுக்குப்பிறகு அவனை எழுப்பி வெளியேற்ற எவ்வளவு காலம்வேணும். கிளிநொச்சி புதுக்குடியிருப்பு, வவுனியா, மன்னாரெண்டில்ல திருகோணமலை, மட்டக்களப்பு எல்லா இடமும் இது தான் நடக்குது.

இதுகளின்ர விளைவு என்ன? நீதிமன்றங்களில வழக்குகள் பெருகுது. கச்சேரி வழிய பிரச்சினையள் பெருகிப் போச்சு.

ஒட்டுமொத்தத்தில வந்து பிரச்சினைகளின் பெருக்கத்தால காணி சம்பந்தமான வேலையில் பெரும் பிரச்சினையாம்.

உலகத்துக்கே தெரியும் சிவில் வழக்குகள் போட்டால் போட்டவையின்ர பேரப்பிள்ளையள் வந்துதான் முடிவு காணவேணும். என்னவோ சொல்லுவினமே- காணிச்சண்டையில. கைகலக்கிறவைக்கு கரியாவது மிஞ்சும். அவை கோட்டுக்குப் போனால் சாம்பல்தான் மிஞ்சும் எண்டு.

சரி இவளபிரச்சினையளுக்கும் யார் காரணம். சனத்துக்கு இந்தக் காணி தொடர்பான சட்டங்கள் எதுவும் சரியாத் தெரியாது. ஒரு விதானை யாரட்டப் போய் இதைப்பற்றி சாவகாசமாக் கதைக்க ஏலுமோ? அவருக்கு தன்னுடைய கடமைமட்டிலான அறிவுமட்டுமே இருக்கும், ஒருவர் கூறினார்.

சரி ஒரு காணி அதிகாரியிட்டப்போய் இதைப் பற்றிக் கொஞ்சம் ஆலோசனை பெறலாமே எண்டு நினைச்சுக் கொண்டு காணிச் செயலகத்துக்குப் போனால். அங்கே- அதிகாரியின் அறைக்குள் யாருமில்லை. வெளியே இருக்கும் எழுதுவினைஞர் ஒருவரின் மேசைக்கு முன் ஒருவர் அமர்ந்திருந்தார். அருகில் ஒருவர் நின்றார். அவர்கள் ஏதோ விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். விவாதமும் மிகச் சுவாரஷ்யமாக இருந்தது போலும் சிரிப்பும்,கும்மாளமுமாக இருந்தது. நான் அங்கே மக்கள் உட்காருவதற்காகப் போடப்பட்ட சாய்வு வாங்கிலில் இருந்தேன். ஏற்கெனவே இருவர் அதில் இருந்தனர்.

நான்பொறுமையை இழந்து இன்னொரு புறம் உட்கார்ந்திருந்த பெண் ஊழியரிடம் ''மிஸ் டியெல்லோவச் சந்திக்கோணும் வருவாரே''

என்று கேட்க, அவள் அந்த ஐம்பது வயதுக்காரரைக் கைகாட்டி ''அவர்தான் டியெல்லோ...ஏதோ பிஸியாயிருக்கிறார்....''

என்றாள், ஒருவழியாக அவர் தன் இருக்கைக்குத் திரும்பினார். நான் ஆச்சரியப்பட்டேன். அழைப்பு மணியை அழுத்தி தேவையான ஊழியரை தனது அறைக்குள் அழைத்துப் பேசும் அதிகாரிகளையே அறிந்து வைத்திருந்த எனக்கு ஊழியர்களுடைய மேசைக்கே எழுந்து வந்து கோப்புகளைப் பெற்றுக் கொண்டு போகும் இந்த அதிகாரி என்னை எங்கோ... கொண்டு போய்விட்டார்.

''சேர், எங்களுக்கு ஒரு சந்தேகம். இந்த காணிப் போமிற்ற மாத்தலாமோ. எண்டு....'' எனப்பவ்வியமாக ஆரம்பித்தேன்.

சட்டென''நேரமில்லை... நேரமில்லை. இப்ப உதுகள் பாக்கேலாது. என்னை மினக் கெடுத்தாமப்போங்கோ அங்கால"என்றார் சரி இன்னொரு டியெல்லோட்ட போய் இந்த யோசனையைக் கேட்போம் என்று நினைத்துக் கொண்டு வந்துவிட்டேன்.

இதே போன்று காணி அதிகாரியை சந்திக்கப் போன போது ஒரு ஊழியர் சொன்னார். "சேர் உள்ளுக்குத்தான் இருக்கிறார். பாய்ஞ்சு விழுவார் பாத்துப் போங்கோ..." என்று எனவே எச்சரிக்கையாக எட்டிப் பார்த்தேன்.

"என்ன விசயம்...ங்... காணியோ...ஆரைக்கேட்டு வாங்கினநீங்கள்....அ....மாமாதந்ததோ.... இப்பநேரமில்லை...போங்கோ... இஞ்சயென்ன சும்மாயே இருக்கிறம்...? வந்திட்டினம்...

இவையெல்லாம் எங்கட வரிப்பணத்தில எங்களுக்கு வேலை செய்ய வெண்டு நியமிக்கப்பட்ட ஆக்கள்தான். ஏன் பாஞ்சு விழுகினம் இவையடபோக்குகளாலதான் சனம் நீதியான ஆலோசனை கிடைக்காம அலையுது. எல் லாத்துறையிலும் இப்படியான அரச ஊழியர்கள் இருக்கினம் இந்தியன், வல்லவன், சிட்டிசன் போஸ்டூடண்ஸ் போல இஞ்சயும் ஆரும் வெளிக்கிட வேணும். இல்ல மக்களுக்கு தங்கட உரிமையள் என்னண்டு தெரியவேணும். கால் சட்டையும், கண்ணாடியும் போட்டுக் கொண்டு கதிரையில இருந்து கொண்டு முன்னுக்கு இருப்பவரைச் சற்றும் பொருட்படுத்தாது. தமது உறவினருடன் மணிக்கணக்காகப் பேச்சு வார்த்தை நடத்த மேசையிலேயே ஒரு தொலைபேசி, முன்னங்கால்களை மேசைக் காலில் உதைத்து நாற்காலியின் பின்னங்கால்களில் மட்டுமே இருந்து ஆடியாடிப் பேசும் அதிகாரிகள் அதிகாரம் செய்கின்றனர். பாவம் மக்கள் போரோய்ந்து போன பிறகும் கையேந்திநிற்கும் அவலம் தொடர்கிறது. மக்களுக் கான நிவாரணங்கள் கூட ஒழுங்காக இல்லை. மக் களை இழிவாக எண்ணும் இந்த ஊழியர்கள் தாமாகத் திருந்த வேண்டுமல்லவா.

அரச ஊழியர்கள் அனைவரும் கெட்டவர்கள் அல்லத்தான். மக்களுக்குத் தெரிந்த அளவில் ஏதாவது செய்யத்துடிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வேண்டுமென்றே தமிழர் தாயகப்பிரதேசங்களில் இப்படிப்பட்டவர்கள் வந்து சேர்க்கப்படுகி றார்களோ என எண்ணத் தோன்றுகிறது. ஒரு சிலர் இப்படிநடப்பதால் பாதிக் கப்படுவது மக்களல்லவா?

மாயா

# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை

சமாதானத்தின் திறப்பு இந்தியாவின் கையில்தான் உள்ளது என்று கடந்த கிழமை இப் பத்தியில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் அதாவது கடந்த கிழமை இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன் படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இது சமாதானத்தின் வழியில் தோன்றிய ஒரு துர்க்குறியாக தமிழர்களால் பார்க்கப்படும் ஒரு சூழலில் இந்த உத்தேச உடன்படிக்கை பற்றி இரண்டு விதமாக வியாக்கியானங்கள் செய்யப் படுகின்றன. முதலாவது, பெரும்பாலான சிங் களப் புத்திஜீவிகள் கொள்கை வகுப்பாளர் கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோர் இந்த உடன்படிக்கை சமாதானத்தை நோக்கி புலிகளை நிர்ப்பந்திக்கும் நோக்கிலானது என்ற தொனிப்படக் கதைத்தும் எழுதியும் வருகிறார் கள். அதாவது, இலங்கைத்தீவின் சமாதானம் என்று அவர்கள் கருதும் ஏதோ ஒன்றைநோக்கி புலிகளை இறங்கிவரச் செய்ய இந்த உடன் படிக்கை உதவும் என்றவிதத்தில் அமைந்த வியாக்கியானம் இது.

இரண்டாவது, புலிகளை ஐரோப் பாவுக்கு விருந்தினர்களாக வரவழைத்ததன் மூலம் அவர்களுக்கு குறிப்பிடத்தக்களவு அரசியல் அந்தஸ்தை வழங்கி அதன் மூலம் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப் பதற்கு மேற்குநாடுகள் எடுத்த முயற்சிகள் எதிர்மறையான பலன்களைத் தரத்தொடங்கி விட்டன என்பதான ஒரு வியாக்கியானம்.

இந்த இரண்டு வியாக்கியானங் களுக்கு ஊடாகவும் இலங்கைத்தீவின் சமா தான முயற்சிகளின் இன்றைய போக்கை விளங்கிக்கொள்ளலாம் மட்டுமல்ல அவை எதிர்காலத்தில் எத்தகைய திருப்பங்களை எடுக்கக்கூடும் என்பதையும் ஓரளவுக்கு சரியாக ஊகிக்கலாம் எனவே அவற்றை சிறிது ஆழமாகப் பார்ப்போம்.

முதலாவது வியாக்கியானத்தின் படி ஓய்வுபெற்ற சிங்கள இராஜதந்திரியான கொடகே போன்றோர் நம்புகிறார்கள், இந்தியா தங்களோடு நிற்குமாக இருந்தால் புலிகளை ஒன்றில் நசுக்கிவிடலாம் அல்லது ஒரு வழிக்குக் கொண்டுவந்து விடலாமென்று.

எனவே இந்த உத்தேச உடன்படிக் கையானது பின்வரும் விசயங்களை கட்டாய மாக உள்ளடக்கியிருக்கவேண்டும் என்று அவர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் கூறுகிறார்கள். முதலாவது, திருமலைத்துறை முகத்தை இந்தியாவிடம் நீண்டகால குத்தகைக் குக் கொடுப்பது, இரண்டாவது, திருமலையில் பிராந்திய கடற்படைப் பயிற்சி மையம் ஒன்றை இந்தியா அமைக்க வேண்டும் என்பது. மூன்றா வது, பலாலி விமானத்தளத்தை இந்தியாவின் உதவியைப் பெற்று விஸ்தரிப்பதோடு அதை இந்திய வான்படை பயன்படுத்த அனுமதி தரப்படவேண்டும் என்பது. இந்த மூன்று விசயங் களினூடாகவும் அவர்கள் என்ன சொல்லவரு கிறார்கள் என்றால் இலங்கைத்தீவின் முப்படை களும் இந்தியாவுடன் நெருக்கமான உறவை பேணும் வகையில் இந்த உத்தேச உடன் படிக்கை வடிவமைக்கப்படவேண்டும் என்று.

ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியன் ஒயில் கோப்பிரேஷனுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டமை என்பது புலி களுக்கு எதிரான ஒரு “காப்புறுதிப் பத்திரத்தை” போன்றது என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

எதிர்காலத்தில் திருகோணமலைக் கான சண்டை எதிலும் இந்தியாவும் பங்கு பற்றக்கூடும் என்ற ஒரு நிலையை இந்த எண்ணெய்க் குதங்கள் மீதான ஒப்பந்தம் உரு வாக்கியிருப்பதாகவும் அது போலவே இப் பொழுது வேகவேகமாக இறுதியாக்கப்பட்டு வரும் உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையும் இனிவரும் எந்த ஒரு யுத்தத்திலும் இந்தியா பங்குபற்றக்கூடிய வாய்ப்புக்களை திறந்துவைத் திருக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், அவர்கள் ஒன்றைக் கவனிக் கத் தவறுகிறார்கள். இப்படி ஒரு ஒப்பந்தம் உருவாகுமோ இல்லையோ அதில் இறுதியாக் கப்படப்போவதாக கசிந்திருக்கும் விவகாரங்கள் பலவற்றில் ஏற்கனவே இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையில் நெருங்கிய ஒத்துழைப் பும் நட்புணர்வுகலந்த ஒரு புரிந்துணர்வு நிலவிவருகிறது என்பதே அது. குறிப்பாக, புலனாய்வுத்தகவல் பரிமாற்றம், அதிகாரி களுக்கான பயிற்சி, கூட்டுக்கடல்ரோந்து மற்றும் ஆபத்தில் உதவி போன்ற இன்னோரன்ன விவகாரங்களில் கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே ஏற்கனவே, குறிப்பாக ராஜீவ்,ஜே.ஆர் உடன்படிக்கையிலிருந்து தொடங்கி எழுதப் படாத ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை நிலவி வருவதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

சர்வதேசக் கடற் பரப்பில் புலிகளின் கப்பல்கள் வழிமறித்துத் தாக்கப்படுவதற்கான புலனாய்வுத்தகவல்கள் பல புதுடில்லியிலிருந்து தரப்பட்டவைதான் என்று மிக வலிமையான ஊகங்கள் உண்டு.

எனவே கொழும்புக்கும் புதுடில் லிக்கும் இடையே ஏற்கனவே, எழுதப்படாத ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை நடைமுறையில் உண்டு. இப்பொழுது ஆலோசிக்கப்படும் பாது காப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எனப்படுவது ஏற்கனவே நடைமுறையில் உள்ள விவகாரங் களை ஏதோ ஒரு இராஜீய ஒழுங்கமைப்புக்குள் எழுத்தில் போடுவது மட்டுமே.

இதை இன்னொரு விதமாகச் சொன்னால், முன்பு ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தியேழாம் ஆண்டில் ராஜீவும் ஜே.ஆர். ஜயவர்த்தனவும் செய்த உடன்படிக்கையின் நீட்சியே இந்த உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எனலாம். ராஜீவ், ஜே.ஆர் உடன்படிக்கையின் பின்னிணைப்பாக காணப் படும் கடிதங்களிலிருந்து இது தொடங்குகிறது. கடந்த சுமார் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக இக் கடிதங்களில் கூறப்பட்ட விவகாரங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியலில் ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு விகிதத்தில் அமுல் செய்யப்பட்டே வந்துள்ளன. அதாவது இச்சிறுதீவின் அரசியலின்மீது ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு விகிதத்தில் ராஜீவ் - ஜே.ஆர் உடன்படிக்கையின் நிழல் வீழ்ந்து கொண்டே இருக்கிறது. இப்பொழுது இந்த நிழலை: அதாவது சுமார் ஒரு தசாப்த காலத்துக்கும் மேலான நடைமுறை ஒன்றை இராஜீய அந்தஸ்துடைய ஒரு ஆவணமாக



மாற்ற முயற்சிகள் நடக்கின்றன.

எனவே இங்கே முக்கியமாக ஒன்றைக் கவனிக்கவேண்டும். இந்த உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையில் உள்ளடக் கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் விவகாரங் களில் பெரும்பாலானவை ஏற்கனவே நடை முறையில் இருந்துவருகின்றன. இந்த நடை முறையின் பின்னணியிலேயே புலிகள் தற்சமயம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் இராஜீய அந்தஸ்தையும் பெற்றிருக்கிறார்கள். அதாவது கடந்த சுமார் பதினேழு ஆண்டுகளாக எதிரியின் எதிரி எனக்கு நண்பன் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் பிரயோகத்தில் இருந்து வருகின்ற நட்புறவு புரிந்துணர்வு என்ப வற்றின் அடிப்படையில், நெருங்கி ஒத்துழைப் பதற்கான ஒரு எழுதப்படாத பாதுகாப்பு உடன் படிக்கையின் கீழ் அவர்களால் புலிகளின் எழுச்சியை பெரிய அளவில் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்நிலையில் இனி அந்த உடன்படிக்கையை எழுத்தில் போடுவதால் மட்டும் எதைச்சாதிக்கப்போகிறார்கள்?



இங்கே பிரச்சினை, உடன்படிக்கை என்பதை விடவும் உடன்படிக்கை செய்ய உத்தேசிக்கப்படும் காலம் அல்லது உடன் படிக்கையை இறுதிமுடிவாக்குவதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கும் காலமே. இதை இன்னும் விரிவாக விளங்கிக் கொள்வதென்றால் நாம் முன்பு பார்த்த இரண்டா வது வியாக்கியானத்திற்கு இனி வரவேண்டும்.

இரண்டாவது வியாக்கியானத்தின்படி - புலிகளின் சர்வதேச அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் மேற்கு நாடுகள் புலிகளின் பிரதானிகளை விருந்தோம்பியது புதுடில்லியில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியிருக் கிறதா? என்பது. அதாவது, கடந்த கிழமை இப்பத்தியில் கூறப்பட்டதுபோல இந்தியாவை சமாதானத்தின் கோட்பாட்டு ரீதியான பங்காளி யாக மாற்றும் நோக்கிலான மேற்கு நாடுகளின் பிரயத்தனங்கள் எதிர்பார்த்த வெற்றிகளை பெறத்தவறிவிட்டனவா? என்பது.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது - இந்திய உயர் அதிகாரிகளின் தூதுக்குழு கொழும்புக்கு வந்தகாலம் எது என்பதே. புலிகளின் தூதுக்குழு ஐரோப்பாவில் நின்றிருந்தவேளை இந்தியத்தூதுக்குழு கொழும்புக்கு விஜயம் செய்தது. இதில் ஒரு செய்தி இருக்கக்கூடும். அது என்னவெனில் - ஐரோப்பிய நாடுகள் புலிகளின் இராஜீய அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் அவர்களை விருந்தோம்பியது புதுடில்லிக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம்.

இது காரணமாகவே புலிகள் ஐரோப் பாவில் நின்றிருந்த கால கட்டத்தில் கொழும் புக்கு தனது தூதுவர்களை அனுப்பியதன்

**நிலாந்தன்**

மூலம் புதுடில்லி சமாதானம் செய்யும் நாடு களுக்கு அவற்றிற்கு உள்ள வரையறைகளை உணர்த்த முற்பட்டிருக்கக்கூடும். அதாவது இந்தியாவை சமாதான முயற்சிகளுக்கு கோட் பாட்டு ரீதியில் பொறுப்புக்கூறவல்ல ஒரு தரப்பாக மாற்ற மேற்கு நாடுகள் எடுத்துவரும் முயற்சிகள் எதிர்பார்த்த பலன்களைத் தரத்தவறி விட் டனவா? எனக் கேட்கத் தோன்றுகின்றது.

உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கை யில் கைச்சாத்திடுவது பற்றிய இறுதி முடிவுகள் எடுக்கப்படும் போதே இது பற்றி தீர்மானகரமாக எதையாவது கூறலாம்.

புலிகள் ஐரோப்பாவில் நின்றிருந்த வேளை புதுடில்லி தனது தூதுவர்களை கொழும்புக்கு அனுப்பியதன் மூலம் ஐரோப் பாவிற்கு உணர்த்தப்பட்ட செய்திக்கு, மேற்கு நாடுகள் காட்டப்போகும் எதிர்வினை என்ன என்பதும் இங்கு முக்கியமானது.

உத்தேச உடன்படிக்கை மேற்கிற்கு எதிரானது அல்ல மாறாக சமாதானம் செய்யும் நாடுகளுக்கு அவர்களுடைய வழிகளை இலகுவாக்கிக்கொடுக்கும் நோக்கிலானது என்று கொழும்பிலுள்ள சில விமர்சகர்கள் கூறு கின்றார்கள். அதாவது இனியொரு சண்டை மூண்டால் இந்தியாவும் பங்குபற்றக்கூடும் என்ற ஒரு நிலையைத்தோற்றுவிப்பதன் மூலம் புலிகளை யுத்தமல்லாத வழிகளில் சிந்திக்க வைத்து இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைக் குறித்து அவர்களின் நிலைப்பாடுகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்த இந்த உடன்படிக்கை உதவக்கூடும் என்ற வாதத்தின் அடிப்படை யில், இது சமாதானம் செய்யும் நாடுகளைப் பொறுத்தவரை அவர்களுடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுக்கக்கூடியது என்றும் இந்த விமர்சகர்கள் கூறிவருகிறார்கள்.

ஆனால் இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றைப் பொறுத்தவரை இந்தியாவிடம் உள்ள சித்திரமும் மேற்கு நாடுகளிடம் உள்ள சித்திரமும் ஒன்றல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

சமாதானம் என்று வெளியாட்கள் கருதும் ஒரு சதுரத்துக்குள் விடுதலைப்புலிகள் என்றைக்குமே அடங்கி நின்றதில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

தமிழர்கள் கடந்த அரைநூற்றாண்டு காலமாக எத்தனையோ உடன்படிக்கைகளை கண்டுவிட்டார்கள். உடன்படிக்கைகள் எழுதப்படுவதும் பின்பு கிழித்தெறியப்படுவதும் அல்லது முறிக்கப்படுவதும் அல்லது தானாக காலாவதி ஆகிப்போவதுமாக கடந்த சுமார் அரை நூற்றாண்டு கால தமிழர்களின் வரலாறு எனப்படுவது முறிக்கப்பட்ட உடன்படிக்கை களின் வரலாறாகவே காணப்படுகிறது.

தற்சமயம் ஒரு புரிந்துணர்வு உடன் படிக்கை அதிசயமாக அற்புதமாக சுமார் முப்பது மாதங்களைக் கடந்து அமுலில் உள்ளது.

இது எப்பொழுது முறிக்கப்படும்? அல்லது காலாவதி ஆகும்?

இது முறிக்கப்படுவதற்கு இடையில் உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன் படிக்கை கைச்சாத்திடப்படுமா?

அல்லது அது கைச்சாத்திடப்படு வதன் மூலம் இந்த புரிந்துணர்வு உடன் படிக்கை காலாவதி ஆகுமாறு செய்யப்படுமா?

அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை யும் உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையும் சமாந்தரமாக வாழுமா? என்பதெல்லாம் தமிழர்களை பொறுத்தவரை ஒரு பிரச்சினையே அல்ல. ஏனெனில் உடன்படிக்கைகளைக் கடந்து செல்லும் அல்லது தம்மைப்பணிய வைக்க முயலும் உடன்படிக்கைகளை மோதி உடைத்துக்கொண்டு முன்செல்லும். மிக அரிதான புதிரான இயல்பினை உடைய மக்கள் இவர்கள் என்பதைத்தான் கடந்த அரைநூற் றாண்டு கால வரலாறு நிரூபித்து வந்திருக் கிறது. இதை ஜவஹர்லால் நேருவின் வார்த்தை களில்கூறின் அவர் யூதர்களை வர்ணித்திருப்பது போல தமிழர்களும்PERSEVERING - PEOPLE தான். அதாவது தடைகளை மோதி உடைத்துக் கொண்டு முன் செல்லும் சக்தி மிக்க நிலை பேறுடைய மக்கள் என்று அர்த்தம்.

# நறுக்கென...



மனம்சலியாத விக்கிரமாதித்தன் மீண்டும் மீண்டும் தன் காரியங்களில் எவ்வளவு முயற்சியோடு செயலில் ஈடுபட்டதாக விக்கிரமாதித்தன் கதைகள் கூறுகிறதோ. அதேபோன்ற பல விக்கிரமாதித்தர்களை இலங்கை விவகாரமும் தோற்றுவித்துள்ளது.

நோர்வேயில் எரிக்சொல்ஹெய்ம், விதார் ஹெல்கேசன், ஜோன் பீற்றர்சன் என்றும், ஜப்பானிலிருந்து விசேட தூதுவர்

## விக்கிரமாதித்தர்களும் வேதாளங்களும்...!

யசூசி அகாசி என்று விக்கிரமாதித்தர்கள் பலர்.

ஆனால் இலங்கையில் வேதாளம் பல. அது இறங்குவதுபோல பாவனை காட்டுவதும், மீண்டும் முருங்கைமர உச்சிக்குத் தாவிக்கொள்வதும் நாம் தினசரி காணும் காட்சி. இப்போது ஜப்பானிலிருந்து வந்துள்ளார் விக்கிரமாதித்தர் யசூசி அகாசி. அவர் இலங்கைத்தரப்பில் சனாதிபதி சந்திரிகா உட்படப் பல உயர்மட்ட அரச அதிகாரிகளைச் சந்தித்துப்பேசவுள்ளார்.

மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும், இலங்கை வளங்கவுள்ள வெளிநாட்டு உதவிகள் தொடர்பாகவும் அவரது பேச்சுக்கள் அமையவுள்ளதாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது இப்படியிருக்க மனிதர் யசூசி அகாசி ஜப்பானில் சூறாவளியினாலும், மண்சரிவினாலும்பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டிருந்தபோதும் தனது இலங்கைக்கான பயணத்தை திட்டமிட்டபடி மேற்கொண்டுள்ளார்.

எல்லாம் எதற்காக? இதை நாம் கூறியா தெரியவேண்டும். சமாதான முயற்சிக்காகத்தான் .இப்படியிருக்க யசூசியின் இந்தப் பயணம் இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் எட்டாவது பயணமாக அமைகிறது.

ஆனால் இந்த எட்டாவது பயணத்தில் முக்கியமான வேதாளத்தையும் சந்திக்கவுள்ளார். அவர்தான் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க.

அகாசியை சந்திக்கவுள்ள சோமவன்ச அமரசிங்க அப்படி என்னதான் யசூசியோடு பேசப்போகிறார். தங்களது கட்சியின் சமாதான முயற்சி தொடர்பான நிலைப்பாட்டையா? ஜே.வி.பியின் சமாதான முயற்சி தொடர்பான நிலைப்பாட்டையா? ஜே.வி.பியின் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டை சிங்கள மக்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் பிறகு எப்படி யசூசி ஏற்றுக்கொள்ளப்போகிறார்.

சரி யசூசி கூறப்போவதை சோமவன்ச கேட்கப்போகிறாரா? அதுவும் இல்லை அப்படி என்றால் இரண்டு பேரும் சந்திக்கப் போவதால் என்ன பயன்தான் கிடைக்கப்போகிறது?

யாமறியோம் பராபரமே...

---



அடி சக்கை..... அம்மன் கோவில் புக்கை எண்டானாம். சந்திரிகா எவ்வளவுதான் அந்த சிவப்புச் சட்டை தாடிக்காரரை முதுகு தட்டினாலும் அவர்கள் சந்திரிகாவின் காலை வாரலாமா? தலையைத்திருகலாமா? சேறு அள்ளிப்பூசலாமா? என வாய்ப்புத்தேடுவதில் வல்லவர்களாகவே இருக்கிறார்கள்.

சந்திரிகாவில் சவாரிவிடுவதில் ஜே.வி.பிகாரர்கள் வலுவின்னர்கள்.

அது சரி இப்போது விசயத்துக்கு வருவோம். இந்த தாடிக்கார ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச அண்மையில் இரத்தினபுரியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் சந்திரிகாவை 'வாங்கு வாங்கு என வாங்கிவிட்டார்'

அப்படி என்னதான் அந்த கூட்டத்தில் பேசினார் என்று நீங்கள்

## ஜே.வி.பி கொடுக்கும் சந்திரிகாவுக்கான மரியாதை

யோசிப்பது தெரிகிறது. இதோ அவர் பேசியது. ஓய்வுபெற்றுச் சென்ற பொலிஸ்காரரைப் போல் இருந்த சனாதிபதிக்கு உத்வேகத்தை ஏற்படுத்தியவர்கள்.

நாம் நிம்மதியின்றி, நித்திரையின்றி தவித்தவரை நிம்மதியாக நித்திரை கொள்ள வைத்வர்கள் நாம். ச்ர்வதேச மட்டத்தில் ஒரு ரூபா அல்ல ஐம்பது சதத்துக்குக்கூட மதிக்கப்படாமல் இருந்து வந்த அவரை ச்ர்வ வல்லமை பொருந்திய சனாதிபதியாக்கியதும் நாங்களே என சனாதிபதியின் அதிகாரங்களிலிருந்து சனாதிபதியின் அமைச்சரவை வரை கிண்டலடித்துள்ளார்..

முன்பு இந்த அரசின் சொந்தக்காரர்கள் தாங்களே என உரிமை கோரினார்கள். இப்போது சனாதிபதி சந்திரிகாவை ஒரு கையாலாகாதவர் போல சித்தரித்திருக்கிறார்.

பாவம் சந்திரிகா நாற்காலி ஆசை எந்தளவுக்கு அவரை மதிப்பிறக்கிவிட்டது. எல்லாம் அந்த கூடப்பிறந்த தம்பியான கோமாளி இளவரசர் என வர்ணிக்கப்படும் அனுராபண்டார நாயக்கவினாலும்,சந்திரிகாவின் நெருங்கிய சகாவான மங்கள சமரவீரவினதும் அபயம்தான் இது.

ஜே.வி.பியோடு கூட்டு வைக்க வேண்டும் என ஒற்றைக்காலில் நின்றவர்கள் அவர்கள் தான்.

இதன் வினை ஐம்பது சதத்துக்குக் கூட மதிப்பில்லாதவராகக் காட்டுமளவுக்கு நிலைமையைக் கொண்டு வந்திருக்கிறது.

அது சரி. ஜே.வி.பி யே இன்னும் மக்கள் மத்தியில் முழுமையாக இடம் பிடிக்காது இருக்கும் போது சந்திரிகாவை ச்ர்வ வல்லமையாக்கும் அளவுக்கு சக்தியைக் கொடுத்தது எது?

ஜே.வி.பியின் பலத்தால் சந்திரிகா ச்ர்வவல்லமைபெற்றார் என்பதை விட சந்திரிகாவின் பலவீனத்தால் ஜே.வி.பியினர் வல்லமை பெற்றனர் என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

ஜே.வி.பி எனும் கொடிக்கு படர வாய்ப்பாக கிடைத்த சுதந்திரக்கட்சி எனும் மரம் இன்று கொடியாகி ஜே.வி.பி மரமானாலும் வியப்பில்லை.

காரணம் இந்த சிவப்புச்சட்டை தாடிக்காற ஜே.வி.பிகாரர்களுக்கு புரட்சி, வளர்ச்சி, சதி என்பவற்றை சொல்லியா கொடுக்கவேண்டும்.அதாவது மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா என்ன என கேட்பது புரிகிறதா?

---



பிக்குமாருக்குப் பயந்து கனேடியத்தூதரகமே மூடப்பட்டதுடன் தூதரகத்தில் பணியாற்றிய ஊழியர்கள் வெலவெலத்துப் போயினர்.

ஆக பிக்குமார் கனடா செல்வதற்கு தூதரகத்தில் விசா பெறச் சென்றபோது அவர்களின் கடவுச் சீட்டுக்குள் இருந்த ஒருவகை பவுடர்தான் இதற்குக் காரணம்.

இந்த விவகாரத்தை அடுத்து கனேடியத் தூதரகம் மீது ஜாதிக ஹெல உறுமயவினர் கடும் சீற்றம்கொண்டு

## அந்திராக்ஸ் பீதியும் பிக்குவின் பவுடரும்

கனேடியத் தூதரகத்தினர் பிக்குமாரை அவமதித்ததற்காக பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்கள்.

இது இப்படியிருக்க கனேடியத் தூதரகத்தில் உள்ளவர்கள் இவ்வாறு அச்சமடைந்ததற்குக் காரணம் இருக்கிறது.

த்ர்ம உபதேசங்களைச் செய்வதிலும், பிரித்தோதி நல்மார்க்கத்தை அடைய வழிகாட்ட வேண்டிய பிக்குமார் சாக்கடை என வர்ணிக்கப்படும் அரசியலுக்குள் இறங்கி நாட்டையே அல்லோலகல்லோலப்படுத்தும் போது 'அந்தராக்ஸ்' தாக்குதலில் இவர்கள் ஈடுபட்டாலும் படலாம் என அவர்கள் சந்தேகித்து விட்டனர் போலும்.

எல்லாம் அவரவர் இருக்குமிடத்தில் இருந்துகொண்டால் சரியாக இருந்திருக்கும்.

பாவம் சந்தேகப்பட்டதோடு மட்டுமல்லாது கறுவாத்தோட்ட பொலிஸ்நிலையத்திற்குமல்லவா ஏற்றி அனுப்பிவிட்டார்கள்.

அத்தோடு அவர்களின் காவி உடையையும் களைந்து பரிசோதித்துவிட்டனர் என்பதும் ஹெல உறுமயகாரர்களுக்குக் கோபம்.

அது சரி இந்தப் பிக்குமாரை அவமதிக்கும் செயலை மிக அண்மையில்தானே நாடாளவேண்டிய நாடாளுமன்றத்தில் பௌத்தமதத்தின் வாரிசுகள் அரங்கேற்றி வைத்தார்கள்.

இந்த செயலில் கூட பிக்குகளின் அங்கிகள் களையப்பட்டதோடு மட்டுமல்ல பிக்குமார் தாக்கப்பட்டிருந்தனர்.

என்ன அதைப் பொறுத்துக்கொண்ட ஜாதிக ஹெல உறுமய பிக்குகளால் இப்போது இதனைப்பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

உண்மைதான். பிக்குகள் மதிக்கப்பட வேண்டியவர்கள். மரியாதையோடு நடத்தப்பட வேண்டியவர்கள். ஆனால் இவற்றிற்குப் பாத்திரமானவர்களாக பிக்குமாரும் நடந்துகொள்ள வேண்டுமல்லவா?

---



இலங்கை இந்திய கூட்டுச் சக்தியாக தமிழ் மக்கள் மீது 1987இல் திணிக்க முயன்ற இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னணியிலும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பராக இருந்தவருமான 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் ராமை தமிழ் மக்கள் அவ்வளவு இலகுவாக மறந்திருக்கமாட்டார்கள்.

தமிழ் மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதில் 'இந்து' எப்போதும் முன்னின்று செயற்படுவது எல்லோருக்கும் தெரியும்.

## காலத்தின் திசையில் நின்று நிலைமையை மதிப்பீடு செய்க!

சென்னை இந்துவின் பிரதம ஆசிரியரான ராம் காலத்தைக் கணக்கிடாது எப்போதும் பெரும் மேதாவித்தனத்தோடு கருத்துக்களைத் தெரிவிப்பதாக நினைத்துக்கொண்டு காலத்தின் பின்னுக்கு புறமுதுகிட முயற்சிக்கிறார்.

அண்மையில் வெளியான இந்துவின் ஆசிரியர் தலைமையகத்தில் " இந்தியா-சிறிலங்கா பாதுகாப்பு உடன்படிக்கை" தலைப்பிட்டு இந்திய இலங்கைப் பாதுகாப்பு உடன்படிக்கையை வலிந்து நியாயப்படுத்தியிருப்பதோடு ஐக்கிய தேசியக் கட்சியின் மறைந்த பிரமுகரான காமினி திசாநாயக்கவின் நினைவாக கொழும்பில் நடைபெற்ற நிகழ்விலும் இதே விடயத்தை நினைவுப் பேருரை என்ற பெயரில் ஆற்றியிருக்கிறார்.

அன்னார் 'ராம்' அப்படி என்னதான் அந்த உரையில் ஆற்றியிருக்கிறார் எனப் பார்த்தால் இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வேயை இதய சுத்தியுடன் செயற்படுமாறு அழைப்புவிடுகிறார். அதெல்லாம் சரி, இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பிற்கு முன்னர் இந்தியா பங்கேற்றதும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு கடந்தகால ஒரு வரலாறும் உண்டு. இந்த வரலாற்றில் இந்தியா இதய சுத்தியுடன் தான் செயற்பட்டதாக மிஸ்ரர் ராம் அவர்கள் கருதுகிறாரா?

சிலவேளை இதய சுத்தியுடன் செயற்பட வேண்டுமென ராம் கருதுவது இந்தியாவின் கடந்தகால பாதையில் நோர்வே நடைபோட வேண்டும் என்பதையா?

இன்னுமொரு வகையில் நோர்வே சமாதான முயற்சிகளில் இலங்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது இலங்கையோடு இந்தியா செய்ய முயலும் பாதுகாப்பு உடன்படிக்கை நோர்வேயின் முயற்சிக்கு குந்தகத்தை ஏற்படுத்தாதா?

யாருக்கு யார் ஆலோசனை கூறுவது என்ற வரையறையே மாறிப்போய்விட்டது. இதைத்தான் சொல்வது 'சாத்தான் வேதம் ஓதுகிறது' என.

ஐயா ராம் அவர்களே இந்தியா அஞ்சுவதாகக் கருதி நீங்கள் கூறுவது என்ன?

வடகிழக்கில் ஒரு தனித்தமிழ் நாடு, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைக் கோருவது, இந்தப்பிராந்தியத்தில் மூன்றாவது ஒரு கடற்படையாக கடற்புலிகள் இருப்பது இந்தியாவுக்கு ஏற்புடையதல்ல என கூறியிருக்கிறீர்களே.

மேற்குறிப்பிட்டவையோ தமிழ் மக்களின் போராட்டமோ வளர்ச்சியோ இந்தியா விரும்புவதை நினைவு செய்வதற்கல்ல தமிழ் மக்களுக்கு எது தேவையோ அவையே இவை.

இன்னொரு இனத்தின் அபிலாசைகள் உங்களின் ஆசைகளை எப்படி நிறைவு செய்ய முடியுமென நீங்கள் கருதலாம்

ஐயா ராம் அவர்களே இனியாவது காலத்தின் திசையில் நின்று நிலைமைகளை மதிப்பீடு செய்யுங்கள். இதுவே உங்களுக்கும் எங்களுக்கும் நன்மை பயக்கும்.

**செங்குட்டுவன்**

# விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்த கடமையுணர்வாளன்

**இ.கபிலன்**



**தாயக மண்ணில் நிலைகொண்டிருந்த இந்தியத் துருப்புக்கள் அகல இராணுவ நெருக்கடிகளும் சில மாதங்கள் தணிந்து இருந்தன. மீண்டும் சிங்களத் துருப்புக்களுடன் மோதல்கள் ஆரம்பமாகி சில மாதங்களுக்குப் பின் அண்ணன் தீவிரமாக தேடப்படும் ஒருவரானார். அண்ணன் மனைவி, பிள்ளைகளை பிரிந்து போராளிகளோடு இணைந்து தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் அந்நாட்களை நன்னி கன்னாக் காட்டுப் பகுதிக்குள்ளே கழிக்கவேண்டியிருந்தது.**

மகாவலி கங்கை நதி இரு ஆறு வழியாக துறைமுகக் கடலில் சங்கமமாக, இயற்கை எழில் கொஞ்சும் அழகிய சிறு தீவாக இறால்குழிக்கிராமம் காட்சியளிக்கும்.

இறால்குழி மாரி காலங்களில் நதி பொங்கி வழிய ஆறுகளில் நீர் பாயும், கோடை காலங்களில் ஆறுகளிலுள்ள நீரை துலாக்கள் அள்ளி இறைக்க வாய்க்கால்களில் நீர் துள்ளிக் குதித்து ஓடும்.

வாய்க்கால்கள் வழியாக வரும் நீர் பயிர்களை குளிர்மையாக்க, பயிர்கள் செழிப்புற்று உயர, ஆற்றோரங்கள் பசுஞ்சோலையாக கண்கொள்ளாக் காட்சி தரும்.

இத்தகைய இயற்கை சிறப்புக்களோடு ஊர் மக்கள் வாழ்வு பின்னிப் பிணைந்து இருந்தது. இம் மக்களது வீடுகளில் ஏழ்மைத்தனம் இருந்த போதிலும் அவர்களின் மனங்களில் ஏழ்மை இருந்ததில்லை.

இவ்வூரில் சிவபால அண்ணன் தன் பிரியமுள்ள மனைவி, மூன்று பிள்ளைகளோடு மனம் பூரிக்க வாழ்ந்தார். அவரின் பொதுத் தொண்டும், பொது ஆர்வமும் மக்கள் மனங்களில் மதிப்புக்குரிய ஒருவராக இடம்பெறச் செய்தது.

அண்ணனை எப்போதும் இன்முறுவல் பூத்த முகத்தோடு காணலாம். அவரின் அருமையான உள்ளமும், தென்புள்ள தேகமும், மனச் சக்தியும் அவரை உயர்ந்த பண்புள்ள மனிதராகக் காட்டியது.

அவரது ஊர் மக்கள் எவரது ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் உட்படாமல் சுதந்திரமாக வாழ்ந்தனர். இனக்கலவரம் தலைவிரித்தாடிய போதும் ஊர் எந்தொரு பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. ஆனாலும் அது அண்ணனின் மனதில் வடுவை ஏற்படுத்தியது.

இனக்கலவரங்களின் கோரத் தன்மை தணிந்து அமைதியான போதும் அண்ணனின் மனம் அமைதி அடையவில்லை. அவரின் மனதில் தமிழ்த்தேசிய உணர்வலைகள் எழுந்து ஆர்ப்பரித்துக்கொண்டே இருந்தன.

அந்த அலைகளின் அதிர்வொலிகள் புலிப்போராளிகளின் காதில் விழ, அண்ணன் 85இல் புலிகள் இயக்கத்திற்காக தன் நாளாந்த உழைப்பை கொடுக்க ஆரம்பித்தார். அக்காலப் பகுதியில் போராளிகளும் தம் பணிகளை முடுக்கிவிட்டிருந்தார்கள்.

அண்ணனின் வீட்டிற்கு மூத்த தளபதி கணேஸ் வந்து, உண்டு, உறவாடிப் போன சில வாரங்களின் பின் கேதீஸ், தீபன், ரவி,மூர்த்தி ஆகிய போராளிகள் அண்ணனின் வீட்டிற்கு அண்மையில் முகாமிட்டனர். அதிலிருந்து அண்ணனது வீடும், கடையும் போராளிகளுக்கு முழுமையாக சேவகம் புரியத் தொடங்கின.

போராளிகளின் நீண்ட தூரப் பயணக் களைப்பை தீர்த்து உடற்தென்பைக் கொடுப்பதிலும், உணவுப் பொருட்கள் உதவியாக வழங்குவதிலும், புதிய ஆட்களின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், நெருக்கடி வரும் காலங்களில் பாதுகாப்பாக இருக்க மறைப்பிடங்களை தெரிவு செய்வதுமாக அவரின் பணிகள் அமைந்திருந்தன.

அவரின் வீட்டிற்கு வரும் போராளிகளுக்கு முதலில் தின்பண்டங்களை பரிமாறி, அவர்களின் களைப்பை ஆற்றிய பின்பே கதைக்க ஆரம்பிக்கும் பண்பு அவரிடம் இருந்தது.

போராளிகளின் பணிகள் விரிந்து வரும் வேளையில் சிங்களப் படையாட்களின் விழிகளும் ஊரின் மீது விரிந்தது.

சிங்களப் படையாட்கள் புலிகளை வேட்டையாட ஊருக்குள் நுழைந்தார்கள். அண்ணனின் வீட்டிற்கு முன் கேட்ட தொடர் துப்பாக்கி வேட்டுக்களினால் அதிர்ந்தது ஊர். அண்ணனோ போராளிகளின் இருப்பிடம் நோக்கியே ஓடினார்.

அங்கே போராளி கேதீஸ் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். ஒரு போராளி வீரச் சாவைத் தழுவி இருக்கும் நிகழ்வை முதன் முதலில் நேரில் சந்தித்ததினால் அண்ணனின் கண்களில் துயரம் அதிகம் தெரிந்தது.

அண்ணன் தன் மனோதைரியத்தை மீளவும் வரவழைத்து சிங்களப் படையாட்களின் நகர்வுகள் பற்றிய தகவல்களை அறிந்து போராளிகளிடம் குசுகுசுப்பார். அவர் தன் விழிகளை அகல விரித்து ஊரை கண்காணிக்கும் தொழிலிலும் ஈடுபடலானார். இக்காலகட்டத்தில் மிக இறுக்கமான பொருட்தடை நடைமுறைக்கு வந்தது. அத்தோடு சிங்களவர்களின் இரத்தவெறி வேட்டைக்கும், அட்டகாசத்திற்கும் ஊர் இலக்காகியது.

அவர் அல்லலுற்ற இந்நெருக்கடியான காலங்களில் அபரிதமான நம்பிக்கையோடும், துணிவோடும் செயலாற்றி போராளிகளை துன்ப நிலைக்குள்ளிருந்து விடுபட துணை நின்றார்.

அண்ணனின் வீடு பொருட்களை விநியோகிக்கும் மையமாக சுறு சுறுப்பாக இயங்கும். போராளிகளின் 3ஆம் கொலனி முகாம், சாவாறு முகாம் இறால்குழி முகாம் என அனைத்திற்கும் பொருட்களை வழங்கியது. இச்சேவைகளை படுசிக்கலான நிலையில் உயிரை பணயம் வைத்தே அவரும், அவரது குடும்பமும் செய்தனர்.

காலச் சக்கரம் கடகடவென நகர, இந்தியப்படைகளும் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. தமிழர்கள் தங்களுக்கு விடிவுகாலம் பிறந்து விட்டதாகக் கருதினர். ஆனால் அந்த நம்பிக்கைகள் சில மாதங்களுக்குள்ளேயே தகர்ந்து போயின. தமிழர்கள் சுதந்திரமாக பேசக்கூட திராணியற்று அழுது வாழும் நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

அண்ணனின் ஊரிலும் இந்தியப் படையால் தலைதூக்கி நின்ற பிரச்சினைகள் ஏராளம். இதனால் ஊர் நெருக்கடியின் உச்ச எல்லைக்கே சென்றது. போராளிகளும் தம் பகிரங்க நடமாட்டங்களை மட்டுப்படுத்தினர். ஆனால் அண்ணனும், அவரது குடும்பமும் தமிழின நன்மைக்காக தூங்காது பல இரவுகளைக் கழித்தனர்.

அவர் போராளிகளான ரமேஸ், றொபின், சிவநேசன், சஞ்சய், றோய் ஆகியோருக்கு நன்னிகன்னாக் காட்டுப் பகுதிக்குள் பாதுகாப்பான மறைப்பிடத்தினை ஒழுங்கு செய்து கொடுத்து அவர்களுக்கு தேவையான அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுபவராக இயங்கலானார். இவர் இப்படியான கால கட்டத்தில் ஆயுதங்களை மறைப்பிடம் ஒன்றில் வைத்து தேவை ஏற்படும் போது மீள எடுத்துக்கொடுக்கும் இராணுவப் பணிகளையும் செய்தார்.

அண்ணன் போராளிகள் ஆபத்துக்களை எதிர்கொள்ளாது இருக்கக்கூடிய வகையில் அபாய அறிவிப்பை வெளிப்படுத்தும் ஏற்பாட்டைச் செய்து இருந்தார். இந்தியப் படை ஊருக்குள் தாக்குதலுக்காகக் காத்திருக்கும் தகவலை 'சொப்பிங் பை' ஒன்றை தடியில் கட்டித் தொங்க விட்டு எச்சரிக்கை அறிவிப்பை செய்து வரலானார்.

அவர் இந்தியப் படையினர் படகுகள் மூலம் வந்து செல்லும் இராணுவச் செயற்பாடுகளை வேவுபார்த்து போராளிகளுக்கு வேவுத் தகவல்களை பரிமாறினார். அதனை அடுத்து தாக்குதல் மேற்கொள்ளச் சென்ற போராளிகளுடன் தானும் ஒருவராகச்செல்வார். இவர் இவ்வாறு இருக்கும் போது இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

அண்ணன் கைதியாக இருந்த போதிலும்கூட போராளிகள் மறைவிடம், ஆயுத மறைவிடம், போராளிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவு, மறைப்பு தளம் போன்ற எந்தவொரு தகவலையும் இந்தியப்படைக்கு விளங்காது பாதுகாத்தார். அவரின் அந்த அளவுக்கதிகமான மனோதைரியத்தால் விடுதலையும் ஆனார்.

தாயக மண்ணில் நிலைபெற்றிருந்த இந்தியத் துருப்புக்கள் அகல இராணுவ நெருக்கடிகளும் சில மாதங்கள் தணிந்து இருந்தன. சிங்களத் துருப்புக்களுடன் மோதல்கள் ஆரம்பமாகி சில மாதங்களுக்குப் பின் அண்ணன் தீவிரமாக தேடப்படும் ஒருவரானார்.

அண்ணன் மனைவி, பிள்ளைகளை பிரிந்து போராளிகளோடு இணைந்து தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் அந்நாட்களை நன்னி கன்னாக் காட்டுப் பகுதிக்குள்ளே கழிக்கவேண்டியிருந்தது.

இக்காலங்களில் முழு நிலாவின் ஒளி மணலில் படும்படி வெண்ணொளியில் அசையும் போராளிகள் நடுவே ஊர் உறங்கிக்கொண்டிருக்கும். ஆனால் ஊர் உறக்கத்திலும் அண்ணன் வீடு உறங்குவதில்லை.

அண்ணன் என்றும் போலவே காலை விடிந்ததும் எழுந்தார். அன்றைய காலைப்பொழுது மழைத்தூறல் சிலுசிலுவென்று தூற, ஊர் மண் வாசனையுடன் கூடிய தென்றல் குளிர்மை அவரின் உடம்பை தழுவ, ஏனோ அவரின்விழிகள் ஈரமாகின. அவரின் வீட்டுக் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தவனைக்கண்ட உளவுக்காரன்...

"என்ன அண்ணே இன்று எந்தவொரு முன்னெச்சரிக்கையும் இல்லாமல் வீட்டில் நிற்கிறீர்கள்" என்ற கேள்வியைக் கேட்டான்.

அவர் "இன்று என் மனைவி, பிள்ளைகளுடன் ஒன்றாக இணைந்து சாப்பிடவும், போராளிகளுக்கு சுவையான உணவு சமைத்து எடுத்துக்கொண்டுபோகவும் வந்தேன்" எனப்பதில் கொடுத்தார். அந்தக் கணமே சரமாரியான துப்பாக்கிச்சனனங்களின் சத்தங்கள் ஊரையே உறையவைத்தன.

அண்ணன் குளித்தபடியே இரத்த வெள்ளத்தில் கிடக்க, அவரின் மூத்தமகன் மோகனும் துப்பாக்கிச்சன்னங்களால் சிதைக்கப்பட்டுக் கிடந்தான். இருவரும் ஒரே சமயத்தில் சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

அவரின் பிரியமான மனைவி, பிள்ளைகள் அழுது வெடிக்க அவர்களின் வார்த்தை துண்டு துண்டாக வந்து விழ, அண்ணனின் உறவுகள், ஊர் மக்கள் அங்கு கூடிய போது அனைவரையும் துயர நிலைக்கு இட்டுச்சென்றது.

அவர் மனைவி, பிள்ளைகளோடு உண்டு உறங்கி மகிழ்ந்து வாழ்ந்த அந்தவீடு சோபை இழந்து துயரத்தில் மூழ்கியது.

அவரின் பாச அரவணைப்பினுள் பின்னிப்பிணைந்து இருந்த போராளிகள் தங்கள் சோக உணர்வுகளை மறைக்க முயன்ற போதும் தோற்றுப்போனது அவர்கள் முகம். ஒருபுறம் வேதனையும், இன்னொருபுறம் அவரின் நினைவுகளையும் மீட்டது.

அண்ணன் தூங்காத நாட்கள் பல. அனுபவித்த கஷ்டங்கள், துன்பங்கள் ஏராளம். அவரது அயராத உழைப்பின் மூலம் விடுதலைப் போருக்கே உரமானார்.

அண்ணன் தனக்கென வாழாமல் தமிழினத்தின் விடிவிற்காகவே உழைத்து வாழ்ந்தார். தமிழ் மக்களின் அளப்பெரிய நன்மைக்காக தன்னையும், தன் குடும்பத்தையும் அர்ப்பணித்தார்.

அவர் மறைந்தபோதும், அவர் செய்த அளப்பெரிய அருந்தொண்டுகள் வரலாற்றில் என்றுமே மறையாது இருக்கும். வரலாறும் அத்தகைய உயர்ந்த மனிதர்களை மறப்பதில்லை.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 29 . 10 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# காலம் நிர்ணயிக்கும்...!

சமாதான முயற்சியைத் தொடர்வதற்கும், பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கு ஆதரவும் அனுசரணையும் நிறையவே உண்டு.

ஆனால் அவரின் சிங்கள பௌத்த மேலாண்மை வாத எண்ணச்சிறைக்குள்ளிருந்து வெளிவரும் துணிவில்லாத மனநிலையால் சமாதான முயற்சி தொடர்ந்தும் இழுபட்டுச்செல்கிறது.

இலங்கையின் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண விரும்புகிற போதும் புலிகள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருகிறார்களில்லையென்று உலகை ஒரு மூடிய குவளைக்குள் வைத்திருந்தவருக்கு புலிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு சந்தியை சுட்டி நிற்கின்றனர்.

புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை எனும் இந்த சந்தி ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக இலங்கைத்தீவில் முரண்பட்டு நிற்கும் ஒரு இனத்தின் ஆத்மார்த்தமான அபிலாசைகளைக் கொண்ட ஒரு வரைவாக இருக்கும் என்பதே இன்றைய சிங்கள தேசத்தின் அச்சமாக இருக்கிறது.

ஆனாலும் இந்த அச்சத்திலிருந்து விடுபட்டு ஒரு தீர்வை எட்டக் கூடிய தீர்க்கமான ஒரு வரலாற்று வாய்ப்பு சிங்கள தேசத்திற்குக் கிடைத்திருக்கிறது.

இந்த வாய்ப்பை இலங்கைத்தீவின் நலன் சார்ந்து சிந்தித்து நாட்டின் தலைவி என்ற வகையில் அவர் முடிவை எட்டுவாராக இருந்தால் இலங்கைத் தீவு ஒரு அமைதிப் பூங்காவாக மாறக்கூடிய வாய்ப்பு நிறையவே உண்டு.

இதற்கு இதய சுத்தியோடு புலிகளோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட சனாதிபதி சந்திரிகா துணிய வேண்டும்.

சமாதான முயற்சி தொடர்பாக சனாதிபதி துணிகரமாக எடுக்கும் முயற்சிக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தனது ஆதரவை வழங்குவதாக எப்போதோ அறிவித்துவிட்டது.

இதனை விட சனாதிபதிக்கு நெருங்கிவரும் தனது சனாதிபதி பதவிக்கான ஆயுள் முடிவில் அவர் இலங்கை வரலாற்றில் சாதிக்க வேண்டிய மக்கள் பிரச்சினையாக இந்த விவகாரம் இருக்கிறது.

இதற்கு சனாதிபதி சந்திரிகா துணிவாரா? தற்போது அண்மையில் அவர் விடுத்திருக்கும் அறிவிப்பானது ஒரு உடன்பாடே அல்லாத ஒரு கூட்டு அறிக்கையை உடன்பாடுபோல புலிகள் ஏற்று அதனை பகிரங்க அறிவித்தல் மூலமாக வெளிப்படுத்தி சமாதான முயற்சியில் பங்கேற்பதாக இருந்தால் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடக்கத் தான் தயார் என அறிவித்திருப்பதானது சனாதிபதி சந்திரிகாவின் சமாதான முயற்சி தொடர்பான போக்கைத் தெளிவாகவே வெளிப்படுத்துகிறது.

இதயசுத்தியோடு வரலாற்றுப் பின்னணியில் காலத்தை மதிப்பீடு செய்து அணுகவேண்டிய சமாதான முயற்சி தொடர்பான விவகாரத்தை இப்போதும் சூழ்ச்சி, பொறி, வஞ்சனை என துர்க்குறி எண்ணங்களோடு சனாதிபதி சந்திரிகா இப்போதும் அணுகவே முற்படுகிறார்.

வரலாற்றில், தலைவர்கள், அவர்கள் புரிந்த நல்ல மகத்தான காரியங்களுக்காக மறக்கப்படுவதில்லை. அதேநேரம் அவர்கள் வரலாற்றில் இழைத்த துரோகத்தனங்களாலும் தவறுகளாலும் மறக்கப்படுவதில்லை.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா வரலாற்றில் மறக்கப்படாதவராக இருப்பார். ஆனால் அவர் புரிந்த எந்த சாதனைக்காக என்பதை காலம் விரைவிலேயே நிர்ணயிக்கும்.

# பயணங்கள் எதனை சாதிக்கும்...?





புலிகளின்உயர்மட்ட அரசியல் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த பின்னணியிலும்.

சனாதிபதி சந்திரிகா இந்த வாரம் சமாதான முயற்சி தொடர்பாக ஒரு அறிவித்தலை விடுக்கவுள்ளார் என ஊடகங்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற நிலையில் இலங்கைக்கு சமாதான முயற்சியில் முக்கிய பங்காற்றும் நாடுகளின் இராஜதந்திரிகளின் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலிகளின் அரசியல் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்ட கையோடு சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்து சென்றிருந்தார்.

இப்போது யப்பானின் விசேட தூதுவர் யசூசி அஹாசி இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

இவரைத் தொடர்ந்து நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சனும் அவரைத் தொடர்ந்து அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ்சும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க புலிகள் தமது ஒரே நிலைப்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகின்றனர். ஆனால் அரசை பொறுத்த வரையில் முடிவெதனையும் எடுக்காமலும் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய ஏது நிலைக்கு முரணான வழியில் தொடர்ந்தும் செயற்பட முனைகிறது.

அரசு சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் கூட பாதுகாப்புச் செலவாக இலங்கையில் என்றுமில்லாத ஒரு தொகையாக எழுபத்தாறு பில்லியன் ஒதுக்கியுள்ளது.

இது அரசு நாட்டின் பாதுகாப்புக்கு என ஒதுக்கப்படும் வழமையான நிதி என்ற வகையில் புறந்தள்ளிவிட முடியாது.

காரணம் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்குமத்தியிலும் அரசு இவ்வளவு தொகையான நிதி ஒதுக்குவதன் மூலம் அரசு இராணுவத்தின் வலிமையை அதிகரிப்பதில் முனைப்பாக இருக்கிறது.

இது சமாதானத்தின் மீது அரசு கொண்டிருக்கும் நம்பிக்கையில்லாத்தன்மையை ஒரு புறம் காட்டுகிறபோதும் தமிழ்மக்களைப் பொறுத்தவரை சமாதான முயற்சியானது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தோற்றுவிக்கப்படும் ஒரு அபாயமாக இருக்குமோ என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கவே செய்யும்.

இந்த நிலையில் தமிழீழ மாவீரர் நாள் நெருங்கிவருகிறது. இந்த வருடமாவீரர் நாள் செய்தியில் புலிகள் இயக்க சமாதான முயற்சிகள் தோற்றுவித்துள்ள நம்பிக்கையீனங்களை வெளிப்படுத்தலாம். என்றவகையிலும் இராஜதந்திரிகளின் வருகை அமையலாம் என ஊகிக்கப்படுகிறது.

இவர்களின் இந்தப் பயணத்தின் போதும் அரசையும் புலிகளையும் சமாதான முயற்சி தொடர்பான நடவடிக்கைகளுக்கு விரைந்த செயற்படுமாறு கோரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அறிக்கைகள் மூலமாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சர்வதேச நாடுகள் இலங்கை அரசை காத்திரமான வகையில் பேச்சை ஆரம்பிப்பதற்கு வரும்வகையில் இனி எத்தகைய முஸ்தீபுகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இந்த இராஜதந்திரிகளின் இலங்கைக்கான பயணங்களானது வழமையான அரசமுறை பயணங்களாக மட்டும் அமையாது. காத்திரமான எந்த பலனையும் ஏற்படுத்தாமல் மரபு சார் அரசுகளுக்கிடையில் இருக்கக்கூடிய ஒற்றுமையின் அடிப்படையில்

*(18 பக்கம் பார்க்க)*



அண்மை நாட்களாக இந்திய அரசு இலங்கை மீதான செல்வாக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது நாம் அறிந்த விடயமே. இந்தியா இலங்கைக்கு இராணுவ நலன் சார்ந்த உதவிகளை வழங்கி வருவதுடன் தொடர்ந்தும் வழங்கவும் உறுதி பூண்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக இலங்கை- இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாக செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. இவ்வொப்பந்தம் தற்போது நிலவும் சமாதான முன்னெடுப்புகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியதாக உள்ளது என பல அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இந்நிலையில் இந்தியாவின் இலங்கை மீதான அக்கறையில் ஏதொவொரு வகையில் தமிழர்களைப்

# தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் பங்கு...?

## தமிழ் பேசும் மக்கள் விரும்புவது....

பாதிக்கும் திட்டம் இருக்கும் என தமிழ் மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை இருந்து வருகிறது. இந்நிலையில் இலங்கை, இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் சமாதான முயற்சிகளைப் பாதிக்குமா எனவும். தமிழ் பேசும் மக்களாகிய நாம் இந்திய அரசிடம் இன்று எதிர்பார்ப்பது என்ன என்ற கேள்விகளை பலதரப்பட்ட மக்களிடம் கேட்டோம். அவர்களின் கருத்துக்கள் பின்வருமாறு;



*வி. அருளம்பலம், யாழ்ப்பாணம்.*

இந்தியா இலங்கையில் எதைச் செய்தாலும் அது தமிழ் மக்களுக்கு எதிரானதாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன். ஏனெனில் முன்னைய காலங்களில் இந்தியா அமைதிப்படை என இங்கே வந்து எங்களுக்கு துரோகம் செய்தது. அத்துடன் தற்போது இலங்கையில் சமாதான நடவடிக்கைகளை குழப்பும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறது. உண்மையிலேயே இந்தியா நினைத்தால் இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரலாம். அது தன்னுடைய நாட்டுக்கு ஆபத்து என்று சும்மா கதைத்து விட்டு பிரச்சினையை பெரிதாக்கிக் கொண்டிருக்கிறது. நாங்கள் இந்தியா விடம் எதிர்பார்ப்பது என்னவெனில் எங்களின் பிரச்சினையை ஆராய்ந்து இந்த இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளிடம் வழங்க இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதுதான்.



*முகமட் றாபி-கண்டி*

''இலங்கையில் தற்போது மேற்கொள்ளும் சமாதான முயற்சியை பயங்கரமாக பாதிக்கும் தன்மை கொண்டதுதான் இந்த இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம். அத்துடன் இந்தியா இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என நினைத்தால் குறுகிய நாட்களில் சமாதானத்தை ஏற்படுத்தும். ஆனால் அது தனது நாட்டின் நலன் சார்ந்த விடயங்களை கவனத்தில் கொண்டு இலங்கையின் சமாதான முயற்சிக்கு பங்கம் விளைவிக்க முற்படுகிறது என்றுதான் கூறவேண்டும். இன்றைய பத்திரிகையில்கூட வாசித்தேன். இந்தியா இலங்கையில் ஒரு விமான நிலையத்தை புனரமைப்புச் செய்யவுள்ளதாக. இது இந்தியா ஆசிய வல்லரசு நிலையை உயர்த்தவே இந்நடவடிக்கையை செய்கின்றது. நாங்கள் இந்தியாவிடம் இருந்து எதிர்பார்ப்பது இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா மனப்பூர்வமாகச் செயற்பட வேண்டும் என்பதே



*கஜேந்திரன், மாங்குளம்.*

இந்தியாவும் இலங்கையும் தற்போது செய்யவுள்ள இந்த ஒப்பந்தம் நிச்சயமாக சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் இந்தியா இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என விரும்பினால், அது இலங்கையை எவ்வாறு ஒரு அரசென கருதி செயற்படுகிறதோ அதே போன்றே விடுதலைப்புலிகளையும் ஒரு அரசுக்கு சமமானவர்கள் எனக்கருதி விடு தலைப்புலிகளின் சமாதான குழுவுடன் கலந்தாலோசித்து சமாதானத்தை நல்ல முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டும் என கருதுகின்றோம்.



*கமூல் கொழும்பு*

"இந்தியா தமிழ் மக்களின் பிரச்சினையை மேலும் மேலும் பெரிதாக்காமல் முன்பு நடந்த கசப்பான சம்பவங்களை மறந்து.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுற்படவேண்டும். இதற்கு இந்திய அரசியல் தலைவர்களின் மனம் மாறவேண்டும். இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பாரிய சக்தியாக இந்தியா உள்ளது.

### அருள்

இலங்கையின் அரசபிரதிநிதிகளிடம் சமாதான முயற்சியில் கலந்தாலோசிப்பது போல் விடுதலைப் புலிகளுடனும் அது ஆலோசிக்க வேண்டும். அதை விடுத்து இந்தியா இலங்கைப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளிடம் ஒரு இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால் அது இந்தியாவின் தமிழ் மாநிலத்துக்கு அச்சுறுத்தலாக அதாவது இந்தியாவில் இருந்து தமிழ் மாநிலம் பிரிந்து தனிநாடாக மாறும் எனும் கற்பனையில் இலங்கைப் பிரச்சினையை தீர்வுக்குக் கொண்டு வர இந்தியா முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. இந்தக் கொள்கையில் இருந்து இந்தியா மாறி தமிழ்மக்களின் உண்மை நிலையைப் புரிந்து அதற்கேற்ப செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பம்.''



*சி. கண்ணன் - திருகோணமலை*

''ஏற்கனவே இந்தியா,வின் தவறான அணுகுமுறையால் தமிழ் மக்களாகிய நாம் பெரிதும் துன்பப்பட்டோம். எனவே இந்தியா இராணுவ ரீதியில் இலங்கைக்கு எந்த உதவிகளையும் வழங்கக்கூடாது. அத்துடன் இராணுவம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தலையிடவும் கூடாது. இந்தியா இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் சமாதான முயற்சியை முன்னெடுக்க ஏதாவது உதவி செய்யும் எனில் நாம் வரவேற் போம். அதைவிடுத்து இராணுவ ரீதியில் தலையிடுவதால் இலங்கை இராணுவத்தின் கையோங்கும். இதனால் இலங்கை அரசு சமாதானத்தை விட யுத்தத்திலேயே அதிக ஆர்வம் கொள்ளும். இதனால் பாதிக்கப்படப் போவது தமிழ் மக்களாகிய நாங்களே. இதனை இந்தியா உணர்ந்து செயற்படவேண்டும்.''



*வனஜா, திருமுறிகண்டி.*

''இந்தியா ஏற்கனவே இப்பகுதிக்கு வந்து, எமக்கு இழைத்த துன்பங்கள் சொல்லில் வடிக்க முடியாதவை. இந்நிலையில் மீளவும் இந்தியா இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்குவது நாம் விரும்பாத செயல். ஏனெனில் இந்தியா வழங்குகின்ற ஒவ்வொரு இராணுவ ரீதியிலான உதவிகளும் தமிழ் மக்களை அழிக்க இலங்கை அரசு பயன்படுத்தும். இதனை இந்தியா நன்குணர்த்தும். மேலும் மேலும் இலங்கைக்கு உதவிகள் வழங்குவது பொருத்தமானதல்ல. அந்த வகையில் தற்போது இந்தியாவுடன் இலங்கை செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு ஒப்பந்தம் என்றே கூறவேண்டும். இந்தியா ஏற்கனவே விடுதலைப் புலிகளை ஆதரித்து பயிற்சி வழங்கி வளர்த்து வந்தது. அதன் பின்னர் அதே இந்தியா விடுதலைப்புலிகளை அழிக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கியது. இதனால் பல போராளிகளும் மக்களும் கொல்லப்பட்டனர். எனவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீது இந்தியா உண்மையான நியாயமான பார்வைக்கூடாகப்பார்த்து தமிழ் மக்களின் சார்பாக இருந்து இந்த சமாதான முயற்சிகளை நல்ல முறையில் முன்னெடுத்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வரவேண்டும். இதுதான் இந்தியாவிடம் இருந்து நாம் எதிர்பார்ப்பது.''



*ப. லலிதாம்பாள், கிளிநொச்சி*

''இந்திய இராணுவம் ஏற்கனவே 1987 ஆம் ஆண்டளவில் இங்கே வந்தது. வரும்போது நாம் நினைத்தது எங்களுக்குத் தனிநாடு தரப்போகிறார்கள். எங்களின் பிரச்சினைக்கு ஒரு முடிவு வரப்போகுது என்று நினைத்தோம்.

அவர்கள் வரும்போது எங்களுக்கு நல்ல சந்தோசம். கை காட்டி வரவேற்றோம். ஆனால் இங்கே வந்ததன் பின்னர் செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல. திலீபன் உண்ணாவிரதம் இருந்தும் அவர்களின் கோரிக்கைகளை என்னவென்றும் கேட்கவில்லை. அத்தோடு உண்ணாவிரதம் இருந்த திலீபனைப் பார்க்கப் போன மக்களைக் கூட அடித்து விரட்டினார்கள். வைத்தியசாலையில் கூட எத்தனையோ பேரை சுட்டுக்கொன்றார்கள். இப்பவும் இலங்கை இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நினைத்தால் அது நிராசையாகும். ஆனால் இலங்கை அரசு இந்தியாவிடம் கேட்கின்ற உதவிகளையும் ஆயுதங்களையும் வழங்காமல் நடைபெறும் சமாதான முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் செயற்படவேண்டும். இந்த இனப்பிரச்சினையை ஒரு தீர்வுக்குக் கொண்டுவர இந்தியா பாடுபடவேண்டும் என்பது தான் எங்களின் விருப்பம்.''

மேற்படி தமிழ் பேசும் மக்களின் கருத்துக்கள் இந்திய தமிழ் மக்களின் விடயத்தில் பாராமுகப்போக்கை கடைப்பிடிப்பதாகவும், தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு துணை போவதாகவும் கருதுகின்றனர்.

அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் இங்கையில் கூடுதலாக ஆதிக்கம் செலுத்துவது யார் என்ற போட்டியே இப்போது நிலவுகிறது. இதனடிப்படையில் இந்தியாவின் அண்மை நாட்களின் செயற்பாடுகள் இலங்கையை இராணுவ ரீதியில் பலப்படுத்த எத்தனிக் கிறது எனலாம். இது தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முன்னெடுப்புக்களில் இருந்து இலங்கை அரசு விலகி யுத்த களத்தை நோக்கி செல்லக்கூடிய ஆபத்தான அறிகுறியே! இவ் விடயத்தை இந்தியா ஆழமாக உணர்ந்து சமாதான முயற்சிகளில் நடுநிலையான செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என்பதே தமிழ்மக்களின் கருத்தாகும்.

விடுதலைப் புலிகளை இன்று சர்வதேசமே ஒட்டு மொத்த தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு ஒரு நாட்டின் பிரதிநிகளுக்கு வழங்கும் முக்கியத்துவம் கொடுத்து வரவேற்று வருகிறது. இந்நிலையில் இந்தியா இன்னும் விடுதலைப் புலிகளை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையில் இருந்து விடுபட்டு ஒரு இன அழிப்பிற்கு துணைபோவதை தவிர்த்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையின்பால் நின்று இப்பிரச்சினையைத் தீர்க்க தளைப்படவேண்டும் என்பதே தமிழ் பேசும் மக்களின் அவா. அத்துடன் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு முக்கிய சக்தியாக இந்தியா இருந்து வருகிறது. எனவே இந்தியாவுக்கும் ஈழத்தமிழ் மக்களுக்குமிடையில் காலாதி காலமாக பேணப்பட்டுவந்த உறவில் ஏற்படுகின்ற மறுமலர்ச்சியே ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண வழி சமைக்கும் என்பது தமிழ் பேசும் மக்களின் கருத்தாகவுள்ளது.

# சபாநாயகரை மாற்றி...



சிறிலங்கா நாடாளுமன்றத்தின் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் ஆளும் கட்சி ஈடுபட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகிவருகின்றன. சபாநாயகர் பாரபட்சமான முறையில் நடந்து கொள்வதையடுத்தே இவ்வாறான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எடுக்கும் முயற்சிக்குக்காரணம் எனக்கூறப்பட்டுள்ளபோதும் அரசியலமைப்பை மாற்றியமைக்கும் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் முக்கிய நோக்கத்தின் ஓர் அங்கம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது சனாதிபதி தனது அரசியல் எதிர்காலத்தை தக்கவைத்துக்கொள்ள அரசியலமைப்பில் முக்கிய மாற்றங்களை மேற்கொள்ளும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். தற்போதைய அரசியலமைப்பின்படி இவ்வாறாக திருத்தம் செய்ய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. ஆனால் சாதாரண பெரும்பான்மையைக்கூட ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியால் இப்பொழுது தான் கொண்டுவர முடிந்திருக்கிறது.

எனவே தற்போதைய நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு மன்றமாகமாற்றி அரசியலமைப்புமாற்றங்குறித்த தீர்மானத்தை நிறைவேற்றியபின் அதனை மக்கள் கருத்துக் கணிப்புக்கு விட்டு தான் விரும்பும் அரசியலமைப்பொன்றை உருவாக்க அவர் விரும்புகிறார்.

இதற்கு இப்பொழுதுள்ள முட்டுக்கட்டை ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த லொக்கு பண்டார சபாநாயகராகப் பணிபுரிவதாகும். சிறுபான்மை அரசாங்கமாக முதலாவது நாடாளுமன்றத்தில் நடத்திய தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து லொக்குபண்டாரவை ஆதரித்தமையால் அவர் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டார்.

இப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்த உறுப்பினர்கள் சிலரை தம்வசம் ஈர்க்க முடிந்துள்ளமையாலும் ஜாதிகஹெலஉறுமய பிரேரணைக்குத்தக்கவாறு தனது முடிவை மேற்கொள்ளும் நிலைப்பாட்டில் இருப்பதாலும் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணையைக் கொண்டுவந்து அவரைமாற்றிவிட அரசாங்கம் முயன்றுவருகிறது.

ஆனால் அது சாத்தியமாகுமா? என்பதும் இப்பொழுது சந்தேகமாகவுள்ளது. எதிர்க்கட்சி வரிசையிலிருந்து ஆளும் கட்சியை ஆதரிப்பதுடன் அரசாங்கத்தில் பங்காளியாக மாறியுள்ள இ.தொ.கா. சபாநாயகரை மாற்றும் விடயத்தில் ஆதரவளிக்கப் போவதில்லை என அறிவித்திருக்கிறது. அதேவேளை ஜாதிக ஹெலஉறுமயவும் சபாநாயகரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை எனக்கூறியிருக்கிறது.

இ.தொ.கா.வை பொறுத்தவரை அது ஐ.தே.க.வுடன் கூட்டிணைந்து போட்டியிட்டே நாடாளுமன்றத்துக்குத் தெரிவானது. ஆளும் கட்சியை அது ஆதரிக்கின்றபோதும் அதற்கான முடிவை கடும் தயக்கத்தின் பின்பே எடுத்தது. ஏனெனில் பலமற்ற - பல்வேறு முரண்பாடுகளுடன் கூடிய இரு கட்சிகளைக் கொண்ட அரசாங்கம் எவ்வளவு காலத்துக்கு நீடித்திருக்கக்கூடியது? என இ.தொ.கா.வுக்கு எழுந்த சந்தேகம் இரண்டாவதாக இ.தொ.கா.விற்கு விரோதமான கருத்துக்களைக்கொண்ட அத்துடன் சிறுபான்மைக்கட்சிகளை இணைத்து ஆட்சியமைப்பதை எதிர்க்கும் ஜே.வி.பி பலமான நிலையிலிருக்கும் அரசாங்கத்திற்குள் நுழைந்து செயற்பட முடியுமா? என்ற தயக்கம். மூன்றாவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிவடைந்தபின்பும் அரசாங்கத்தின் நிலை என்னவாகும்? என்கின்ற கேள்வி.

இவ்வாறு அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள சந்தேகத்தின் காரணமாக இ.தொ.கா. தயக்கம் காட்டியபோதும் இப்பொழுது அது இணைந்து செயற்பட முன்வந்திருக்கிறது.

ஆனால் ஐ.தே.க சற்றும் விரும்பாத அல்லது அதனைப் பாதிக்கக்கூடிய விடயங்களில் அரசாங்கத்தை இ.தொ.கா ஆதரிக்குமா? என்பது சந்தேகமே. ஏனெனில் இ.தொ.கா நீண்டகூட்டாளியாக ஐ.தே.க வையே கொண்டுள்ளது. அத்துடன் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவை ஆதரிக்கும் மனோநிலை இப்பொழுது மலையகமக்களிடம் இல்லை என்பதும் இ.தொ.கா. நன்கு உணர்ந்துள்ள விடயமாகும்.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா விரும்பும் அரசியலமைப்பு மாற்றத்தை ஐ.தே.க.விரும்பவில்லை என்பது ஒரு புறமிருக்க இ.தொ.கா. விரும்புமா என்பதும் கேள்விக்குரியதாகும். அதாவது இப்பொழுதுநடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறையை அதிலே சனாதிபதிக்குள்ள அதிகாரங்களை தமக்கு சனாதிபதிப்பதவி கிட்டாது என எண்ணுபவர்கள் மட்டுமே ஒழித்துக்கட்டவிரும்புகிறார்கள் இதற்கு எவருமே விதிவிலக்கல்ல. எனவே ஐ.தே.க. இப்பொழுது அதனை மாற்றியமைக்க விரும்பாது. அதேவேளை ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படும் இ.தொ.கா போன்ற கட்சிகளும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்கள் கிடைப்பதை விட சனாதிபதியென்ற தனியொருவரிடம் அதிகாரம் இருப்பதையே பெரிதும் விரும்புகின்றன. அதன் மூலம் அதிகாரம் கொண்ட சனாதிபதியுடன் பேசி தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும் என அவை நம்புகின்றன. எனவே சனாதிபதிவிரும்புவது போன்ற மாற்றத்தை இ.தொ.கா எவ்வளவுதூரம் விரும்பும் என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அடுத்ததாக சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஜாதிகஹெல உறுமயவின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஆளும் கட்சி இறங்கியிருக்கிறது. இதற்கு ஜாதிகஹெலஉறுமயவைச் சேர்ந்த ஒருவரை சபாநாயகராகவும் அது தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அவ்வாறாக சபாநாயகர் பதவிக்கு போட்டியிட ஜாதிகஹெலஉறுமய விருப்பம் கொண்டிருக்கவில்லை என தெரிகிறது. அதேவேளை அவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த ஒருவர் சபாநாய கரானால் அரசியலமைப்பு மாற்றத்திற்கு அது உடன்படுமா? என்ற கேள்வியும் எழுகின்றது. ஏனெனில் இப்பொழுது உள்ள தேர்தல் முறையை அதாவது விகிதாசாரப்பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை மாற்ற ஆளும்கட்சி முயல்கின்றது. ஐம்பது வீதநாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்தல் தொகுதி ரீதியாகவும் ஐம்பது வீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசார முறையிலும் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய வகையில் தேர்தல் முறையை மாற்ற அது திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

அவ்வாறான நிலை ஏற்படுமாயின் ஜாதிகஹெல உறுமய போன்ற சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடையவே நேரிடும்.

எனவே சபாநாயகரை மாற்றும் முயற்சிக்குப் பதிலாக ஜாதிகஹெல உறுமய நா.உ ஒருவரை சபாநாயகராக்கும் முயற்சியின் வெற்றிகுறித்த சந்தேகம் எழுவதுடன் அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டாலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அடிப்படை நோக்கத்திற்கு இது உதவுமா? என்பது குறித்தும் பலத்தகேள்விகள் எழுகின்றன.

**வேலவன்**

---

# நேர்நோக்கு

# உறங்கும் அபாயமாக மிதிவெடிகள்

சிறிலங்காவில் இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த கொடிய போரின் விளைவாக 900000 மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். தற் பொழுது இடம்பெற்றுவரும் போர் அனர்த்தம் காரணமாக உள்நாட்டிலேயே சுமார் 730000 மக்கள் இடம் பெயர்ந்து இருந்தனர். 80 ஆயிரம் பேர் இந்தியாவில் அகதிகளாக இருந்துவருகின்றனர். மேலும் 60 ஆயிரம்பேர் உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன்பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் என அழைக்கப்பட்டு வரும் சுமார் 3 லட்சத்து 40ஆயிரம்பேர்கடந்த2003ஆம்ஆண்டு இறுதிப்பகுதி வரை தமது சொந்த



இடங்களுக்கு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு குடியேறிய மக்கள் அனைவரும் உள்நாட்டில் மீள்குடியமர்வோர் மிகவும் ஒரு ஆபத்தான நிலையில் இருந்து வருகின்றனர். குடும்பங்கள் சிதைவடைந்து அடிப்படை வசதிகள் இன்றி வருமானம் ஈட்டும் வாய்ப்புக்கள் குறைந்தளவிலேயே உள்ளன. இவர்களின் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் அல்லது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் விவசாய நிலங்கள் இருந்தும் பயன்படுத்த முடியாத அவலநிலை, அதாவது படையினர் நிலைகொண்டிருந்த இடங்கள் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த பகுதி என்பன, வெடிபொருள் விதைக்கப்பட்ட பூமியாகவே இருந்து வருகின்றது. இவ் வெடிபொருள் பிரச்சினை என்பது எமது நாட்டில் மட்டுமல்ல,உலக வல்லரசுகளால் அடிமைகளாக மாற்றம் செய்யப்படும் சிறிய, வறிய நாடுகளிலும் பாரிய பிரச்சினையாகவே இருக்கின்றது. நாடுகளுக்கிடையில் ஏற்படும் போர் உள்நாட்டு யுத்தம் என்பனவற்றின்போது ஒரு யுக்தியாக இவ்வெடி பொருட்கள் புதைக்கப்படுகின்றன. இவ்வாறு வெடிபொருட்கள் புதைக்கப்படும் வேகத்தில் அவை அகற்றப்படுவதில்லை. இவ்வாறு உலகெங்கிலும் 110 மில்லியன் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வெடி பொருட்களை அகற்றுவதற்கு 1100 ஆண்டுகளுக்கு மேல் எடுக்கலாம் எனவும் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு புதைக்கப்பட்ட வெடிபொருட்களால் உலகமெங்கும் மாதம் ஒன்றிற்கு 800 இற்கும் அதிகமான அப்பாவிக் குடிமக்கள் இவற்றில் சிக்கி உயிரிழக்கின்றனர். மேலும் அதிகமானோர் காயமடைகின்றனர். அல்லது அங்க வீனர்களா கின்றனர். நிலக்கண்ணி வெடி ஒன்றினை வாங்குவதற்கு 3 அமெரிக்க டொலர் செலவாகின்றது.



ஆனால் புதைத்த நிலக்கண்ணியை அகற்றுவதாயின் 1,000 அமெரிக்க டொலர் செலவாகின்றது.

உலகிலேயே, ஒரு சதுர மைலுக்கு ஆகக்கூடுதலான நிலக்கண்ணி வெடிகளைக் கொண்ட நாடுகளில் பொஸ்னியாவின் ஹெர்ஸகோவினாவில் 152 கம்போடியாவில் 143 குறோசியா 137 எனப் புதைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெடிபொருள் புதைப்பதை தடைசெய்யும் சர்வதேச உடன்படிக்கை 185 நாடுகளினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மூன்று நாடுகள் மட்டுமே இச்சாசனத்தில் கைச்சாத்திட மறுத்துள்ளன.

இது இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் வெடிபொருள் ஏற படுத்தும் தாக்கமாகும். தமிழர் தாயகப் பகுதியை பொறுத்தவரையில், வவுனியா வடக்கின் முற்று முழுதான பகுதியும் மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியும், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியபகுதிகளிலும் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதை விட விதைக்கப்பட்டுள்ளன என்றே கூறவேண்டும். சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்த வெடிபொருட்களை. அகற்றுவதற்கு உதவியாக இராணுவத்தினரிடம் கோரப்பட்ட வரைபடங்கள் எதுவும் பயனற்ற நிலையிலேயே உள்ளதாக கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ள, மக்கள் தமது சொந்த நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத அவலநிலை எமது தாயகப்பகுதியில் வெடிபொருள் விழிப்புணர்வு கல்வி என்ற செயற்பாட்டிற்கு பெருந்தொகையான நிதி செலவிடப்பட்டாலும் மிகவிரைவில் வெடிபொருட்களை அகற்றுவதற்கான நிதி ஒதுக்கீடுகள் உரியமுறையில் செய்துகொள்ளப்படவில்லை. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு மிகவிரைவில் வெடிபொருட்களை அகற்றி எமது தாயகத்தை வளப்படுத்த எத்தனை ஆண்டுகள் எடுக்கும் என்பது வரையறைசெய்ய முடியாததொன்று.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இன்றுவரை இருந்து வரும்பகுதிகள் என்றும் வெடிபொருள் உள்ள பகுதியாகவே இருந்துவருகின்றது.யாழ்.குடாநாட்டில் 23ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இவர் களுடைய வாழ்விடங்கள் வெடிபொருட்கள் விதைகக்கப்பட்ட மயான பூமியாகவே இருந்து வருகின்றது. இதில் பெரும்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு வெடிபொருள் என்பது சிறிலங்கா அரசினால் எமக்கு எவ்வாறு அழிவை ஏற்படுத்தியதோ அதே போன்று உலகின் போர் நடந்த இடங்களிலும் பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.சிலநாடுகளில் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் மூலம் வெடிபொருட்கள் புதைக்கப்பட்ட இடஙகளில் இதுவரை வெடிபொருட்கள் அகற்றி முடியவில்லை எனில் எமது தாயகத்தில் உள்ள வெடி பொருட்கள் அகற்றிமுடிய எடுக்கும் காலத்தினை எவ்வாறு வரையறை செய்துகொள்ள முடியும் என்பது ஒரு பெரும் வினாவாகவே இருக்கின்றது.

**பாஸ்கரன்**

தீவகக்கடலில் கோலோச்சிக்கொண்டிருந்த சிறிலங்காக் கடற்படையினருக்கு பலத்த அடியை கடலில் வைத்துக்கொடுக்க விடுதலைப்புலிகள் தருணம் பார்த்திருந்தனர்; அதற்கான வேவுநட வடிக்கைகளை மேற்கொண்டனர். அவ்வேளைகளில் சிறிலங்கா கடற்படையினர் வெளியிணைப்பு இயந்திரங்களை பூட்டியபடகு களிலேயே தீவகக்கடலில் சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதில் வழமையாக 14 கடற்படையினர் செல்வர். முதல் தாக்குதல், படகு வேகம் குறைக்கப்படுகையில் துப்பாக்கிகளால், கைக்குண்டுகளால் தாக்கி 14 படையினரையும் கொல்வதாக இருந்தது. தாக்குதலுக்காக கடைசி வரை அணி நகரப்பட்டது. ஆனால் சில தேவைகள் தந்திரோ பாயங்களுக்காக அது கடைசியில் கைவிடப்பட்டது. அதன்பின் அடுத்த தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டது. இதன்படி தாக்குதல் இலக்காக நயினாதீவு சிறிலங்கா கடற்படைத்தளத்தின் இறங்குதுறை தெரிவுசெய்யப்பட்டது. கடற்படைத்தளத்தின் இறங்குதுறையில் கடற்படையின் சுற்றுக்காவல்படையினர் வந்து தரிக்கும்-துறையில்




# 20 ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

அணையும் தருணங்கள் வேவு பார்க்கப்பட்டன. படகுடன் 14 கடற்படை யினரும் கொல்லப்படவேண்டும் என்பதே தாக்குதல் திட்டமாக இருந்தது. இதன்படி வெடிகுண்டு தயார் செய்யப்பட்டு சுழியோடி ஒருவரின் துணையுடன் நயினாதீவு கடற்படை இறங்கு துறையின் படகு அணை யும் பகுதியில் குண்டு பொருத்தப்பட்டது. இதன் பின் அதனை வெடிக்க வைக்கும் வகையில் மின் இணைப்பி வயர் பொருத்தப்பட்டது. அது வெகுதூரத்தில் இருந்து அவதானிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அது குண்டை வெடிக்கவைப்பதற்காக. 14 கடற்படையினரைக் கொண்ட கடற்படைப்படகு நயினாதீவு இறங்கு துறையை நெருங்கிக்கொண்டிருந் தது. ஒரு ஆண்டுக்கு முன் நெடுந்தீவிலிருந்து வந்து கொண்டிருந்த குமுதினிப்படகில் 36 அப்பாவிமக்களை கதறக்கதற வெட்டிக்கொன்று எம் மக்களின் இரத்தத்தால் கடலை சிவப்பாக்கிய கடற்படை வெறியர்களும் அதில் இருந்திருக்கலாம்.

1986மார்ச் 3ஆம் திகதி.

தொலைதூரத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள்-கடற்படைப்படகு இறங்குதுறையை நெருங்கும் தருணம் வரை காத்திருந்தனர். படகு துறையை நெருங்க... படகு துறையுடன்... அணுகிய... தருணத்தில்.... பாரிய ஒலியுடன் குண்டு வெடித்து முழங்கியது. முழங்க கடற்படைப்படகு கடலின் பரப்பிலிருந்து மேலெழுந்து நீர்த்தரையுடன் சிதறி மீள கடலில் வீழ்ந்தது. இதனை நேரில் பார்த்த மக்கள் படகு பனையளவு உயரம் மேலெழுந்ததாகத் தெரிவித்தனர். படகிலிருந்த 14 கடற்படை வெறியர்களும் சிதறி வீழ்ந்தனர். யாழ்ப்பாணக்கடலில் ஆதிக்கம் செலுத்திய சிங்களக் கடற் படைக்கு கடலில் வைத்துக்கொடுக்கப்பட்ட முதல் பெரிய அடி இது. இந்த அடியுடன் சிறிலங்கா கடற்படை கதிகலங்கிப்போனது.

இந்தத்தாக்குதலுடன் நயினாதீவை சிங்களக்கடற்படை முற்றுகையிட்டு வெறியாட்டம் ஆடியது. வெறிபிடித்த சிங்களக்கடற் படை மக்களை கொன்று குவித்தது. நயினாதீவு நாகபூசனி அம்மன் கோவில்தேர்கள் இரண்டை முற்றாக எரித்து அழித்தது. கோவிலின் சொத்துக்களை சூறையாடியது. மக்களைக் கொன்று குவித்தது. மக்கள் சொத்துக்களை சூறையாடியது. பெரும் வெறியாட்டத்தை சிங்களக்கடற் படை அன்று நயினாதீவில் ஆடி முடித்தது. இந்தக் கடலடியுடன் தீவகக் கடலில் சிங்களக் கடற்படையின் கோலோச்சல் குறைந்தது. அதற்கு முன்னர் தாக்குதல் எதுவும் நடைபெறாததால் கட்டுக்கடங் காததாக கடலை ஆக்கிரமித்துத் திரிந்த, சிங்களக் கடற்படை அச்ச மடைந்து அடங்கத்தொடங்கியது. அவர்களின் ஆட்டம் நயினாதீவு செல்பவர்களின் படகுகளை சோதனையிடலுடன் முடிந்தது. குறிகாட்டு வான் செல்லும் படகுகளை அவர்கள் தம் நயினாதீவு இறங்குதுறைக்கு அழைத்துச் சோதித்தனர். இதற்கடுத்ததாக ஒரு படைநடவடிக்கைக்கு சிறிலங்காப் படைத்தரப்பு தயாரானது.

1986இல் யாழ்குடாநாட்டில் சிறிலங்கா படையினர் ஷோர்ட் ஷிப்ட்(Short shift) என்ற படைநடவடிக்கையை பல பகுதிகளிலும் நடத்தினர் 1,2 என இரு கட்டங்களாக நடத்தப்பட்ட இதன் கட்டம் 1 வல்வெட்டித்துறையில் மே 18இல் மேற்கொள்ளப்பட்டது. இதில் பெரும் மக்கட்படுகொலை நிகழ்த்தப்பட்டது. கட்டம்2 மண்டைதீவில் மேற் கொள்ளப்பட்டது. மே 22இல் இது நடத்தப்பட்டது. அப்போது கோட்டை சிறிலங்கா இராணுவமுகாம் விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் வந்திருந்தது. அந்த முற்றுகை படையினருக்கு ஒத்துழைப்புக்காக ஷோர்ட் ஷிப்ட்-2 நடவடிக்கை சிறிலங்கா படையினரால் மேற்கொள்ளப் பட்டது. கோட்டைப்படையினருக்காக உணவு, ஆயுதம், வெடிபொருட் கள் படையினருடன் உலங்கு வானூர்திகளில் மண்டைதீவில் தரையிறக்கப்பட்டன. மண்டைதீவில் முதல் வெறியாட்டம் அன்று நடந்தது. அந்த நடவடிக்கை சிங்களப்படைகளுக்கு எதிர்பார்த்த வெற்றியைத்தரவில்லை.

துருவன்




# சத்திராந்தை மனிதன்

தொல்லியல் ஆய்விலே தொன்மைச்சான்றுகளாக மனித எலும்புப்பகுதிகள் - எலும்புக்கூடுகள் எடுக்கப் படுகின்றன. அவை எடுக்கப் பட்ட இடத்தின் பேரில் - அந்த எலும்புக்கூடுக்கு அவ் விடத்தின் பேருடன்சேர்த்து மனிதன் என அழைப்பார்கள்.

இலங்கையின் தொன்மை மனித எலும்புப்பகுதிகள் சிங்களதேசத்தின் பலாங் கொடையில் எடுக்கப்பட்டன. அதனால் அதற்குப்பெயர் பலாங்கொடமனிதன். மன்னாரின் மாந்தையில் முழுமையான எலும்புக்கூடு ஒன்று 1950களில் எடுக்கப் பட்டது. அதன்பெயர் மாந்தை மனிதன். 1980களில் யாழ்ப் பாணத்தின் ஆனைக்கோட் டையில் இரு மனித எலும் புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அவை ஆனைக்கோட்டை மனிதர் எனப்படுகின்றது.

இதேபோல யாழ்ப் பாணம் - காரைதீவு (காரைநகர்) சத்திராந்தையில் எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் 'சத்திராந்தை மனிதர்' எனப்படுகின்றன.




காரைநகர் யாழ்ப்பாணத்தின் மேற்கில் உள்ள ஒரு தீவு. இது வடக்கு தெற்காக நீண்ட ஒரு நிலப் பரப்பு. இத்தீவின் மையப் பகுதிக்கு தென்கிழக்காக - காரைநகர்ப்பாதை (Ferry) இறங்குதுறைக்கான அலையோரம் உள்ள களபூமி என்ற கிராமத்தில் சத்திராந்தை உள்ளது.

1980களின் தொடக்கத்தில் வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையிலான குழுவினரால் காரைநகரில் மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் சான்றுகளின் தேடலின்போது சத்திராந்தையில் பெருங்கற்காலத்துக்குரிய சிவப்பு - கறுப்பு மட்பாண் டங்கள் எடுக்கப்பட்டன. இந்த 'சத்திராந்தை' கிராமம் காரைநகரில் மிக அரிதாக உள்ள குடிநீர் நிலைகளில் ஒன்றுக்கருகான கிராமம் ஆகும். பயிர் செய் வயலை எல்லையாகக் கொண்டதாக இது இருக்கின்றது. இதனால் இது ஒருமக்கள் வாழிடமாக இருந்திருக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்ற ஒன்று.



பெருங்கற்காலத் துக்குரிய மட்பாண்டத்துண்டுகள் எடுக்கப்பட்டபின் - சத்தி ராந்தை தொல்லியல் ஆய்வில் குவிமையம் கொண்டது. 1981இல் சத்திராந்தையில் அகழாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. வரலாற்றுப் பேராசிரியர் க.இந்திரபாலாவின் வழிகாட்டுதலில் இந்த அகழாய்வு மேற்கொள்ளப் பட்டது.

கந்த சாமி என்ப வருக்குச் சொந் தமான காணி யில் அகழாய் வுக்காக 2குழி கள் வெட்டப் பட்டன. 10x10 அடி நீள அகலத்தில் வெட்டப்பட்ட அகழாய்வுக் குழியின் மண்படைகளில் செம்புப் பகுதிகள் எடுக்கப்பட்டன. தனித்தனி துண்டுகளாகவே செம்புத்துண்டுகள் எடுக்கப்பட்டன. 3மண் படைகளில் - 1வது படையில் ஒரு மண்டையோடு காணப்பட்டது. 2வது படையில் அதிகளவிலான எலும்புப்பகுதிகள் எடுக்கப்பட்டன. 3ஆவது படை பவளக்கற்பார்(முருகைக்கல் படுகை) படுகையாக இருந்தது.

இதற்குப்பிறகு 2ஆவது அகழாய்வுக்குழி வெட்டப்பட்டது. இது 4அடி ஆழம்வரை தோண்டப்பட்டபோது பவளப்பார் படுகை வந்துவிட்டது. முதல் குழியில் கிடைத்த பெரியளவு சான்றுகள் இதில் கிடைக் கவில்லை. 2 மண் படைகளைக் கொண்ட இதின் மேற்படையில் செம்புப் பகுதிகள் எடுக்கப்பட்டன. இவற்றுள் பவளப் பாறைக் கற்கள், மட்பாண்டத்துண்டுகள் எடுக்கப்பட்டன.

முதல் குழியில் எடுக்கப்பட்டமண்டையோடு - செம்புகள் 2மனித முழு எலும்புக்கூடுகளுக்குரியவை என்பது உறுதியானது. இவற்றுடன் நண்டுக்கோதுகள், கால்நடைகளின் பற்கள், மீன்தலை எலும்புகள், குறுணிக்கற்கால குவால்ஸ் கல் என்பவையும் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட ஏனைய செம்புப் பகுதிகள் இதனுள் 8 மனிதர்களிற் குரியனவாகும். இந்த மனித செம்புகளுடன் எடுக்கப்பட்ட மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்திற்குரியவை என இனங்காணப்பட்டன. மட்பாண்டங்களில் தொல்எழுத்து வரிவடிவமான 'கிராபிழ' எழுத்துகள், பிராமி எழுத்துவடிவம் என்பன காணப்பட்டன.

சத்திராந்தை மனிதரின் கவலை தரும் விடயம் - அந்த எலும்புப்பகுதிகள் - மட்பாண்டங்கள் அறிவியல் ரீதியாக காலக்கணிப்புக்குட்படுத்தாததாகும்.

மேலும் ஒரு சிறுகுறிப்பு, இந்த தொல்லியல் பத்தி - ஒரு ஆய்வு அல்ல. ஒரு அறிமுகமே. தொல்லியல் மையங்கள், அவற்றின் ஆய்வுகள் என்பவற்றின் சாதாரண மக்களும் அறியும் வகையில் அறிமுகம் செய்வதே இந்தப்பத்தியாகும். இதனை ஆய்வு என கருதி எவரும் குழம்ப வேண்டும். இது ஆய்வுக்கான ஒரு அடிப்படை அறிமுகமே.

குரலோன்

# நாவாந்துறை-வசந்தபுரம் சூரியவெளி கிராம மக்களுடனான ஒரு சந்திப்பு

உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் அனைவரும் தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கைக்கு உரிமையுடையவர்களாவர் உள் நாட்டில் இடம்



பெயர்ந்த மக்களுக்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் எத்தகைய சந்தர்ப்பமென்பதைப் பொருட்படுத்தாமலும் பாகுபாடு காட்டாமலும் குறைந்தபட்சமாக அடிப்படை வசதிகளையாவது உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்தியாவசிய உணவும், குடிக்கத்தக்க நீரும், அடிப்படையான உறைவிடமும் குடிமனையும் அத்தியாவசிய வைத்திய சுகாதார வசதிகளையும் பெற்று அனுபவிப்பதற்கு ஒவ்வொரு இடம் பெயர்ந்த பிரஜைகளுக்கும் உரிமையுண்டு என உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறைகள் எனும் கை நூல் விபரிக்கின்றது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் ஜே-85 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டதான வசந்தபுரம் -சூரிய வெளிக் கிராமம் யாழ் நகரில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. அராலி வீதியிலுள்ள இக் கிராமம் இரண்டு வருடங்களிற்கு முன்பு குடியேற்றத் திட்டமாகக் கொண்டுவரப்பட்டது. கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் தமது நிலங்களை இராணுவத்திற்கென வழங்கியவர்களும் தமிழ்க் கட்சி ஒன்றினால் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டதுமே ஐம்பது குடும்பங்கள் இப் பகுதியில் குடியேறக் காரணம் என அறிய முடிகிறது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் 25 வீடுகள் அமைத்துக் கொடுத்த போதிலும் வேறு எதுவித தேவைகளும் அமைச் சரால் பூர்த்தி செய்யப்படவில்லை. ஏனைய 25 குடிசைகளையும் தமது நிலைமைகளிற்கேற்ப மக்கள் தாமே அமைத்துள்ளனர். எண்ணிக்கையில் 50 வீடுகள் இருந்த போதிலும் 60 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த



300 பேர் எதுவித அடிப்படை வசதிகளுமின்றியுள்ளனர்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்த மக்களே இங்குள்ளனர். நாவாந்துறை மண்பிட்டி அதனை அண்டிய கடற்கரை வீதியில் 1970 ஆம் ஆண்டுகளில் குடியேறிய மக்கள் 1990,1995 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து இன்று வரை தமது காணிகளில் குடியேற முடியாத நிலையிலுள்ளனர். வசந்தபுரம்- சூரிய வெளிக்கிராம மக்கள்.

கடற்கரையோரமாக இப் பகுதியில் மக்கள் இருந்தமைக்கு அடையாளங்களாக தென்னை மரமும், கிணறும், இந்து ஆலயமுமேயுள்ளன. இவ் அடையாளங்களைத் தவிர வேற எதுவுமில்லை. நாவாந்துறை மண்பிட்டியில் இருந்து 1995ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த மக்களது காணிகளில் இக் காலப்



பகுதியில் இந்து கலாசார அமைசசராக இருந்த டக்ளஸ் தேவாநந்தா முறையற்ற வகையில் வீடுகளை அமைத்துக் கொடுத் துள்ளார். ஆறு வருடங்களிற்குப் பின் தமது கிராமத்திற்கு வந்த மக்களிற்கு ஏமாற்றமே காத்திருந்தது. காணிப்பதிவுகள் இன்மையால் பாதிக்கப்பட்ட வர்கள் மேற்கொண்டு நடவடிக்கை களை மேற்கொள்ளாதுள்ளனர்.

இக் கிராமத்தில் வதியும் கூலித் தொழில்புரியும் நான்கு பிள்ளைகளின் தந்தையான பரமு- பஞ்சலிங்கம் தனது ஆதங்கத்தை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார். அவற்றை வாசகர்களிற்காகத் தருகிறோம். அன்றாடம் அத்தியாவசியமாகத் தேவைப்படுவது குடிமனையும் தண்ணீரும், மலசல கூடமுமாகும். இவை எமது கிராமத்தில் இல்லை. குளிப்பதற்கென்றால் குறிப்பிட்ட தூரம் சென்று' உறவினர் நண்பர்களது வீட்டுக் கிணறுகளில் குளித்து வருகிறோம்.

குடிதண்ணீர் ஒரு குடும்பத்திற்கு இரண்டு குடம் என்ற ரீதியில் பவுசர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் இரண்டு குடங்களுக்கு மேல் தண்ணீர் பெற முடியாது. தண்ணீரை கூட அளந்து மிக அருமையாகப் பாவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளோம்.

எம்மால் இயன்றவற்றைக் கொண்டே குடிசையமைத்து இரண்டு வருடங்களாக இங்குள்ளோம். மண்பிட்டிப் பகுதியில் கடற்கரை நீளமாக எமது முன்னைய குடியிருப்புக்கள் இருந்த அடையாளமாக தென்னை மரமும் கிணறுமேயுள்ளன. எமது குடியிருப்புக்கள் இருந்த இடங்களில் 100 மீற்றர் தூரத்திற்கு ஒரு இராணுவ காவலரண் என்ற அடிப்படையில் இலங்கை கடற்படையும் இராணுவத்தினருமுள்ளனர். நாங்கள் இப்பள்ளக் காணிக்குள் வெள்ளத்தில் மிதக்கிறோம். இன்றைய எமது குடியிருப்புக்களிற்கு சிறு ஒழுங்கைகளையாவது அமைத்துத்தர வேண்டும். பொதுக் கிணறுகளையும், பொது மலசல கூடங்களையாவது அமைத்துத் தர வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் கழிவுகளில் பெரும் பகுதி காக்கைதீவு கடற்கரையிலேயே கொட்டப்படுகிறது. மாட்டிறைச்சிக் கடையில் இருந்து மாநகர சபை வரை அனைவரும் இங்குதான் கழிவுகளைக் கொட்டுகிறார்கள். எமது குடியிருப்புகளிற்கும் கழிவு கொட்டும் இடத்திற்கும் மிகக் குறுகிய தூரமேயுள்ளது. இங்கு உற்பத்தியாகும். நுளம்புகள், ஈக்கள் எங்களது வீடுகளிலேயே தமது வாழ்விடங்களை அமைத்துள்ளன. இதனால் சமைத்த உணவுகளைக் கூட முழுமையாக சாப்பிட முடியாத நிலையிலுள்ளோம். என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் பஞ்சலிங்கம்.

## இரா-வின்

இக் கிராமத்தில் 5-18 வயது வரை 40 பேர் இருந்த போதிலும் 25 பேர் மாத்திரமே பாடசாலைக்குச் செல்கின்றனர். ஏனையவர்கள் பாடசாலைக்குப் போகாமைக்கு பல்வேறு காரணங்களை முன்வைக்கிறார்கள். மருத்துவ தேவைகளை பொம்மை வெளி மகப்பேற்று நிலையத்திலும் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையிலுமே நிறைவு செய்து வருகின்றனர். பொதுச்சுகாதார வசதிகள், கிராமிய சுகாதாரத் தொண்டர்கள் இப் பகுதிக்கு வருவதில்லை.

இப் பகுதி மக்களுக்கு தொற்று நோய்கள் பரவலாக ஏற்பட்ட வண்ணமேயுள்ளன. இக் கிராமத்தில் குப்பைகள் சிறு கிடங்குகள், ஏனைய கழிவுகளாலும் நுளம்புப் பெருக்கம் ஏற்படுகிறது. இதனால் காய்ச்சல், வயிற்றோட்டம் கூட ஏற்படுகிறது. இங்கு ஏற்படப் போகும் உயிர் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு உரிய அதிகாரிகள் அலுவலர்கள் இனியாவது முன் வருவார்களா? இக் கிராமத்திற்கு. நாவாந்துறை மண்பிட்டிப் பகுதியில் நீண்ட காலமாக இருந்து 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்



பின்னர் வசந்தபுரம் -சூரிய வெளியில் சிறு குடிசையில் வாழ்ந்து வரும் திருமதி - ராசசீலீ - பாக்கிய ராசு எம்முடன் மனம் திறக்கிறார். நாங்கள் 1980 ஆம் ஆண்டில் இருந்து மண்பிட்டிப் பகுதியிலேயே இருந்தோம். 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வு காரணமாக வன்னிக்கு சென்றமையால் எமது காணிகளில் முன்னால் இந்து கலாசார அமைச்சரால் பிறருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. எமக்கு அங்கு இடமில்லாததாலேயே இங்கு எம்மால் இயன்றவற்றைக் கொண்டு குடிசை அமைத்து அடிப்படை வசதிகளின்றி உள்ளோம்.

எமது பகுதிகளிற்கு யாரும் வருவதில்லை. நாங்கள் ஏதோ தீண்டத்தகாத மனிதர்களாகவா இருக்



கிறோம். வறுமையின் காரணமாக சில வேளைகளில் ஒரு நேரச் சாப்பாட்டுடனும் நாட்களை நகர்த்துகின்றோம். தேவையானவர்களை இனம் கண்டு அவர்களிற்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதுடன் இக் கிராமத்திற்கு அவசியமாகத் தேவைப்படுபவற்றையும் அமைத்துத்தர வேண்டும். நாங்கள் குடியிருக்கும் இக் காணி வயல் நிலம். மழைக்காலங்களில் இங்கே இருக்க முடியாது. எமது வீடுகளிற்கிடையில் சிறு ஒழுங்கைகளை அமைத்துத் தர வேண்டும்.

அரசாங்கம் சார்பான அமைப்புக்களோ பொது அமைப்புக்களோ எமது பகுதி அபிவிருத்திக்கு தங்களது பங்களிப்பை வழங்கவேண்டும். சுகாதார வசதிகளின்றியுள்ளதுடன் எதுவித மருத்துவ ஆலோசனைகளையும் பெற முடியாதுள்ளோம். நாளாந்தம் எல்லா வகையிலும் இன்னல்களை அனுபவித்து வரும் எமது கிராம மக்களிற்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிராம அபிவிருத்தியில் பங்கெடுக்க முன் வர வேண்டும்.

இராணுவ முகாம்கள் முட்கம்பி வேலிகள் காவலரண்களாலும் முன்னால் இந்து கலாசார அமைச்சரான டக்ளஸ் தேவாநந்தாவின் பழிதீர்க்கும் நடவடிக்கையாலுமே இக் கிராமம் சீரழிந்துள்ளது. இக் கிராம மக்கள் இன்றைக்கு இரண்டு வருடங்களாக அடிப்படை வசதிகளைக் கூடப் பெற முடியாது அல்லல் படுகின்றனர். தமது வாழ்விடங்களை இழந்து அபிவிருத்திக்காகக்காத் திருக்கும் இம் மக்களிற்கு நிவாரண உதவிப் பொருட்களை வழங்குவதுடன் வீடமைப்புத் திட்டத்தையும் கிணறு மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இக் கிராமத்திற்கு முதலில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதனூடாக கிராமிய அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். தமது கிராமியத் தேவைகளை வெளியே கொண்டுவருவதற்கான ஒரு தலைமை உருவாக வேண்டும். புறக்கணிக்கப்படும். இக் கிராம மக்களிற்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் செயற்படுத்த வேண்டும்.

நகரையும் நகரை அண்மித்த பகுதிகளையும் அலங்கரிக்கும் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்களும் வீதிகளை விழுங்குமளவிற்கான விளம்பரப் பலகைகளும் தான் ஒரு நகர அபிவிருத்தியாக வளர்ச்சியாக கருதிவிட முடியாது. வசந்தபுரம் - சூரியவெளிக்கிராமத்திற்கு தேவையான உதவிகளை உரிய காலத்தில் வழங்கி அழிவை நோக்கிச் செல்லவுள்ள இக் கிராமத்தை காப்பாற்ற வேண்டியவர்கள் யார்...? கடமை உணர்ந்து செயற்படுவார்களா பொறுப்பானவர்கள்.....?

# அரசுகளால் புறக்கணிக்கப்படும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர்

அண்மைக்கால கணக்கெடுப்புக்களின் பிரகாரம் ஏறத்தாழ 25 மில்லியன் மக்கள் உலகில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களாக வுள்ளனர். இவர்கள் உள்நாட்டில் இடம் பெறும் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களுடன் ஏனைய மதம், இனரீதியான பிரச்சினைகளால் இடம் பெயர்ந்தோரும் உள்ளடங்கும். உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் (Internally Displaced People-Idp) என்ற பதம் கொண்டு தற்போது அழைக்கப்படுகின்றனர். இவ்வாறான உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பாக பிரச்சினைகள் 52 நாடுகளில் காணப்படுகின்றது. ஆனால் உலகின் கவனமோ இவர்கள் பக்கம் இல்லாது ஒரு நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து பிறிதொரு நாட்டில் வாழ்பவர்கள் பக்கமே உள்ளது. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களில் கணிசமானவர்கள் அவர்களது சொந்த அரசாங்கத்தினாலேயே நன்கு திட்டமிட்டு விரட்டியடிக்கப்பட்ட மக்கள் என்பது கவலைதரும் செய்தியாகும். உள்நாட்டில் ஆளும் வர்க்கத்தினது அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எழுச்சி கொண்ட மக்கள் கூட்டத்தை பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் (War on Terror) என்ற பெயரில் அரசாங்கங்கள் யுத்தத்தை தொடர்ந்து நடாத்தி வருகின்றன.





சர்வதேச சட்டங்களின் பிரகாரம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் நலன்கள் தொடர்பான முழுப்பொறுப்பும் குறித்த நாடுகளினது அரசாங்கத்தையே சாரும். ஆனால் மூன்றிலிரண்டு (2/3) அரசாங்கங்கள் இதைச் செய்யத் தவறிவிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கங்கள் இயலாத் தன்மையினாலும் பல சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே பாராமுகமாகவும் இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கங்கள் அவர்கள் நலனைக்கவனிக்க போதியவளமின்றிக்காணப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

2003இன்இறுதியில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான விபரங்கள்.

| (பிரதேசம்) | (நாடுகள்) | (வீதம்%) |
|---|---|---|
| ஆபிரிக்கா | 20 | 12.7 |
| ஆசியா பசுபிக் | 11 | 3.6 |
| அமெரிக்கா | 4 | 3.3 |
| ஐரோப்பா | 12 | 3.0 |
| மத்திய கிழக்கு | 5 | 2.0 |
| மொத்தம் | 52 | 24.6 |

உள்நாட்டு இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கவேண்டும். மேலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற இலக்கை எட்ட முடியாமல் பல சர்வதேச மனிதாபிமான சமூகங்கள் (International Humanitraian Community) உள்ளன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான நலன்களைக்கவனிக்கும் பிரதான சர்வதேச அமைப்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (United Nations U.N) உள்ளது. பலநாடுகளில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உணவு விநியோகத்தை மாத்திரமே நடாத்தி வருகின்றது.

உலக சனத்தொகையில் ஏறத்தாழ (24.6வீதம்) அதாவது கால்வாசி பங்கு மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களாகவுள்ளனர். உலகில் ஏறத்தாழ மூன்றிலொரு (1/3) இடம் பெயர்ந்தோர் தங்குவதற்கு பாதுகாப்பற்ற இடமின்றி ஏதிலிகளாக உள்ளனர். இதனால் இவர்களின் நிலை மிகவும் பரிதாபமாக இருப்பதுடன் பலர் கொடிய நோய்கள் மற்றும் கடும் பசியினால் மரணமடைய வேண்டி உள்ளதுடன் பலர் காணாமல் போகும் நிலையும் காணப்படுகின்றது. மேலும் பாதுகாப்பற்ற தங்குமிடம், சீரிய உணவு விநியோகமின்மை, உரிய அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி மீண்டும், மீண்டும் இடம் பெயருகின்ற நிலை பல நாடு களில் உளளது. உள்நாட்டில் யுத்தம் நடைபெறுகின்ற வேளை ஒழுங்கான, பாதுகாப்பான மக்களை அணுகும் வசதிகள் இன்றி குறித்த நாட்டு அரசாங்கமோ அல்லது மனிதாபிமான அமைப் புக்களோ உதவி செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலையும் உண்டு. சில வேளைகளில் அந்த மக்களுக்கான உதவி கள் கிடைக்கும் வழிகள் கூட நன்கு திட்டமிட்ட முறையில் அரசாங் கங்களினால் தடைசெய்யப் படுவதும் உண்டு.



அடுத்து இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடையும்போது உடல் உள ரீதியான தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். அளவுக்கதிகமான மக்கள் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடையும் போது பல கொடிய தொற்று நோய்கள் ஏற்படுவதுடன் பெண்கள், சிறுவர் மீதான துன்புறுத்தல்கள் நடைபெறுவதுடன் HIV போன்ற பாலியல் நோய்கள் ஏற்படவழியுண்டு.

இடப்பெயர்வின்போது தங்களது பெறுமதியான உடைமை கள், கால்நடைகளை இழப்பதால் சொந்தக் காலில் வாழ முடியாது தொடர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்க்கையை ஓட்டவேண்டிய நிலை யில் உள்ளனர். மேலும் நீண்டகால இடப் பெயர்வு, மற்றும் நலன்புரி நிலையங்கள் வாழ்க்கை குறித்த இனத்தின் கலாசார விழுமியங்களில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் குடும்ப உறவு முறைகள், குடும்ப அமைப்புக்களில் சீரழிவுகளை உண்டு பண்ணும். "சுவர் இன்றி சித்திரம் இல்லை" என்பார்கள் அதுபோல கலாசார விழுமியங்கள் இன்றி இனத்தின் இருப்பு என்பது கேள்விக் குறியே.

அடுத்து மிகக் குறைத் தளவு உட்கட்டுமான அமைப்பையும் பல வீனமான பொருளாதார நிலையையும் கொண்ட அபிவிருத்தி அடைந்து வரும்நாடுகளில் உள்நாட்டு இடப்பெயர்வு என்பது பனையால் விழுத்த வனை மாடு மிதித்த, கதையாகவுள்ளது. பல இடங்களில் குறித்த நாட்டு அரசாங்கங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களது தேவைகள் தொடர்பில் விழி பிதுங்கிய நிலையில் உள்ளன.

இவ்வாறாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன. மேலும் தற்போது உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான எண்ணிக்கை நிலைவரங்களும் சரியாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது. ஏனெனில் ஒரு யுத்த சூழலில் 100% கணக்கெடுப்பு என்பது சாத்தியமற்றதொன்றாகவே உள்ளது.

**பா.சிவரஞ்சன்**

---

## ஊக்க மாத்திரை

# சூழலோடு இணைந்து வாழ்தல்

எவ்வளவுதான் கெட்டிக்காரர் ஆனாலும், ஒருவர் தான் வாழுகின்ற சூழலோடு இணைந்து வாழாத வரை அவரால் வாழ்வில் பிரகாசிக்க முடியாது. நாம் ஒவ்வொருவரும் புத்தகப் பூச்சிகளாக வாழாது இயற்கையோடும், சூழலோடும் இணைந்து வாழ்தல் இன்றியமையாதது.

வெறும் கல்வி வழிகாட்டலால் மட்டும் நாம் இந்தப் பரந்த உலகைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாது. பல விடயங்களில் அனுபவமே சிறந்த வழிகாட்டி. இந்த அனுபவங்களை நாம் சுற்றம், சூழலிலிருந்து பெற முடியும். சுய அனுபவங்கள் இன்னும் காத்திரமானவை என்றாலும் அவை காலத்தை விழுங்கி விடும் என்பதால் சூழலில் தரிசிக்கின்ற அனுபவங்களும், முன்னோரது அனுபவப் பகிர் வுகளும் ஒருவரைப் புடம் போட பெரிதும் உதவக் கூடியதாகும்.

பிறக்கும் குழந்தைகளுக்கு தாயே முதலாவது உறவு என்ற வகையில் சூழலை தரிசிக்க வைக்கிறாள். குழந்தைகள் வளர்ந்து வரும் போது பெற்றோர்கள் அவர்களோடு சேர்ந்து வாழ்ந்து வழி காட்டிகளாக பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறார்கள். இதனாலேயே பல குழந்தைகளின் இயல்புகள் பெற்றோரை ஒத்திருக்கிறது. பரம்பரை அலகுகளும் இதற்கு இன்னொரு காரணி எனினும், சூழலின் தாக்கம் இயல்புகளை மாற்றிடக் கூடியது. கடமை என்ற வகையில் பெற்றோர் செய்து வரும் அன்புப் பணிவிடைகளே சிறார்களை உருவாக்குகிறது. வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர் கொள்வதற்கு பெற்றோர்களின் அன்பும், ஆதரவும் மிகவும் முக்கியமான பங்காற்றுகிறது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உருவாக்கத்திற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். அளவுக்கு அதிகமான கட்டுப்பாடும், அநாவசிய தலையீடும் பிள்ளைகளைப் பாதிக்கும். அவ்வாறே எதிர் மறைச்சூழலும்!

பிள்ளைகளை உருவாக்கும் அடுத்த கட்டம் பாடசாலைச் சூழலாகும். ஆசான் மாணவர் கற்க உதவ வேண்டுமேயன்றி கல்வியை திணிக்கவோ, தண்டித்து புகட்டவோ கூடாது. பிள்ளை இயல்பாக கற்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிட வேண்டும். ஞானக்கண்ணை திறந்து வைக்கின்ற ஆசிரியர், மாணவரின் மனதில், ஏற்றுக்கொள்ள கூடியவராக மாணவரை அணுக வேண்டும். இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள் என்பதைப் புரிந்து கொண்டு சமூகத்திற்கு உகந்தவர்களாக அவர்கள் உருவாகக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

தோல்விகளையும், தவறுகளையும் கண்டு துவண்டு விடாது அவற்றை வெற்றிக்கான படிகளாக ஏற்றுக்கொள்ளும் மனோநிலையை உருவாக்கிட மனோதத்துவரீதியில் செயற்பட வேண்டும். வீழ்ச்சிகளிலிருந்து மீண்டு, புதிய வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளக் கூடிய பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

குதிரைப் பந்தயத்தில் பின்னுக்கு வருகின்ற குதிரைகளோடு தன்னை ஒப்பிடாமல், முன்னே செல்கின்ற குதிரையை முந்தும் முயற்சியுடன் செயற்படும் மனோநிலையை வளர்த்துக் கொள்ளக் கூடியவராக உருவாகும் சூழலை ஏற்படுத்த வேண்டும். நல்ல சூழலில் வளர்கின்ற போது நல்ல சிந்தனைகள் உருவாகும். எப்பொழுதும் எமக்குரிய கடமைகளைத் திறம்படச் செய்ய வேண்டும். உரிய அர்ப்பணிப்பும். அயராத உழைப்பும், திட்டமிட்ட வாழ்வுமுறையும் வாழ்க்கையில் ஒளியேற்றும் கருவிகள்!

உகந்த சூழல் இல்லாத போதும் எவரும் பின்னடையும் வாய்ப்பு உண்டு. இன்றைய இளைஞர்களில் சிலரின் பின்னடைவும், அடாவடித்தனங்களும் கூட இவ்வாறான எதிர்மறையான சூழலினாலேயே ஏற்பட்டது எனலாம். குழுச்சண்டைகளினாலும் , அடாவடித் தனங்களாலும் தமது வாழ்வையும் பாழடித்துக் கொண்டு, பிறருக்கும் இடஞ்சலாக இருந்து கொண்டு சொத்துக்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தி, பாலியல் வக்கிரகங்களிலும் ஈடுபட்டு சீரழிந்து கொண்டிருக்கும் சில இளைய தலைமுறையினரின் இவ்வாறான இழி நிலை கூட மாறுபட்ட வக்கிரக சூழலினாலேயே ஏற்பட்டது எனலாம்.

நாசயுத்த அனர்த்த பின்னணியினால் மனிதன் வாழக் கூடிய உகந்த சூழல் பிறழ் வடைந்து விட்டமை இதற்கு முக்கிய காரண மாக இருக்கிறது. யுத்தம் சார்ந்த வன்முறை மனோபாவத்திற்குத் தீனி போடும் இன்றைய திரைப்பட வன் முறைகளும், காதல் சல்லாபங் களும் இன்னொருபடி மேலே சென்று எதிரான சூழலை உருவாக்கி வருகிறது. இதனிடையே பணப் பெருக்கமும், வெளிநாட்டு நாகரிக அறிமுகமும் நல்ல சூழலைக் கெடுக்கின்றன. இவற்றிற்கு ஒரு படி மேலாக திட்டமிட்ட போதைப் பொருள் ஊடுருவலும், நீலப்பட தரிசனங்களும் எண்ணையூற்றி எதிர்மறைச் சூழலை எரியவைக்கிறது.

இவ்வாறான பலவிதமான அவச் சூழல் தாக்கங்களினால் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கும் சமூகம் நல்வழியில் திரும்பிட வேண்டுமானால், அதற்கான உகந்த சூழலை உருவாக்குதலே தலையாய கடனாகும்.




# பிறந்த மண்

இடம் பெயர்ந்து வீட்டை விட்டுப்போய் பத்து வருடங்களின் பின் சொந்த வீட்டுக்குக் காலடி வைக்கும் சந்தோசத்தில் சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினாள் பாக்கியம். சுற்றிவர அடைத்திருக்கும் பனையோலை வேலியும், தகரப்படலையும் இருந்த இடத்துக்கான அடையாளமே இல்லை. முற்றத்தில் பரந்து விசாலமாய் கிளைபரப்பி நிற்கும் கறுத்தக் கொழும்பான் மாமரத்தில் பூவும், பிஞ்சும் பிடித்திருந்தன. எங்கோ குளவி கூடு கட்டி இருக்க வேண்டும். தலைக்கு மேலால் குளவி ஒன்று பறந்து பறந்து பாக்கியத்தை எச்சரித்தது. கோழிக்கூடு, மாட்டுக் கொட்டில், தலைவாசல் எல்லாம் எலும்புக் கூடுகள் போன்று காட்சியளித்தன.

பாக்கியத்துக்கு வீட்டைப் பார்த்ததும் கதறியழ வேண்டும் போல இருந்தது. வளவு நிறைய கன்று காலிகள் உண்டாக்கி பிள்ளைகளைப் போல அவற்றை தடவி, தடவி வளர்த்த கனகத்தார் "பாக்கியம், பாக்கியம்" என்று கூப்பிடுவது போல இருந்தது. தலைவாசலுக்கு பக்கத்திலிருந்த தென்னை மரத்தை அண்ணாந்து பார்த்தால் காற்றிலே அசைந்த தென்னோலை கனகத்தார் அவளை பார்த்து தலையசைத்துச் சிரிப்பது போன்று தோன்ற; அதனால் அடிமனதில் ஏதோ ஒரு வலி உண்டானதைப் போலவும் உணர்ந்தாள்.

"இந்த தென்னம்பிள்ளை யும் எங்கட ஒரு பிள்ளமாதிரித் தான்" கனகத்தார் சொன்னபோது பாக்கியம் வாய்விட்டுச் சிரித்தது ஞாபகத்துக்கு வந்தது. பெற்ற பிள்ளைகள் ஆளுக்கு ஒரு திக்காக பிரிந்து போய்விட இந்த தென்னம்பிள்ளை அப்படியே நிற்பதைப் பார்க்க..... வீடு சூழல் எல்லாமே வறண்டு வெறிச்சோடிப் போன போதும் பசுமை குறையாது பயன் தரக்காத்து நிற்கும் இந்தத் தென்னை மரம் பிள்ளைகளை விட ஒரு படி மேலாகத் தெரிகின்றது. குடும்பம் உறவு, பண்பாடு, எல்லாமே ஒரு இறுக்கமான பிடிக்குள் இருந்தபோது இருந்த நிம்மதியான அந்த வாழ்க்கையை இனி எப்போது காண்பது?

அப்பு நீ நித்தம் நடந்த வழி இங்கு நெருஞ்சி படருதணை. பொழுதோ பொழுது துணை இங்கு பொழுதுபட்டால் யாற்ற துணை?

தன்னை மறந்து விக்கி விக்கி அழுத பாக்கியத்திற்கு மனப்பாரம் குறைந்தது போல இருந்தது.

பாக்கியம் மாமி வந்ததும் வராததுமாய் ஏனணை அழுகிறாய்? செல்லம்மா கிட்ட வந்து கண்ணீரைத் துடைத்து "மோளோட தகராறோ? கவலைப் படாதயணை, விடு நாங்கள் பாப்பம்"

என்று காதுக்குள் குரலைத் தாழ்த்தி மெதுவாகச் சொல்லுகிறாள். "எவ்வளவு கலகலப்பாய் இருந்த வீடு! இப்ப பாரடி பிள்ள காடு பறக்குது." சொல்லிக் கொண்டே தொங்கல் சீலையால் முகத்தைத் துடைத்தாள் பாக்கியம்.

"இது உனக்கு மட்டுமோணை? ஊரோட ஒத்ததுதான் சரி எழும்பு. குளிச்சு முழுகிக் களைப்பாறிச் சாப்பிடணை. பிறகு மற்றதப் பாப்பம்"

"பாக்கியப் பெரியாச்சி ஒரு மாதிரி வந்து சேந்திட்டியே? நல்ல வெள்ளையா வந்திருக்கிறாய். திருகோணமலைத் தண்ணி நல்லாய் ஒத்துப் போகுதுபோல!"

"கட்டையில போறனானுக்கு கறுப்பென்ன வெள்ளையென்ன?" பாக்கியம் சிரித்துக்கொண்டே "வாடா! குணம் வா!! என்ர பெறாமோன் என்னைத்தேடி வந்திட்டான். நாளைக்கு எனக்கு நீதானே கொள்ளி வைக்கிறது"

"பெரியாச்சி இப்ப கொள்ளி வைப்பும் குடம் உடைப்பும் எங்க நடக்குது? தினம் தினம் தானே சாகிறம்"

"குணராசு எப்படி சுகமாக இருக்கிறியோ?"பாக்கியம் வேறு கதையைத் தொடங்கினாள்.

"என்ர மூத்த பெடியன் வெளியில அனுப்புவம் எண்டு காசைக் கட்டிப் போட்டு, ஓடித்திரிஞ்சு ஒரு மாதிரி அனுப்பிப் போட்டன். அவன் ஏதாவது தொழிலைச் செய்து அனுப்பினால்தான் கடன் தண்ணி கொடுக்கலாம். அதுசரி எங்களை நினைத்து என்ன கொண்டு வந்தனி?

"சும்மா வருவனே? இரன் தருவன்தானே"பாக்கியம் ஒரு மாதத்துக்கு முதலே மகளுடன்,

"நான் ஊருக்குப் போகப்போறன் கப்பலுக்குப் பதி பிள்ள"

என்று ஒரே பிடியாய் நின்ற நாளிலிருந்தே போகும் போதும் வரும்போதும் சிறிது சிறிதாகச் சாமான்களை வாங்கிச் சேர்க்கத் தொடங்கிவிட்டாள்.

அம்மா உனக்கென்ன விசரேணை? நாட்டு நடப்புத் தெரியாமல் அங்க போய் என்ன செய்யப்போறாய்? மகள் வைச்சுப் பார்க்கவில்லை எண்டு சனம் நினைக்கப் போகுதுகள். சும்மா இதுவழிய கிடவணை"

"நீ எதையாவது சொல்லு நான் போறது போறதுதான்"

பிடிவாதமாய் நின்றது மட்டுமல்ல.

"எனக்கென்னவோ அந்த மனுசன் என்னைமாதி இருக்கு அவரின்ர இடத்திலபோய் வீடு வாசலைப் பாக்க வேண்டும் போல இருக்கு"

ரெலிபோனில் பாக்கியம் பிள்ளைகளிடம் உருக்கமாகச் சொன்ன போது.

"அக்கா! அம்மா என்ன வெல்லாமோ கதைக்கிறா. நாளைக்கு ஏதாவது நடந்தாலும்.... வயது போன காலத்தில ஏக்கத்தோட இருக்காமல் அனுப்பி விடு"

பிள்ளைகள் எல்லோரினதும் விருப்பத்துடன் தான் கமலா கப்பலுக்குப் பதிந்து போவதற்குத் துணையும் தேடிப் பிடித்து அனுப்பி விட்டாள். தன்னைப் பார்க்க வருபவர்களுக்கென்றே ஒவ்வொரு பொருள் வாங்கி வைத்திருந்தாள் பாக்கியம். மாமி, பெரியாச்சி, குஞ்சியாச்சி, மச்சாள், என வீடு கொள்ளாத சனம் அவளைக் குசலம் விசாரிக்க வந்தது. பாக்கியத்துக்குச் சாப்பாடு கொடுப்பதற்கு நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தார்கள். பாக்கியத்தின் கிணற்றடி வேலியைத் தாண்டினால் அவளின் தங்கையின் மகள் சாந்தியின் வீடு வேலியும் இல்லாமல் எல்லையும் இல்லாமல் வெட்டவெளியாக இருந்தது.

"பெரியாச்சி இரவில எங்கட வீட்டை வந்து படணை"

"சாந்தி நான் அங்க இருந்து ஒரே தடவையாக வீட்டை வந்து சேர்ந்தனான் நாலு நாளைக்கு என்ர இடத்தில் நீட்டி நிமிர்ந்து படுப்பம்."

"பெத்தாச்சி எத்தனை நாளைக்குப் படுப்பாவென்று பார்ப்பம். இரண்டு நாளாலை நான் போறன் போறன் என்று ஓடப்போறா"

"சாந்தி இவள் உன்ர கடைசியெல்லே முந்தநாள் மூக்கால வடிய திரிஞ்சது. பெரிய ஆளாயிட்டுது இப்ப கதையப்பாரன்"

பாக்கியம் கிணற்றடிப் பக்கமாக நடந்தாள். வளவு நிறையச் சருகுகள் குவிந்து கிடந்தன. பக்கத்து வீட்டு ஆறுமுகத்திற்கும் கிணற்றில் பங்கு இருந்தது. எல்லையாகப் போட்ட முள்முருக்கு "உச்சியில் இரண்டு மயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை" என்பது போல ஒன்றிரண்டு இலையுடன் ஓங்கி வளர்ந்திருந்தது.

"அந்த அநியாயப்படுவான் இந்த எல்லைத்தடியை எத்தனை தரம் இழுத்து நட்டிருப்பான் வேலிச் சருகு கூட்டியதற்குப் பொலிசிட்டையும் போனவன் இப்ப கூட்டுவாரில்லாமல் குப்பையாய் கிடக்குது"

"பெரியாச்சி ஆறுமுகத்துக்குச் சலரோகம் என்று ஒரு காலும் எடுத்தாச்செல்லே. பிள்ளையளும் கவனிக்கிறேல்ல. பாவம் மூலையில் சுருண்டு போய்க்கிடக்கிறார்.எப்பிடியெல்லாம். காலம்மாறிப்போச்சு. இந்தச் சின்னக் கண்ணுக்குள்ள எத்தனை காட்சியைக் கண்டாச்சு"



இரண்டு மூன்று காய்ந்த கம்புகளை சேர்த்து ஒரு பக்கமாகச் சருகுகளை சேர்த்த பாக்கியம்.

"ஒருக்கால் இப்படித்தான் அம்மன் கோவில் திருவிழா நடந்த போது வைரமுத்துவின்ர அரிச்சந்திர மயான காண்டம் நாடகம் நடந்தது. சனம் எல்லாம் நாடகம் பார்க்கப்போய் விட்டுதுகள். குறுக்கால போன இளவட்டங்கள் ஆறுமுகத்தாரின்ர தகரப் படலையை கழற்றிக் கொண்டு போய் வேலாயுதத்தின்ர கிடுகுப்படலையை மாத்தி கட்டிப் போட்டானுகள்"

"அலம்பிய துணிகளைத் திரும்பவும் அலசி இறுகப் பிழிந்து கொடியில் போட்டுக் கொண்டே பிறகு....? ஆவலுடன் கேட்டாள் சாந்தி"

"படுபாவி ஆறுமுகம் எங்களைப் படுக்க விட்டவனே. கோவிலால வந்தது பாதி வராதது பாதியாக ஏசத்தொடங்கியவன் தான்"

ஏனணை?

ஏனோ! நாங்கள் தான் படலையை எடுத்துப் போட்டம் எண்டுதான்!

"பிறகு விடியப் பார்த்தால் ஆறுமுகத்தாரின்ர வாசலில் இரண்டு படலையள் கட்டிவிட்டிருக்கு. அவனுக்கு எங்களில தான் சந்தேகம். இப்ப அவனுக்கு இந்தக் கதையைச் சொல்ல வேணும்.

"செல்லி என்னணெ செய்ய? மனுசனுக்கு ஆணவமும் இரத்த்ம் செய்யிற வேலை. வளவு முழுக்க தென்னையும் மாவும் முருக்கும் எவ்வளவு வரும்படி எல்லாத்தையும் விட்டுப்போட்டு சனங்கள் இடம்பெயர்ந்து போய்க் குழி நிலத்துக்கு லட்சம் கொடுத்து வாங்கி மூச்சுவிட முடியாமல் அடைபட்டுக்கிடக்கிறதை சந்தோசமாய் நினைக்கேல்லயே?

ஒவ்வொரு மரத்தையும் இலையையும் பாக்கியம் ஆசையாய்த் தடவிக்கொடுத்தாள்.

"என்ன இருந்தாலும் பிறந்த மண்ணில் பட்டினியாய்க் கிடந்து உருண்டாலும் தரும் பச்சைத் தண்ணியைக் குடிச்சாலும் மரியாதையோட இருக்கலாம்"

"இடம் பெயர்ந்த அனுபவம் இப்படிப் பேசவைக்கிறது."

நல்லம்மா குழற்புட்டு அவித்து இறால்வறை வறுத்துக் கொண்டு வந்திருக்கிறாள். பாக்கியத்துக்கு வாயில் நீர் ஊறியது.

"சாப்பிடணை இரவில என்ன சத்தம் கேட்டாலும் வெளியில வராதையணை"

சாமம் சாமமாய் வயலுக்கு போய் பாத்திநாட்டி தண்ணீ இறைச்சு எரு வைச்சு..... அந்தக் காலங்களை நினைத்துப் பார்த்தாள். அவற்றை நினைக்கும் போது பாக்கியத்திடமிருந்து நீண்ட பெரு மூச்சு ஒன்று வெளிப்பட்டது. புதினங்கள் பல பரிமாறப்பட்டன. இடையில் நல்லம்மாவின் பேச்சு தடைப்பட்டதும் அவள் நித்திரை என்பதை ஊகித்துக்கொண்டாள் பாக்கியம். நித்திரை கண்களை தழுவ மறுத்தது. அவளின் கட்டில் நினைவில் நிழலாடியதும் எழுந்து போய் வீட்டுக்கு பின்புறமாக இருந்த செவ்வரத்தையடியில் அமர்ந்தாள்.

அப்போது கனகத்தாரும் பாக்கியமும் இதே பூமரத்தின் கீழ் இருந்து எத்தனை எத்தனையோ இன்பக்கதைகள்..... எதிர்காலத் திட்டங்கள்.... ஊடல் கூடல் அனைத்துக்கும் பொருத்தமாய் அமைந்த அந்த இடத்தில் தன்னை மறந்து இருந்த போது சண்டை நடந்த போது அங்கு படையினர் புதைத்து விட்டுச்சென்ற ஒரு பொறிவெடி வெடித்து அவளது உடல் நிலத்தில் சாய்ந்தது. வெடிச்சத்தம் கேட்டு நல்லம்மா ஓடி வந்த போது உயிரற்ற உடலே காணப்பட்டது. உயிர் அற்ற உடல் என்றாலும் சொந்த இடத்தில் செத்துக் கிடப்பது சுகமே என்பது போல ஒரு திருப்தியும் நிறைவும் அந்த உயிரற்ற உடலுக்கு புதுப் பொலிவைக்கொடுத்தது. ●

**பொன் - பரன்**



## மண்ணின் மைந்தர்களின் கதை

# எனக்கு காயமெண்டாலும் பரவாயில்லை நானும் சண்டைக்கு வாறன்



அண்ணா உங்களின்ர தளபதியோட கதைக்க ஏற்பாடு செய்து தருவீர்களா?

பிரச்சினையில்லை தங்கச்சி, இன்னும் இரண்டு நாட்களில் சந்திக்கச் செய்யலாம். என்னவிடயமா சந்திக்கப்போறீங்கள் என்று சொல்வீர்களா? என்றுகேட்டதும் தேம்பித், தேம்பி அழத்தொடங்கினாள்.

தேம்பி அழத்தொடங்கிய அந்தப்பெண் போராளியின் அழுகைக்கும் தவிப்பிற்குமான காரணம் எல்லோரையும் வியப்பிற்குள்ளாகச் செய்தது மட்டுமல்லாது, எமது கண்களை கசிந்திடவும் வைத்தது.

அமைதியான சுபாவத்தில் உருவான அந்தப் பெண்போராளியின நிசப்தமான மனதிற்குள் எண்ணற்ற மனப்போராட்டங்களும் கவலைகளும் இருந்தன. அதை அவள் எப்போதும் வெளிக்காட்டாமலேயே தனது இலட்சியப்பயணத்தைத் தொடர்ந்தாள். போராட்டத்தில் இணைந்தகாலத்திலிருந்து வீரச்சாவடைந்த நாள்வரை எந்த வேலையிலும் அந்தப்பெண் போராளி சிரித்துக்கொண்டே இருந்தாள் என அவளது உயிர்த்தோழிகள் சொல்வதுண்டு.



வீரவேங்கை லெப்.குயிலியின் குடும்பவாழ்வும், போராட்ட வாழ்வும் மிகவும் வித்தியாசமானது. சிறு வயதிலேயே தனது தந்தையை போரின் கொடூரத்தால் இழந்துவிட்டாள். சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் கொடுமை பாரிய விளைவை ஏற்படுத்தத் தொடங்கியது.

சிங்கள இனவெறியர்களின் கொடூரப்பிடியினால் அவளது தந்தை கொல்லப்பட்டதைத்தொடர்ந்து பொருளாதார ரீதியாக தாய் மிகவும் பாதிக்கப்பட்டு இறுதியில் மறுமணம் செய்ய வேண்டிய அளவிற்கு நிர்ப்பந்திக்கப்பட்டாள். தனது குழந்தைகளின் எதிர்காலம் இருளடைந்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடனேயே மறுமணம் செய்துகொண்டவளுக்கு ஏமாற்றமே நடந்தது. புதிதாய் கைபிடித்தவன் தனது இருகுழந்தைகளையும் மாற்றான் தாய் மனநிலையிலேயே பார்த்தான். எனவே குடும்பத்தில் பிரச்சினைகள் ஆரம்பிக்கத்தொடங்கின. வீட்டில் புதிய சகோதரங்களின் பிறப்பு, குடும்பச்சூழல், பிரச்சினை, தனது தாயிற்கு ஏற்படும் அவலம் இவையனைத்தையும் குயிலி பார்த்து பயந்துவிடவோ, கலக்கமடையவோ இல்லை. மாறாக போரின் கொடூரத்தால் தன்னைப்போல் எத்தினை எத்தினை சகோதரர்கள் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளாகி இருப்பார்கள் என்பதை உணர்ந்தவளாய் போராட்டத்தில் இணைந்தாள்.

தனது தாயையும், தம்பியையும் பிரிந்துவந்த கவலையுடனிருக்க அவளுக்கு மேலும் ஒரு துயர் வாட்டத்தொடங்கிவிட்டது. தனது நேசத்திற்குரிய அருமைத்தம்பியும் போராட்டத்தில் இணைந்துவிட்டான் என்பதை கேள்விப்பட்டு பெரிதும் கவலை யடைந்தாள்.

நீண்டநாட்களாக தனது தம்பியை தேடித்திரிந்தவளுக்கு பெரும்பாலும் ஏமாற்றமே கிடைத்தது. ஆனால் அவள் சோர்ந்துவிடவேயில்லை. தனது தம்பியை எப்படியும் சந்திப்பேன் என்றே நம்பியிருந்தாள். அவளது நம்பிக்கை வீண்போகவில்லை. தானும் தம்பியும் போராட்டத்தில் மட்டுமல்ல எல்லைக்காவலரணிலும் சண்டையிலும் ஒன்றாகவே இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டதும் பெரிதும் சந்தோசப்பட்டவளாகவே தம்பியை விசாரிக்கலானாள்.

அவளது கோரிக்கைக்கு அமைவாக தம்பியை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முகமாலை எல்லைக் காவலரண் தொடரில் தினம் சண்டை நடந்துகொண்டிருக்கின்ற காலத்தின் ஒரு மாலைப்பொழுது அந்த இளம் வீராங்கனை தனது தம்பியைக் கண்டு கதைத்துவிட்டு, இறுதியில் போகும் போது சில வார்த்தைகளை கூறி விட்டுச்சென்றாள்.

தான் ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்னர் தனது தம்பியை கண்டுவிட்டதாகவும், ஆனால் இயக்கத்தின் அனுமதியுடன் கதைக்கவேண்டும் என்ற கடமைப்பாடு இருந்ததனால் தளபதிமாரின் அனுமதியை எடுத்துக்கொண்டு கதைக்கவேண்டும் என்று பொறுமையாக இருந்ததாக சொன்னாள்.

உண்மையிலேயே வீரவேங்கை லெப்.குயிலி பொது வாழ்க்கையில் மட்டுமல்ல, சண்டைக் களங்களில் விவேகமான அமைதி கொண்டவள். அவளது பொறுமையிலும், அமைதியிலும் பல சாதனைகள் படைக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல; பல வெற்றிகளும் கிடைத்திருப்பதை மறக்கமுடியாது.

வீரவேங்கை லெப்.குயிலி பெரும்பாலான சண்டைக்களங்களில் முன் அவதானிப்பாளராகவும், எறிகணை வீச்சு சீர்பார்ப்பாளராகவும் செயற்படுத்தித் தனது ஆற்றலால் பல செயல்களில் வெற்றிபெற்றவள். தனது தனித்துவமான எறிகணை சீர்படுத்தல் சேவையின் ஊடாக எத்தினையோ சண்டைகளில் சாதனைகள் செய்தவள்.

முகமாலை காவலரண் தொடரான கிளாலி தொடக்கம் கண்டல்வரை ஒவ்வொரு நாளும் நடக்கும் சிறிய பெரிய சண்டைகளில் அவளது தெளிவான கட்டளைகளும், வேண்டுகோளும் கேட்கத் தவறுவதில்லை. தீச்சுவாலைக்கு ஒருவருடத்திற்கு முன்பிருந்தே பல களங்களில் குயிலி பங்குபற்றுவதுண்டு.

ஆனையிறவு பெருந்தளத்தை மீட்டிட வந்தபோது லெப். குயிலின் திறமையை அறிந்து அவளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தலைவரின் கட்டளையை ஏற்று வீறாப்புடன் சாதித்துக் காட்டவேண்டும் என வந்தவள் நிறையவே ஆசைகளை வளர்த்திருந்தாள்.

எப்படியும் இந்தச் சண்டையில் தனது எறிகணை சீர்செய்யும் பணியினாலும், முன் அவதானிப்பு நடவடிக்கையினாலும் நிறையவே சாதிக்கவேண்டும் என்றும், தலைவரின் வார்த்தைக்கு இணங்க கடலால் சென்று தரையால் வரும் ஒரு போராளியாகவே வரவேண்டும் என்று ஆசைப்பட்டவளுக்கோ ஏமாற்றமே காத்திருந்தது.

குடாரப்பில் தரையிறங்குகின்ற மாலதி படையணியின் முதலாவது அணியோடு படகில் ஏறி சந்தோசத்துடன் களம்விரைந்த லெப்.குயிலி, சிங்களக் கடற்படையின் திடீர்த்தாக்குதலால் காயமடைந்து வந்த படகிலேயே திரும்பிச்செல்லவேண்டியவளாகி விட்டாள். அதன்போது அவள் மிகவும் பாதிக்கப்பட்டு சோகமே உருவாகக் காணப்பட்டாள் என அவளது தோழிகள் கூறினர்.

அக்கா என்னை விட்டிட்டு போகவேண்டாம்,

என்னால எதையும் செய்ய ஏலும் என்று கத்தத்தொடங்கி விட்டாளாம். அவளது பொறுப்பாளரும், சகதோழிகளும் எவ்வளவோ சொல்லியும் கடைசிவரை கேட்கவில்லையாம்.

அக்கா எனக்குக் காயமென்றாலும் நான் வடிவா சண்டைபிடிப்பேன் என்றே அடம்பிடித்தவளாய் படகில் அழுது கொண்டே சென்றிருக்கிறாள்.

காயம் சுகமடைந்த லெப். குயிலியின் தொடர்ச்சியான அழுத்தத்தால் ஆனையிறவு மீட்பின் பின் அமைத்த முகமாலை காவலரண் தொடருக்குச் சென்றவள் அங்கு நடந்த தாக்குதல்களில் பங்கு வகித்தாள்.

லெப்.குயிலி சாதிக்க வேண்டும் என்றே செயற்பட்டவள் அவளது ஆசைக்கும், எதிர்பார்ப்பிற்கும் அமைவாக தீச்சுவாலை எதிர்ச்சமர் அவளுக்குக் களம் அமைத்துக்கொடுத்தது.

2001ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எதிரியின் பாரிய நகர்வில் சுமார் பத்தாயிரம் எதிரிப்படைகள் தாக்குதலைத்தொடுத்தனர். எறிகணைகளும், ரவைகளும் வெடிமருந்துத் தூறலாய்க் கொட்டின. அனைத்துப்

**— க. மிரேசு —**

படையணிகளும் எதிர்த்தாக்குதலை மூர்க்கத்தனமாய் செய்ததுபோலவே மாலதிபடையணியும் கிளாலிப்பக்கமாக எதிர்த்தாக்குதலை தொடுத்தது. சண்டை உக்கிரம் அடைய அடைய நிலைமை மோசமாகியவண்ணமே இருந்தது. அந்தவேளைகளில்தான் சாதிக்கத் துடித்தவளுக்கு சந்தர்ப்பமும் சந்தோசமும் ஒருங்கே வந்தன.

ராங்கோ திரி இந்தா நான் சொல்லுற இடத்திற்கு அடியுங்கோ.

சரி அதுதான் இடம் அதுக்கே போடுங்கோ என்று தொடர்ந்தாள் தனது வேலையை.

அண்ணா என்ர பக்கம் செற்பண்ணுங்கோ கிட்டவந்ததும் சொல்லுறன்.

என்று பொறுமையாக காத்துக்கொண்டிருக்கிறாள் என்பது அவளது குரலை சற்றுநேரம் நடைபேசியில் கேட்காதது உறுதிப்படுத்துகிறது. சில நிமிடங்களின் பின் மீண்டும் அவளது குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

அண்ணா நான் முதல்ல தந்ததிற்கு இடப்பக்கமாக 200மீற்றர் விலத்தி வாறன் சரி • அடியுங்கோ என்று கத்துகிறாள். ஏவுதளத்திலிருந்து எறிகணை வர சுணங்கிவிட்டது. அண்ணா இன்னும் என்ன செய்யிறியள்.... அவன்மாறப்போறான் அடியுங்கோ... என்று மீண்டும் கத்துகிறாள். குயிலி பேசி முடியும்முன்பே எதிர் முனையில் சரி அனுப்பிவிட்டோம் என்று சொன்னதும் எறிகணை அவள் சொன்ன இலக்கில் வெடிக்கிறது.

அண்ணா சரி அதுதான் இலக்கு இன்னும் இரண்டு அனுப்புங்கோ... என்று சந்தோசம் மேலிடக் கத்துகிறாள்.

இப்படித்தான் களத்தில் குயிலி செயல்பட்டாள். அமைதியாக பதற்றமின்றி அவள் தேர்ந்தெடுக்கும் இலக்கு அவளது கட்டளையாலயே முற்றாக அடிக்கப்படும்.

தீச்சுவாலை எதிர்ச்சமர் தொடர்ந்தவண்ணம் இருக்க நேரடித் தொடர்பிலும் பார்வையிலும் எதிரியின் இலக்குகள் அழிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன. எதிரியின் குறி தவறும் அளவுக்கு குயிலின் எறிகணைகள் அவனை துவம்சம் செய்தன.

தீச்சுவாலையின் முதல்நாள் களத்திலும் இரண்டாம் நாள் களத்திலும் லெப்.குயிலும் அவளது தம்பியும் ஒன்றாகவே சண்டைசெய்து கொண்டிருந்தனர். ஒரேகளத்தில் இருவரும் சண்டைசெய்தபோது குயிலி தனது மனதில் என்ன நினைத்தாளோ தெரியாது. ஆனால் அவளது தம்பி தனது அக்காவின் நினைவாகவே இருந்தான்.

சண்டை கடுமையாக இருக்கு... அக்காவிற்கு என்னவோ, என்னவோ என்று சொல்லிச் சொல்லியே சண்டையில் நின்றான். அவனை அவனது அக்காவின் பாசம் ஏமாற்றிவிட்டது. குயிலி வீரச்சாவு என அறிந்ததும் பதற்றப்படாமல் நான் எதிர்பார்த்ததுதான் எனச் சொல்லி விட்டு அழுதான்.

இரண்டாம் நாள் சண்டையில் காலையிலேயே காயமடைந்த குயிலி சண்டையின் இறுக்கத்தை அறிந்து காயமென்றும் பாராமல் தனது கடமையை செய்யத்தொடங்கினாள். காயமடைந்திருந்து தான் ஒரு காவலரணில் இருப்பதாகவும், தனக்குப் பக்கத்தில் எதிரி நடமாடிக் கொண்டிருப்பதாகவும் எனவே தான் சொல்லும் இலக்குகளுக்கு அடிக்கச் சொன்னாள். காயமடைந்ததும் எது வித உதவியும் இல்லாமல் இரத்தம் சொட்டச்சொட்ட குயிலி எதிரியின் இலக்குகளைப்பார்த்து அறிவிக்க அறிவிக்க எதிரியின் இலக்குகளை எங்களது ஏவுதளத்திலிருந்து புறப்பட்ட எறிகணைகள் செவ்வனே செய்து எதிரிகளை அழித்து பெரும் வெற்றியைப் பெற்றுத்தர, அந்த வெற்றிகளுக்குக் காரணமான மாவீரர்களோடு குயிலியும் இணைந்து கொண்டாள் என்பதை என்னவென்று நம்புவது என தெரியாமல் களத்திலுள்ள போராளிகள் துடிதுடித்தனர். ●

கவிதைகள்

# பெண்ணின் பாடல்...

நானொரு
அழகான பெண்
நானொரு
மகவுக்காகவே வாழ்பவள்
நானென்
குழந்தைக்காகவே கலகலப்பாக
இருப்பவள்.

ஏமாற்றம்
பிரிவு
மறைவு
ஏதோவொரு வழியிலே
நானென் துணையை
இழந்து நிற்கின்றேன்.

எனது குழந்தையை
நானே காப்பாற்றவும்...
என்னை நானே
வழிகாட்டிக் கொள்ளவும்...
எனது கால்களில்
நானே நிமிர்ந்து நிற்கவும்...
எனது சுயத்தை
நானே மாற்றிக்கொண்டுவிட்டேன்.

இருந்தாலுமென்ன
நான் நிம்மதியாயில்லை.

சந்தேக அமிலம் தெளிக்கும்
எங்கள் சமூகத்தின்
சாரப் பார்வைகளும்
இதயங்களற்ற உயிர்களின்
நரம்பற்ற நாக்குகளில்
தெறிக்கும்
வரம்பற்ற வார்த்தைகளும்
என்னை
தனிமை இரவுகளில்
விம்பியழ வைக்கின்றன.

நான்
கலகலப்பாக பேசிக்கொள்வதும்
என்னை அழகுபடுத்திக்கொள்வதும்
எப்போதாவது
எந்தவோர் ஆடவருடனும்
பேசிக்கொள்வதும்
எனது சமூகத்திற்கு
ஏனோ பிடிப்பற்றுக் கிடக்கிறது.

நான்
சோகமாய் இருக்கவேண்டுமென்றும்
என்னை
அலங்கரித்துக்கொள்ளக்கூடாதென்றும்
எனது குழந்தையைத் தவிர
எவருடனும் நாலுவார்த்தை
பேசக்கூடாதென்றும் எதிர்பார்க்கும்
எமது சமூக மனங்களில்
ஆழமாய் பதிந்து கிடக்கும்
இந்த
எழுதப்படாத விதிகளால்
நான் காயப்படுத்தப்படுகின்றேன்.

**யாழ்வீரன்**



"பறவை பறக்க விளைதலும்
மழலை தவழ முயல்தலும்
பெண்மை பேச எழுதலும்
இயல்பென்று அறிக"

# இலக்கியப்பகிர்வு

# வேர்கள் துளிர்க்கும்

என்ற "தமிழவள்" கவிவரிகளுடன் வெளிவந்தது. வேர்கள் துளிர்க்கும் என்ற சிறு கதைத் தொகுப்பு. அது என்ன வேர்கள் துளிர்க்கும் என்று பார்த்தால் அதற்கும் "தமிழவள்" காரணம் கூறுகின்றார். "இனி....

வெட்டப்பட்ட போதும் வேர்கள் துளிர்விடத்தொடங்கும்.

வெந்நீர் ஊற்றப்பட்ட போதும் தளைத்தது ஓங்கும்."

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் மூன்றாவது வெளியீடு இது.

ஏற்கனவே "எழுதாத உன்கவிதை" என்ற கவிதை நூலையும் "கனவுக்கு வெளியேயான உலகு" என்ற சிறு கதைத் தொகுப்பையும் இந்த வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது.

கப்டன் வானதி வெளியீட்டகம் வெளியிடும் யாவுமே பெண்கள் தொடர்பானது என்பது ஒன்றும் புதினமான விடயம் அல்ல.

மறைந்திருக்கும் பெண் படைப்பாளிகள் அனைவரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதிக்க வேண்டும் என்ற எமதுபேரவா ஈடேற அனைவரும் ஒத்துழைத்து எம்மை ஊக்குவிப்பீர்கள் என தனது எண்ணங்களை இந்த வெளியீட்டகம் வெளிப்படுத்துகின்றது.

கூடவே ஒரு கேள்வியையும் வெளியீட்டகம் எழுப்புகின்றது. அதாவது தொகுப்பில் உள்ள கதைகள் குறித்து "இவைகளும் சிறுகதைகளா?" என்ற வினாக்கள் சிறுகதைகளை வாசிக்கும் போது உங்களிடம் எழலாம் என்ற கேள்விதான் அது.

பொதுவாக எங்கள் கதைகளை இவ்வாறு பல பேர் கேட்கின்றார்கள். ஆனால் இவ்வாறு கேட்பது ஒரு அபத்தமான கேள்வி என்றுதான் தோன்றுகின்றது. ஏனென்றால் இவைகள் கதைகள் என்பதையும், இவற்றின் தரங்களையும் தீர்மானிப்பது யார்? இவைகளில் கணிசமான கதைகள் சாதாரண கதைகளாக அமையலாம். கலைத்துவமும் குன்றிசப்பென்று இருக்கலாம். புதிய புதிய அனுபவங்களை, புத்துணர்வான எழுச்சிகளைத் தராமல் கவிழ்ந்து கிடக்கலாம்.

ஆனால் இவைகள் அதாவது இத்தகைய கதைகள் எழுதுபவர்களின் வலிகளை, வேதனைகளை, துன்பதுயரங்களை வெளிப்படுத்துகின்றன. அந்த உணர்வுகளை படைப்பாக்கம் செய்வதில் அவர்கள் போதிய திறமை குறைந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அதற்காக அவர்களுடைய அந்தவலிகளை யாரும் கொச்சைப்படுத்த முடியாது.

"வேர்கள் துளிர்க்கும்" தொகுப்பில் பதினைந்து கதைகள் உள்ளன. தமிழவள், யோகவதி, கலைச்செல்வி, சுரேந்திரன் அ.காந்தா, தீபா குமரேஷ், ஆதித்த நிலா, செ.புரட்சிகா, ச.சாரங்கா சி.ஜீவரஞ்சினி, சந்திரா அற்புதலிங்கம், அனுராதா பாக்கியராஜா, காயத்திரி ராஜேஸ்வரன், மலைமகள், அம்புலி, பூமாதேவி என்பவர்கள் அவற்றினை எழுதியுள்ளார்கள். இதில் கணிசமானோர் பெண்போராளிகள் என்பதும் குறிப்பிடத்தக்கவிடயம்.

இத்தொகுப்பில் உள்ள சிறப்பம்சம் என்னவெனில் ஒரே நோக்கமுள்ள, அதாவது ஒத்த கருத்துள்ள படைப்பாளிகள் எங்கள் மண்ணின் சகல பகுதிகளிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்டதுதான். மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி என படைப்பாளிகள் விரிந்த தளத்தில் உள்ளனர்.

தமிழவள் எழுதிய தென்னம்பிள்ளை கதையில் தென்னம்பிள்ளை நடும்வாணி சிங்கள இராணுவத்தை பார்த்து "இது வேர்விடும் வரைக்கும் தன்னும் இருக்கிறியோ தெரியாது" என்று மனதுக்குள் சொல்லுகின்றாள் என்பதன் ஊடாக, காட்டப்படும் விடயம் அர்த்தமுள்ளதாகிறது.

"பெற்றோரால் கூடத்தர முடியாத அன்பை, பாசத்தை, அரவணைப்பை கணவனால் தர இயலும் என்ற உண்மை சுமதிக்கு நன்கு புரிந்தது" என்று "முடிவு" சிறுகதையில் குறிப்பிடும் யோகவதி ஒரு பெண்ணின் மனவோட்டத்தை நன்கு சித்தரிக்கின்றார். எனினும் அந்தக் கதையில் பெண்ணின் வாழ்வு கேள்விக்குறியாகவே உள்ளது.

"விடிவு" என்ற கதை கலைச்செல்வி சுரேந்திரன் அவர்கள் எழுதியது. அந்தக்கதையில் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டு இருந்த தாய் செல்லடிபட்டு காயப்பட்ட நிலையில் எழுதியதாகச் சொல்லப்படும் கடிதம், இயல்பாக அமையவில்லை. அதில் ஒரு வகை செயற்கைத்தனம் இழையோடுகின்றது.

அ.காந்தாவின் "மைதிலி" ஊடாக ஒரு புதிய செய்தி எங்களுக்குக் கிடைக்கிறது.

"எட்டிப் பார்த்தால் உடைஞ்ச பங்கருக்குள் இருந்து ஒருத்தி பூஸ்டரை எரிச்சு ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தாள் என்றுதான் அது.

செ.புரட்சிகாவின் உடைந்த வீடு கதையில் வரும் "அனு"போல எத்தனையோ பேர் இருப்பார்கள். பாவம் அனு.

"அண்டைக்கு அனு இந்தப் பொம்மையைக் காட்டி எனக்குச் சொல்லுறாள்" நான் கவலைப்பட்ட மாதிரித்தான் இந்தப்பிள்ளையும் கவலைப்பட்டிருக்கும். அவையள் திரும்பி வரேக்குள்ள வீடு அப்படியே இருக்கிற மாதிரி இதுவும் இப்படியே இருந்தா எவ்வளவு சந்தோசமாய் இருக்கும் எண்டிட்டு அந்தப் பொம்மையைத் துடைச்சுக்கொண்டு நிண்டவள் இப்ப வளர்ந்திட்டாள்தான். எண்டாலும் தாக்கம் மனதில அப்படியே இருக்கு. எங்களைக் கண்டால் கவலைப்படுவாள் எண்டுதான் உன்னை இங்கால இழுத்துக்கொண்டு வந்தனான். வா நாங்கள் உடைஞ்ச வீடு தேடிப்போவம்.

சாரங்காவின் "அப்பாப் பூனை" பல அப்பாக்களின் குண நலன்களை வெளிப்படுத்துகின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**


# வெள்ளிநாத வாசகர்களே...

உங்களிடமிருந்து வெள்ளிநாதம் வாரஇதழில்
பிரசுரிப்பதற்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கிறோம.

சிறுகதை
கவிதை
கட்டுரை

என உங்கள் எண்ணப் பொறிகளுக்கு வடிவம்
கொடுத்து எமக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் படைப்புகளை எமக்கு அனுப்பவேண்டிய முகவரி.

ஆசிரியர், வெள்ளிநாதம்,
யாழ்.சாலை, கிளிநொச்சி.

மின்னஞ்சல் முகவரி: Weekly@Eezhanatham.com




## கைவண்ணம்



கு.சங்கீர்த்தனன்,
தரம்-6,
பு.விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# எமது கடலின் பசு

எமது கடலின் மிகப் பெரிய உயிரினம் எதுவெனக் கேட்டால் திமிங்கிலம் என்பீர் கள். ஆனால் அது தவறு. திமிங்கிலம் பூமியின் மிகப் பெரிய உயிரினம். ஆனால் எமது கடலின் தனித்துவ பெரிய உயிரினம் என்றால் அதற்கு பதிலாக அமைவது "டுகோங்" என்பதாகும். எமது கடலில் ஆவுளியா அல்லது கடற்பசு என இது அழைக் கப்படுகின்றது. இது உலகின் மிக அரிதான உயிரினம். உலகில் நமது பாக்கு நீரிணை கடலிலும் மன்னார் வளை குடாக்கடலிலும் அமெரிக்கா வில் ஹவாய்த்தீவுக்கடலிலும் மட்டும் இந்த கடற்பசு உள் ளது. உலகில் அருகிவரும் உயிரினம் இது. ஆனால் அண்மையில் யாழ்ப்பாணக் கடலில் சிறிலங்கா கடற் படையினரால் ஆவுளியா ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டது.

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் 3000 ஆண்டுகள் தொன்மையான காலத தில் கற்கோடரி ஒன்றின் பிடி ஆவுளியாவின் எலும்பில் பயன் படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.



சரி இந்த டுகோங் கடலுயி ரினம் பற்றிப் பார்ப்பம். இதன் ஆகக்கூடிய நீளம் 3 மீற்றர். நிறை 400 கிலோ கிராம் இதற்கு கடல பசு எனப்பெயர்வரக் காரணம் எது வெனத் தெரி யுமா?

இது தாவர உண்ணி. கடலில் உள்ள புற்கள், கடல் தாவரங்கள்தான் இதன் உணவு. ஆக அதனால்தான் இது கடற்பசு எனப்படுகிறது. பசுமாதிரி சாது வான, ஆபத்தை ஏற்படுத்தாத பிராணி இது. தாவர உண்ணி என்றதாலதான் பவளப்பாறைகள் நிறைந்த, தாவரங்கள் நிறைந்த எங்கடை மேற்குக்கடலில் இது வாழுது. இதின்ர அளவு கிட்டத் தட்ட எங்கடை தரை விலங்கான யானைகளின் அளவுக்குக் கிட்ட வானது. இதால தொடர்ந்து கடலுக்குக்கீழ நீந்தமுடியாது. காரணம் அதால தொடர்ந்து கடலுக்கடியில மூச்சுவிட ஏலாது. அதால குறிப்பிட்ட நிமி டத்துக்கு ஒரு தடவை அது கடலின் மேல்மட்டத்துக்கு வந்து சுவாசிக்கும். இதுக்குக் கண்பார் வைக் கூர்மைகிடையாது. ஆனால் கேட்டல் திறன் வலுதுல்லியம். இதன் ஆகக்கூடிய வாழ்நாள் காலம் 70 ஆண்டுகள். கர்ப்ப காலம் 15 மாதங்கள்.

## அன்னையே

பத்துத் திங்கள் எம்மை ~தன்
கருவறையில் சுமந்து
பெற்றெடுத்த~ அன்னையே
எம்மிடம் மிகவும்
அன்பு காட்டும் ~ அன்னையே
அன்புக்கு அடைக்கலம்
உன் இதயம்தானே~ அன்னையே
பண்புக்குப் பணிவானவளே
பாசத்தின் நட்சத்திரமே
உன் கடனை எப்படி நாம் தீர்ப்போம்
வழிகாட்டு எம்முயிர் அன்னையே.

சோ.தர்ஷா
தரம்-07A
உடையார்கட்டு, மகாவித்தியாலயம்.

## சொற்சிலம்பம் - 59

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | கோ | ம | பி | ர | ட் | ற |
| ச | கு | நீ | த | ள் | ர் | ல் |
| நீ | பா | ணை | நோ | ன் | க | ம் |
| றை | அ | ரி | ய | ச | ங் | மா |
| கை | ட் | த | தா | ரா | வ | ஜா |
| உ | ல | க | இ | ன | ம் | தே |
| சி | பூ | வ | ஓ | ச | வி | னை |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -57 இன் விடைகள்

01. டோக்கியோ.

02. தோமஸ் அல்வா -எடிசன்.

### சொற்சிலம்பம் - 57 இன் பரிசுக்குரியவர்

வ.யுதர்ஷன்,
தரம்- 4, மு.கலைமகள்-
வித்தியாலயம்,
முள்ளியவளை.

### சொற்சிலம்பம் - 57 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தெ.சோபியா, தரம்-05, யா/சாவகச்சேரி இந்து-ஆரம்பப்பாடசாலை.
02. ந.டயாழினி, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
03. ஜெ.பிரதீபா, ஸ்ரீ.சுப்பிரமணிய வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.
04. க.கபிலேஸ், தரம்-4, மு/பாலிநகர் மகாவித்தியாலயம், வவுனிக்குளம்.
05. மு.கிருபாகரன், பாலையடி, மல்லாவி.
06. அ.றோஜிதா, மு/நட்டாங்கண்டல் அரசினர், தமிழ்கலவன் பாடசாலை.
07. யோ.கலாரஞ்சினி, சரசாலைதெற்கு, சாவகச்சேரி.
08. பொ.மொழிச்செல்வம், மு/வள்ளிபுனம் க/உ, வித்தியாலயம்.

01. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை.

01) ....................................

02. ஆகாய விமானத்தை கண்டுபிடித்தவர்கள்.

01) ....................................

பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

சொற்சிலம்பம்-59
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

# எலியாரின் வண்டில்

**பகுதி-09**




நன்றி:- பன்டேடைம்ஸ்

(தொடரும்)

# வீடு

# பெண்களும் தலைமைத்துவமும்

தாய்வழிச்சமூக அமைப்பு முறையில் சமூகக்குழுக்களுக்கு பெண் தலைமைதாங்கினாள். பின்வந்த காலங்களில் பெண்ணின் தலைமை தாங்கும் பண்பு நலிவடைந்து இல்லாமல் ஆனது. இன்னும் பின்வந்த காலங்களில் பெண் தலைமைத்துவத்துக்கு அருகதை இல்லாதவள் என்றே கருத்துருவாக்கங்கள் செய்யப்பட்டன. பெண் அடங்கி ஒடுங்கிப்போனாள். பெண்ணின் பேச்சும் மூச்சும் வீச்சும் அடங்கிப் போயின. ஆண் உழைப்பவனாகவும் பெண் வீட்டிலிருந்து பணிவிடை செய்பவளாகவுமே இருந்தாள். பெண்ணின் வாழ்க்கைச்சக்கரம் சுவர் மூலைகளுக்குள்ளேயே முடங்கிப்போனது. எப்படியாக பயன்படுத்தப்படாத உறுப்புகள் காலப் போக்கில் இல்லாமற்போயினவோ, அதேபோன்று பெண்ணும் சமுதாயத்தில் பயனற்றுப்போகும் நிலை உருவாகியது. விதிவிலக்காக ஆற்றல்களை வெளிக்காட்ட முனைந்த பெண்களையும் தெய்வசக்தி பெற்றவளாக தெய்வமாக சமாதி கட்டிவிடப்பட்டது. காரைக்கால் அம்மையார் எனப்பட்ட புனிதவதி, ஆனை அடக்கிய அரியாத்தை. இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாக எடுத்துக் காட்டப்படக்கூடியவர்கள்.

இன்று எமது பெண்ணினம் விழிப்புணர்வு பெற்று பல சாதனைகளையும் படைத்துவருகின்றது என்ற பொழுதிலும், பெண் ஒடுக்குமுறை என்பது முற்றாக ஒழிந்துபோய் விடவில்லை. "பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலானசமூகப் பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப்புரையோடி நிற்கும் சமூகக்கொடுமை. இந்தச் சமூக அநீதியை வேரோடுபிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது." என எமது தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். பெண்ஒடுக்குமுறையை முற்றாக ஒழிக்க பாடுபடவேண்டியவர்களாக ஒவ்வொரு மனிதரும் உள்ளனர்.

பெண்ணுக்கான தலைமைத்துவப்பண்பு என்பது சிறுபருவத்தினரில் இருந்தே கருத்துருவாக்கம் செய்யப்படவேண்டும். சிறுபராயத்தில் பெண்களிடம் ஏற்படும் முனைப்புகளை முடக்கிவிட்டு, காலம் கடந்தபின் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. மாணவப்பருவத்திலிருக்கும் பிள்ளைகளுக்கு பாடநூல்கள் எதைக்கற்பிக்கின்றன? ஆண்பிள்ளைகள் பலமான பாலத்தைக் கட்டுவதாகவும், பெண்பிள்ளைகள் அவர்களுக்கு தேநீர் தயாரித்துக் கொடுப்பவர்களாகவுமே கற்பிக்கிறது. இந்நிலையில் பால்சமத்துவ விழிப்புணர்வு என்பது சாத்தியப்படக்கூடியது என்பது கேள்விக்குரியதாகிறது.

இன்றைக்கும் குடும்பத்தின் தலைவர் எனக்கோரப்படுகின்ற சில விண்ணப்பப் படிவங்களில் தாம் குடும்பத்தின் தலைவர்களென கையொப்பமிடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என சிலபெண்கள் அதிருப்தியுடன் இருக்கிறார்கள். சில இடங்களில் துணைவன் சமூமளிக்க முடியாதபட்சத்தில் - அல்லது இறந்துபோகின்ற பட்சத் தில் குடும்பத்தலைவர்களாக பெண்கள் கையொப்பமிட அனுமதிக்கப்படுவதாக அறியமுடிகிறது. இதன் பிரகாரம் தலைமைத்துவ உரிமை என்பது பெண்ணுக்கு இரண்டாம் பட்சமே என்பது உறுதியாக்கப்படுகிறது.

பெண்ணின் ஆற்றல்களும் ஆளுமைகளும் சரியானமுறையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறபொழுது, புரிந்துகொள்ளப்படும்போது பெண் தலைமைத்துவப்பண்பு நிலைகொள்ளும். சில குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்கு தலைமை ஏற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. நிர்வாகம் செய்தல், தீர்மானங்கள் எடுத்தல், செயற்படுத்துதல் போன்றவற்றில் பெண்பிள்ளைகளுக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பது குறைவானதாகவே இருக்கிறது. இந்த நிலையிலை தங்களை தன்னம்பிக்கை உள்ளவர்களாக நிலைநாட்டவேண்டிய பெண்கள் ஒதுங்கிக்கொள்ளுகிற தன்மையும் காணப்படுகிறது.

அநேகமான சந்தர்ப்பத்தில் ஐந்து ஆறு உறுப்பினர்களையுடைய குடும்பத்தில் ஆண் இறந்துவிட்டால் அல்லது குடும்பத்தைக் கை விட்டுச்சென்றுவிட்டால், 'இனி நீ என்ன செய்யப்போகிறாய்? ஆர் இனி உன்னைப் பாக்கிறது? மாதிரியான வினாக்களே தொடுக்கப்படுகின்றன. ஒரு குடும்பத்தை தலைமைதாங்க பெண்ணால் முடியாது என்கிற புரையோடிய சமூகத்தின் சிந்தனை வெளிப்பாடே இக்கேள்விகள். 'உன்னால் முடியும்' என்கின்ற உந்துதலை வழங்குபவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். குடும்பங்களில் ஆணைமிஞ்சும் வகையில் ஆற்றல் கொண்டபெண்களை 'ஆண்மூச்சு' கொண்டவர்களாகவும், "அடங்காப் பிடாரி"களாகவும் வர்ணிக்கிறது. இதனாலும் மனநெருக்கடிகளுக்குள்ளாகி பெண்கள் தலைமைத்துவத்தில் நாட்டங்கொள்ளாத தன்மைகளும் காணப்படுகின்றன. பெண் எப்பொழுதும் வலுவுள்ளவளாக, தன்னை மேம்படுத்திக் கொள்பவளாக இருந்தால் முன்னேற்றம், விடுதலை விரைவுபடும்.



**ஆதிலட்சுமி சிவகுமார்.**

## இப்படிச் செய்யலாம்...

*பிள்ளைகளுக்கு எட்டாத தூரத்தில் தீப்பெட்டிகளை வைக்க வேண்டும். பிள்ளைகளிடம் கிடைத்த தீப்பெட்டிகளால் எத்தனையே வீடுகள் தீயில் எரிந்து போயிருக்கின்றன.*

*வீட்டை பெருக்கிய உடன் குப்பையை மூலையில் சேர்த்துவைக்கக்கூடாது. குப்பையைச் சேர்த்து வைத்தால் பூச்சிகள் சேரும். வீட்டை சுத்தம் செய்தால் குப்பைகளை உடனுக்குடன் வெளியேகொண்டு போய் கொட்டிவிடவேண்டும்.*

* * *

*மூட்டைப் பூச்சிமருந்துகளை உபயோகிக்கும்போது கவனமாக இருக்கவேண்டும். அது விஷம். ஒரு அறையில் மூட்டைப் பூச்சி மருந்தை அடித்தால் அடித்து நான்கு மணி நேரம் கழித்துத்தான், குழந்தைகளை அந்த அறைக்குள்ளே அனுமதிக்கவேண்டும்.*

* * *

*முட்டை கெடாமல் இருக்கவேண்டுமானால் முட்டையின் மீது தண்ணீர் படாமல், முட்டையின் மீது ஈரம்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முட்டை எப்போதும் குளிர்ந்த இடத்திலேயே இருக்க வேண்டும். முட்டையைத் தண்ணீரில் போட்டுப் பார்த்தால் உடனே முட்டையிலுள்ள ஈரத்தைத் துடைத்துவிட வேண்டும். அல்லது முட்டையை உடனே பயன்படுத்தி விட வேண்டும்.*

* * *

*வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தசமயம் மோர் இல்லாமல் போய் விட்டால், வெதுவெதுப்பான பாலில் சிறிது உப்பை கலந்து எழுமிச்சம் பழத்தைப் பிழியுங்கள், வெதுவெதுப்பான மோர் கிடைத்து விடும்.*

* * *

## தேங்காய்ப் பால் பாயசம்




முற்றின தேங்காய் ஒன்றைத் துருவி வெந்நீரில் பால் பிழிந்து ஒரு பாத்திரத்தில எடுத்து வைத்துக் கொள்ளவும். பின்பு தேங்காய்த் துருவலை "அரைத்து மீண்டும்" அதைப் பால் பிழியவும்.

"அதை" அடுப்பில் வைத்து, பச்சரிசி 100கிராம் உடைத்து பாலில் போட்டு வேக விடவும். "அரிசி பதமானதும் இரண்டாவதாக எடுத்த பாலை" அதில் விட்டுக் கொதிக்கவிடவும். பின்பு நூறு கிராம் சர்க்கரை போட வேண்டும். கொதித்து பாயசம் போல் ஆனதும் வறுத்த முந்திரிப் பருப்பு, முந்திரியவத்தல் ஆகியவற்றைப் போடவேண்டும். ஏலக்காயைப் பொடிசெய்து போடவும்.

பின்பு "அடுப்பில் இருந்து இறக்கி சூடு சிறிது ஆறியதும் முதலில் எடுத்து வைத்திருக்கும் பாலை" அதில் விட்டு சிறிது நேரம் கரண்டியால் கிளறி விடவேண்டும்.

இளம் சூடாக இருக்கும் போது பாயசத்தைப் பருகலாம்.

## வெளியே வா

**பெண்ணே!**
**நீ நிம்மதியிழந்து**
**தலையணையில்**
**கண்ணீர் சிந்தியது**
**போதும்.....**
**சிறகு விரித்து**
**வெளியே வா!**
**சாகசத்தைக்**
**கற்றுக்கொள்**
**அப்போது உலகமே**
**உனக்குத் தலைவணங்கும்!**

எஸ்.வசந்தி,
வட்டக்கச்சி.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## பொறுப்போடு நடவுங்கள் பெற்றோரே..!

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு வீட்டிலுள்ள பெற்றோர்களும் ஒவ்வொரு விதத்தில் இருக்கின்றனர். இது எப்படி தம் பிள்ளைகளை பாதிக்கின்றன என அவர்கள் சிந்திப்பதில்லை. உதாரணமாக ஒரு குடும்பத்தில் இருக்கும் பெற்றோரைப் பார்ப்போம்.

அந்த வீட்டில் பிள்ளைகளுக்கு அன்றாடம் உண்ணும் உணவுக்கே திண்டாட்டம். இப்படியான நிலையில் அந்தப் பிள்ளை எப்படி தன் கல்வியை கற்க முடியும். இந்தக்குறையை நிவர்த்தி செய்வது யார். அம்மா அப்பா இருவரும். இருவரும் சீர் இல்லாத போது அங்குள்ள பிள்ளைகள் என்ன செய்ய முடியும். இவற்றை இருவரும் கவனத்தில் எடுக்க வேண்டும். கணவன் சீர் இல்லை என்றால் மனைவி தன்னிடம் இருக்கும் முயற்சியை வைத்து கொஞ்சப் பணமாவது சம்பாதிக்கலாம். அப்பணத்தை கொண்டு தன்னுடைய பிள்ளைகளின் பசியை குறைக்கலாம். தன்னிடம் இருக்கும் நற்பண்புகளையும் அப் பிள்ளைக்குப் புகட்டலாம். அப்பா என்பவர் மிகவும் பொறுப்போடு நடக்க வேண்டும். தன்னை நம்பியே தன் மனைவி மக்கள் உள்ளனர் என்பதை சிந்திக்கவேண்டும். உழைக்கும் பணத்தை குடித்து அழித்துவிட்டு வந்து வீட்டில் கண்டபடி வார்த்தைகளை கொட்டினால் எப்படி பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்ட முடியும். அப்பாவின் வாயில் இருந்து வரும் கெட்ட வார்த்தைகளே பிள்ளைகளின் மனதில் பதிந்து மனவிரக்தியை ஏற்படுத்தும். பெற்றோர் மீது வெறுப்பு ஏற்படும். இவற்றினை முடியுமான வரை தவிர்ப்பது பெற்றோரே. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பதுபோல் சிறு வயதில் பழகும் பழக்கமே பிள்ளைகள் வளர்ந்ததும நடைமுறைக்குவரும்.

வீட்டினில் இருக்கும் ஆண்பிள்ளை பெண்பிள்ளை இருவருக்கும் சமமான பாசத்தினை நாம் வழங்கவேண்டும். உழைத்துத்தரும் பிள்ளைக்கு ஒரு உரிமை மற்றவர்களுக்கு வேறு என பாரபட்சம் காட்டுதல் கூடாது. முக்கியமாக கணவன் மனைவி இருவரும் தம் குழந்தைகள் முன் நிலையில் சண்டை பிடித்தல் கூடாது. தேவையில்லாமல் அயலவர்களின் கதைகளை சிறுவர் முன் கதைக்கக்கூடாது. இப்படியான கெட்ட பழக்கங்களை பெற்றோர் தவிர்த்தால் பிள்ளைகளும் அவற்றை பழக வாய்ப்பில்லை. படிப்புப் படிப்பு என்று விழுந்து விழுந்து பாடத்தை மட்டும் புகட்டும் நீங்கள் பண்பான பழக்க வழக்கங்களையும் சேர்த்து புகட்டிவிடுங்கள். உங்கள் செல்வங்கள் பண்பான கல்வியைப் பெற்று நற் பிரஜைகளாக இவ் உலகில் உலா வருவார்கள். அடுத்து சில பெற்றோர் பணம் பணம் என்று பறக்கின்றனர். தம் பிள்ளைகளோடு 5 நிமிடம் எனினும் செலவுசெய்து மகிழ்வாக அவர்களை வைத்திருப்பதில்லை. இதனால் அப் பிள்ளையின் மனம் சோர்வடைந்து பாசத்திற்காக ஏங்கும். மூளை வளர்ச்சியும் பாதிக்கலாம். பெற்றோரே! பணம வாழ்க்கைக்குத் தேவை தான் பணமே வாழ்க்கை என்று எண்ணி வாழ்வை பாழ்படுத்தி விடாதீர்கள். பயனற்ற பணத்தால் மனஅமைதி கிடைக்காது. உங்கள் மழலையின் முகத்தைக் கொஞ்சம் மலரச் செய்யுங்கள் இதை விட வேறு சொர்க்கம் உண்டோ உங்களுக்கு. ஆகவே பெற்றோர்களே பொறுப்போடு நடவுங்கள். பொன்னான சிறார்களின் பொன் போன்ற வாழ்வு மிளிர்வது உங்கள் கையில்.

**சு.சிவாஜினி**




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—20

பெயர்:..............................................

முகவரி:..............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# நெருப்புக்காய்ச்சல் அபாயகரமான தொற்றுநோய்

மிக நீண்டகாலமாக, முற்று முழுதாக இவ்வுலகிலிருந்து அழித்தொழிக்க முடியாத தொற்று நோய்களில் ஒன்றாக நெருப்புக் காய்ச்சல் இருந்து வருகிறது. சிறுவர், பெரியோர், முதியோர் என எல்லாப் பருவத்தினரையும், இருபாலாரையும் தாக்கக் கூடிய கொடிய தொற்றுநோய் இது. நெருப்புக் காய்ச்சலுக்கு முறைப்படி சிகிச்சை பெறாது விட்டால் உயிராபத்து ஏற்படும்.

கொலராவுக்கு அடுத்த படியாக அதிக அச்சுறுத்தலைத் தரக்கூடிய குத வாய் வழி (FECO ORAL) தொற்றுநோயாக இது விளங்குகிறது. அதாவது, நோயாளி ஒருவரின் மலத்தோடு வெளியேறும் கிருமி, உணவு, நீர் முதலியவற்றோடு கலந்து வாய்வழியாகச் சுகதேகியை அடைந்து தொற்றுதலை ஏற்படுத்துகிறது. குதவழி வெளியேறும் கிருமிகள் உணவையும், நீர் நிலைகளையும் அடைவதற்கு இலையான், நாய், பறவைகள் முதலான விலங்குகளும் உடந்தை புரிகின்றன. சுற்றுக் கட்டில்லாத நீர்நிலைகளை இக் கிருமிகள் வெள்ளத்தோடு சென்றடையலாம்.

இந்நோயை ஏற்படுத்தும் கிருமி பக்ரீரியா வகையைச் சேர்ந்த பரிலஸ் இன சல்மொனெல்லா (SALMONELLA)ஆகும். இதில் ரைபி (TYPHI), பரா ரைபி A (PARA TYPHI A), பரா ரைபி B (PARA TYPHI B) என்று மூன்று பிரிவிலடங்கும் கிருமி வகைகள் நோயை ஏற்படுத்தக் கூடியன என இனம் காணப்பட்டுள்ளது.

இக்கிருமிகள் பொதுவாக உணவுத் தொகுதியிலேயே தொற்று தலை ஏற்படுத்துகிறது. உணவுக் குழாயூடாகச் செல்லும் சல்மெனெல்லா கிருமி, சிறுகுடலை அடைந்து அதன் உட்புறமாக உள்ள மெலிய மென் சௌவான மேலணியைத் துளைத்து உட்புகுந்து பெருகுகின்றது. இங்கிருந்து குருதியுடன் சேர்ந்து ஈரல், பித்தப்பை, சிறுநீரகம், மண்ணீரல் முதலிய பாகங்களுக்கும் செல்கின்றது. சிறுகுடலிலுள்ள பேயரின் பொட்டுக்கள் (PAYER'S PATCHES) என்ற பகுதியில் தொடர்ந்து பெருகி அழற்சியை உருவாக்குகின்றது. இந்த நிலையில்தான் ஒருவருக்கு நெருப்புக் காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும்.

சுகதேகியினுள் நோய்க் கிருமி சென்றடைந்து ஒருவாரம் முதல் மூன்று வாரங்களுக்கிடையில் நோயின் அறிகுறிகள் தோன்றும். இக்கால இடைவெளியையே நோயரும்புக் காலம் என்கிறோம்.

நெருப்புக் காய்ச்சலின் அறிகுறியாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.அதிகரித்துவரும் நீடித்த கடும் காய்ச்சல்.
2.உக்கிரமான முன்பக்க தலையிடி.
3.பிரட்டலும், வாந்தியும்.
4.வயிற்று நோவு-ஈரல் பகுதி நோவு.
5.மலங்கழித்தலில் மாறுதல்கள்.
6.மண்ணீரல் வீக்கம். (SPLEENO MEGALY).
7.சிலரின் மார்பு, வயிற்றுப் பகுதியில் இளஞ்சிவப்புப் புள்ளிகள்
8.மாறாட்டம்-(DILIRIUM).

இந்நோயாளர்களில் காய்ச்சல் கடுமையாகவும் தொடர்ச்சியாகவும் இருக்கும். காய்ச்சல் வெப்ப நிலை தினமும் அதிகரித்தவண்ணம் இருக்கும். ஏனைய காய்ச்சல்களில் ஏற்படுவதுபோல நாடித்துடிப்பு அதிகரிப்பு அதிகமாக ஏற்படமாட்டாது.

நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு சிகிச்சையளிக்கும் போது சிகிச்சை நிலையத்தில் வைத்தே சிகிச்சையளிக்க வேண்டும். நோய் குணமாக



இரண்டு வாரங்கள் தொடக்கம் ஒரு மாதம் வரை எடுக்கும். சிகிச்சையின் போது உடலின் போஷாக்கு, பராமரிப்பு என்பனவற்றைப் பேணுதல் மிகவும் அவசியம்.

நெருப்புக் காய்ச்சலின் போது சிக்கலான சில விளைவுகளும் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

பின்சிறுகுடலில் ஏற்படும் அழற்சி பெரிய புண்ணாகி, குடல் சுவரில் துளைகள் ஏற்படலாம். சுவரில் உள்ள குருதிக் குழாய்கள் துளையிடப்படுவதால் இரத்தப் பெருக்கு ஏற்படலாம்.

இத்துளைகள் ஊடாக வெளியேறும் கிருமி வயிற்றறையிலிலுள்ள சுற்றுவிரி தொடுப்பு இழையத்தில் அழற்சியை ஏற்படுத்தி அதனால் மரணத்தையும் ஏற்படுத்தலாம். இவ்வாறான நிலைகள் ஏற்படக் கூடாது என்பதற்காகவே நெருப்புக் காய்ச்சல் என இனங்காணப்பட்டவர்களில் நீராகாரம் மட்டுமே கொடுக்கப்படுகிறது. கட்டியான உணவுகள் புண்களைத் தாக்கி துளைகளை ஏற்படுத்த உடந்தையாகக் கூடியன.

நீண்ட நாட்களாக உரிய சிகிச்சையின்றி இருந்தால் இக்கிருமிகள் திரும்பவும் குருதியில் கடும் தொற்றை ஏற்படுத்தி செப்ரி சீமியா (SEPTICAEMIA) என்ற குருதி பழுதாகும் நிலையும் ஏற்படலாம். இதனால் அதிகமான இறப்புகள் ஏற்படுகின்றன. எனவே நெருப்புக் காய்ச்சலுக்கு முறையான சிகிச்சையை வைத்தியரின் நேரடிக் கண்காணிப்பில் பெறுவது மிகவும் முக்கியமானது. நெருப்புக் காய்ச்சல் நோயை இனம் காண SAT இரத்தப் பரிசோதனை உதவும். இந்நோயை உறுதிப்படுத்துவதற்கு BLOOD CULTURE -அதாவது நோயாளியின் குருதியை எடுத்து வளர்ப்பூடகங்களில் வளர்த்து கிருமியை இனம் காணும் முறையே சிறந்தது ஆகும்.

இந்நோய்க்குச் சிகிச்சையளிக்கக் கூடிய நுண்ணுயிர்க் கொல்லி மருந்தாக குளோறம் பெனிக்கோல்-(CHLORAM PHENICOL)என்ற



மருந்து நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த மருந்தாக இருந்து வந்த இந்த மருந்தின் முறையற்ற பாவனையினால் அண்மைக் காலமாக இம்மருந்து செயலிழந்து வருவது தெரிகிறது. DRUG RESISTANT - அதாவது கிருமி மருந்துக்குப் பழக்கப்பட்டுப் போகும் நிலையே இதற்குக் காரணம்.

அமெக்சிலின் (AMOXY CILLIN) மருந்தும் ஓரளவு இந் நோயைக் குணப்படுத்தக் கூடியது. நோய் உக்கிரம் குறைந்த பின்னர் இதன் பயன்பாடு சிறப்பாக இருக்கும்.

அண்மைக்காலமாக நெருப்புக் காய்ச்சலுக்குச் சிறந்த மருந்தாக சிப்றோபுளொக்சசின் (CIPROFLOXACIN) என்ற மருந்து குணமளிக்கின்றது. இம்மருந்துகளை சாதாரண நோய்களுக்குப் பயன்படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

சில நெருப்புக்காய்ச்சல் நோயாளர்களில் பூரண சிகிச்சைக்குப் பின்னரும் மறுபடியும் நெருப்புக் காய்ச்சல் வருவதுண்டு. இதை RELAPSE என்கிறோம். பித்தப்பையில் கிருமிகள் அழியாது தேங்கியிருந்து விட்டு மீளவும் பெருகி நோயை மறுபடி ஏற்படுத்துகிறது. இப்படியானவர்களில் மிக நீண்ட நாட்கள் சிகிச்சை தேவைப்படும். இப்படியானவர்கள் நீண்டநாள் காவிகளாகவும் இருந்து நோய் பரவவும் ஏதுவாக இருப்பர்.

நெருப்புக்காய்ச்சல் பரவாமல் தடுப்பு முறைகள் கடைப்பிடிக்கப் பட வேண்டும். நோய் வந்தவர்களின் குடும்ப உறவினர்களுக்கும்,நெருங்கிப் பழகுபவர்களுக்கும் TAB VACCINE என்ற தடுப்பூசி போட வேண்டும்.

வழமையான சுகாதாரப் பழக்க வழக்கங்கள் நோய் பரவலைத் தடுக்கப் பெரிதும் உதவும். நாம் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்வருமாறு பட்டியவிடலாம்.

1.கொதித்து ஆறிய நீரைப்பருகுதலும், உணவை சமைத்தவுடன் உண்ணுதலும்.
2.உணவை இலையான் மொய்க்காதவாறு மூடி வைத்துப் பாவித்தல்.
3.நீரடைப்பு மலகூடங்களிலேயே மலம் கழித்தல். மலம் கழித்தபின் கைகளைச் சவர்க்காரம் கொண்டு கழுவுதல்.
4.சாப்பிட முன் சவர்க்காரம் கொண்டு கைகழுவுதல்.
5.பாதையோரம் விற்கப்படும் உணவுகளை உண்ணாதிருத்தல்.
6.பழவகைகளை கழுவிய பின் உண்ணுதல்.
7.ஈ பெருகுவதை தடுத்தல்.
8.குழந்தைகளின் மலத்தை உடனும் அகற்றி நீரடைப்பு மலகூடத்தில் இடல்.
9.நோயாளரிடமிருந்து விலகி இருத்தல்.
10. சுகாதாரக் கல்வி மூலம் சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல்.

நாம் இவ்வாறான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும், தனிநபர் சுத்தத்தையும், சுற்றுப்புறச் சுத்தத்தையும் பேணுவதன் மூலமும் நெருப்புக்காய்ச்சல் நோயிலிருந்து மாத்திரமல்ல, ஏனைய தொற்று நோய்களிலிருந்தும் எம்மைக் காத்துக் கொள்ள முடியும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**ச.முருகானந்தன்**

---

# நலம் தரும் நூலகங்கள்

*"தனித்தமைந்த வீட்டிற் புத்தகமும் நானும்*
*சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்*
*இனித்த புவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்.*
*இசைகேட்டேன்! மணம்மோந்தேன்! சுவைகளுண்டேன்*
*மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்*
*மகாசோதியிற் கலந்ததெனது நெஞ்சும்!*
*சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்*
*தருமுதவி பெரிது மிகப் பெரிது கண்டீர்"*

என்று புத்தகசாலையின் பெருமைபற்றி பாவேந்தன் பாரதிதாசன் அழகாகக் கூறுகின்றார். ஒரு மனிதன் கல்வியால் வளர்ந்து கருத்தால் உயர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைப்பதுவும் இதுவேயன்றோ?

ஒரு நாட்டின் அபிவிருத்தி நூல் நிலையங்களிலேயே தங்கியுள்ளது எனலாம். எத்தனை எத்தனை நூல்நிலையங்கள் உதயமாகின்றனவோ அத்தனை பெரிய சமூக மாற்றத்தைக் காணமுடியும். சிறுவர். குறுநகை மங்கையர் குமரப்பருவத்தினர், தொண்டுகிழவர் எனப்பல்வேறு தரத்தினருக்குமான நூல்கள் அனைத்தையும் நூலகங்களிலேதான் பெறமுடியும். இவர்களனைவரதும் வாசிக்கும் பழக்கத்தைச் சிந்திக்கும் மனப்பாங்கினைத் தூண்டிவிடும் உன்னதப் பணியை நூலகங்கள் ஆற்றிவருகின்றன. அரிது அரிது மானிடராதல் அரிது - அதனிலும் அரிது கூன்குருடு செவிடு நீங்கிப்பிறத்தல் என்று கூறுவார் ஔவையார். இத்தகு சிறப்புடைய மானிட ஜென்மம் எடுத்த நாம் ஒவ்வொருவரும் நூலகம் என்றதொரு இனிய உறவைச்சிக்கெனப் பற்றிக்கொள்ள வேண்டும். அங்கே அற்புதமாக அமைதியாக எமக்காகவே காத்திருக்கும் இனிய நூல்களுடன் உறவாட வேண்டும் சாணை பிடிக்கப்பிடிக்க ஜொலிக்கும் வைரம் போல தினமும் வாசித்தல் வழக்கத்தினால் ஒளி வீசிச்சிறக்கலாம். எதனை வாசிக்க வேண்டும் என்று ஔவையார் கூறும்போது,

*"கல்வி கரையில கற்பவர் நாள்சில*
*மெல்ல நினைக்கிற்பிணிபல - தெள்ளிதின்*
*ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்*
*பாலுண் குருகிற் தெரிந்து"*

(21ஆம் பக்கம் பார்க்க)

**மணிமேகலை குமாரசாமி**

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் 9ஆம் ஆண்டு நினைவும்



தாயின் மடியில் 30-07-1977

தாயக மண்ணில் 02-12-1995

## லெப். நாதன்

முத்துக்குமாரசாமி சசிகுமார்
8ஆம் வட்டாரம்,புங்குடுதீவு.

**(15-09-2004 நிகழ்வு நாள்)**

தானைத் தலைவனின் படையணி சேர்ந்து சிறுத்தை வீரனாய் யாழ்நகர் சென்று செருக்களம் தன்னில் இன்னுயிர்தன்னை ஈகமாய் கொடுத்த வீரமகனே நாதனே! சசிகுமாரா! உன்நினைவுக்கல் நாட்டிய நாற்பத்தைந்தாம் நாளில் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்கினோம். இன்று 29.10.2004 எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்வு நடைபெறும் விலாசம்:
த.கிருஷ்ணமூர்த்தி
சித்தப்பா,
2ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

அன்புடன் நினைவு கூரும்
பெற்றார்,
சகோதரசகோதரிகள்,
அத்தான்மார்,
சித்தப்பா குடும்பத்தினர்.

(5205)


(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சலுகைகளை வெளிப்படுத்துவதும் அறிக்கைகளை விடுப்பதுமான கட்டங்கள் இலங்கை விவகாரத்தை பொறுத்தவரை எப்போதோ மாறிவிட்டது.

பெரும் முயற்சியாக எடுக்கப்பட்ட இந்த சமாதான முயற்சியானது இன்று ஒரு இலக்கை எட்டாமல் இருப்பதானது எப்போது வேண்டுமானாலும் சமாதான முயற்சிக்கு பங்கத்தை ஏற்படுத்திவிடலாம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆகவே யப்பானிய தூதுவர் யசூசி அஹாசி அவர்களின் பயணத்தின் போது சிறிய அளவிலான அபிவிருத்தி முயற்சிக்கு உதவுவது தொடர்பாக ஆராயப்படலாம் என வெளியாகும் செய்திகளின்படி இது அரசுக்கு அனுகூலமானதான பயணமாக அமையுமாயின் அரசின் இராணுவ நலன் சார்ந்து தயாரிக்கப்பட்டிருக்கும் வரவு செலவு செலவுத்திட்டத்தை பாதுகாத்தோடு அரசை தொடர்ந்தும் சமாதான முயற்சியில் மேம்போக்கான வகையில் செயற்பட ஊக்குவிப்பதாகவும் அமையும்.

ஆகவே எந்த இராஜ தந்திரிகளினதும் பயணமாக இருந்தாலும் சமாதான முயற்சியின் நலன் சார்ந்து அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகமைய வேண்டும்.

---

(14ஆம்பக்கத் தொடர்ச்சி...)

"துன்பங்களை ஏற்கப் பழகுவதே அவற்றை வெல்வதற்கான முதற்படி என்று அம்மா சொல்லுவார். எத்தனையோ அம்மாக்கள் இப்படி ஏற்றுப் பழகியதால்த்தான் "அப்பாப் பூனைகள்" போல பல பூனைகள் தோன்றுவதற்குக் காரணம். ஆனால் எங்கள் வாழ்வியல் மரபுகளும் பெண்களுக்கு இவ்வாறான சமரச தன்மையை ஊட்டி வளர்த்துவிட்டன.

சி.ஜீவரஞ்சினியின் அவளுக்கென்றொரு வதி சிறுகதையின்.

"மூத்ததம்பி அகிலனும் இப்படித்தான் சிணுங்குவான். இவனை விட அவள் எத்தனையோ மடங்கு கெட்டிக்காரன். அவன் குடும்பத்தின் இலட்சியத்தை பெரிதாக மதித்தான் தான் எனினும் காலத்தின் கட்டளை அவனை வேறோர் இலட்சியத்திற்கு இட்டுச் சென்றது." என்று முதலில் கூறப்படுகிறது.

பிறகு "தம்பி அகிலன் ஒரு போராளி" என்று மறுபடி கூறப்படுகிறது. இவ்வாறு கூறுவதன் மூலம் முதலில் விஸ்தாரமாக கூறப்பட்டதன் அர்த்தம் வீணாகிப் போய் விடுன்றது.

சந்திரா அற்புதலிங்கம் எழுதிய சொன்னால் தான் புரியுமா சிறு கதையில்

"அட ஒருத்தராச்சும் பிடி கொடுக்க மாட்டேங்கிறாங்க. என்ன ஸ்டைலாப்போறா அந்தப் பொண்ணு. ஒரு படமாச்சும் புடிச்சிருந்தா..." அங்கலாய்த்துக் கொண்டே நகர்ந்தார்கள் அந்த இந்தியப் பத்திரிகையாளர்கள்"

என்று வருகின்றது. உண்மையில் இந்தியாவின் பத்திரிகையாளர்கள் இப்படித்தான் கேள்வி கேட்பார்கள்.

"என்று தணியும் இந்தத் தாகம்" சிறுகதையினை எழுதியவர் அனுராதா பாக்கியராஜா. மட்டக்களப்பைக் களமாகக் கொண்ட கதை. மட்டக்களப்பு மக்களின் துன்ப துயரங்களில் சிறியபகுதியையேனும் வெளிப்படுத்துகிறது.

காயத்திரி இராஜேஸ்வரனின் கதை போட்டி ஒன்றில் பரிசு பெற்ற கதையாக இருக்க வேண்டும். வசதி உள்ள வசதியற்ற மக்களின் மனோபாவத்தை வெளிப்படுத்துகின்றது.

மலைமகள் எழுதிய 'அனுமதி' கதையில் முதல்பந்தியில் முதல் இரண்டுவரிகளிலும் "தன்பாட்டில் போய்க் கொண்டிருந்தது." என்ற சொல் இரண்டு தடவை வருகின்றது. இது போன்ற தவறுகள் கதையின் வேகத்தைத் தடுக்கும்.

மற்றது இராணுவத்தைப் பார்த்து மனத்தில்கொதித்துக் கொண்டு இருக்கும் போராளி. "சேர் எங்கடை வீடு மணியந்தோட்டத்தில் இருக்குது." என்று சேர்போட்டுசொல்லுவது சரியா?

அம்புலி எழுதிய மனக்கூண்டு கதையில் பின்வருமாறு வருகின்றது.

"தன்னோடு படிப்பிக்கும் சுபா ரீச்சருக்கு வீட்டில் அம்மா,அப்பா, தங்கைகள் என்று ஒத்தாசையாக இருப்பதும் வயது போன பரமேசு ரீச்சரை அவவின் பென்ஷன் எடுத்த கணவன் வந்து இறக்கி, ஏற்றிப போவது, மதியச் சாப்பாடு கொண்டு வருவது என்று ஒத்தாசையாக இருப்பதைப் பார்க்க அவளுக்குப் பொறாமையாக இருக்கும்."

உண்மையாக எத்தனை பெண்களுக்கு இப்படியாக அமைகிறது.

# செஞ்சிலுவைச் சங்க அழைப்பு

*கீழே பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.*
*புக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்)*

சொக்கநாதன் பேரம்பலம் (வட்டக்கச்சி)
சுகுணராஜா ராஜேஸ்வரி (இல.95 கண்ணகிபுரம் அக்கராயன்)
லோகநாதன் சியாமளாதேவி, செல்வபுரம், முல்லைத்தீவு.
ஜோ. முனீஸ்வரி கச்சேரி அருகில் கிளிநொச்சி.
கணேஸன் தனபாக்கியம் (அகிலன் வீதி, உதயநகர் கிளிநொச்சி)
செல்லத்துரை திரேசம்மா (31A, திருநகர் வடக்கு, கிளிநொச்சி)
அஜந்தன் (புளியம்பொக்கணைச் சந்தி, புளியம்பொக்கணை)
சிதம்பரப்பிள்ளை சிவாஜினி (மே/பா தர்மலிங்கம், கோரக்கன்கட்டு, பரந்தன்.
சின்னத்தம்பி சின்னப்பிள்ளை, நாகதம்பிரான் ஆலயம் அருகில், அரசர்கேணி, பளை.
ராஜா விஜயராஜா (இந்திராபுரம், பளை)
செல்வராஜா முத்துலக்ஷ்மி, இல. 265, ஆனைவிழுந்தான்
சிவகுமார் செல்வநிதி (புனித அந்தோனியார் ஆலயம் அருகில், கலைவந்தான்கேணி.
செல்வநாயகம் அருணாதேவி, நெத்தலியாறு, மேற்கு, 10ஆம் கட்டை, விசுவமடு
சுப்பிரமணியம் பரமேஸ்வரி, அம்பலப்பெருமாள், அக்கராயன்.
சிவராஜா கமலா (பாலர் பாடசாலை அருகில் கண்ணகிபுரம், அக்கராயன்)
வீராசாமி மகேஸ்வரி (ஐயனார் களஞ்சியம், 8ஆம் கட்டை, அக்கராயன்)
மகேந்திரன் விஜயராணி (சுஜீபா களஞ்சியம் தேவாலயம் அருகில், 8ஆம் கட்டை, அக்கராயன்)
மகாலிங்கம் கனகம்மா (அம்பலப்பெருமாள் சந்தி, அக்கராயன்)
திருமதி சுகுமார் (மாயவனூர், அகதிகள் முகாம், வட்டக்கச்சி)
திருமதி செல்வராஜா (இல.14 புதுக்காடு முகாம், இராமநாதபுரம் வட்டக்கச்சி)
நடராஜா சாந்தி (புனித கன்னியர்மடம், 8ஆம் கட்டை, அக்கராயன்)
வசந்தகுமார் பரமேஸ்வரி (ஊற்றுப்புலம், கோணாவில்)
றெங்கன் இராஜலிங்கம், பிள்ளையார் கோவில் சந்தி, கோணாவில் வீதி, அக்கராயன்)
இராசையா கனகம்மா, கிருஸ்ணன் கோவில், ரயில் றோட் மாங்குளம்.
சரவணமுத்து செல்வநாயகம், இல. 698, 7ஆம் யூனிற், இராமநாதபுரம், வட்டக்கச்சி)
விமலதாஸ் மேரி திரேசா, இடைக்காடு, மாத்தளன்.
செல்வரட்ணம் மனோகரன் (சிவன் வீதி, சிவநகர், கிளிநொச்சி)
ஆறுமுகம் சுரேஸ் (40 வீட்டுத் திட்டம், 14ஆம் வாய்க்கால், ஐயன்கன்குளம்)
தில்லை நாகேஸ்வரி (ரகு குடியேற்றத் திட்டம், சுதந்திரபுரம், உடையார்கட்டு)
நமசிவாயம், (மகாதேவா ஆச்சிரமம், புதுமுறிப்பு, கிளிநொச்சி)
கணேஸ் ஜெயலட்சுமி (8ஆம் கட்டை, அக்கராயன்)
கதிர்காமநாதர் லலிதாதேவி (மே.பா. தர்மலிங்கம் இல. 483, திருநகர், மல்லாவி)
தம்பிராஜா புஷ்பலதா (பள்ளமடு)
நவரத்தினம் சத்தியபாமா (பிள்ளையார் கோவில் சந்தி, கரும்புத்தோட்டம், ஸ்கந்தபுரம்)
முருகையா மரியம்மா (சுபாஸ் குடியிருப்பு, அக்கராயன்)
வசந்தி அந்தோனியம்மா (இல. 05,2ஆம் பாடசாலை ஒழுங்கை, மணியன்குளம், அக்கராயன்)
பகீரதி (கண்ணன் ஆலயம் அருகில், மணியன்குளம், அக்கராயன்)
சண்முகம் (கோணாவில் பாடசாலை அருகில், அக்கராயன்)
கந்தையா சிவமோகன் (8ஆம் கட்டை, இம்மாஸ் நகர், அக்கராயன்)
வசந்தகுமாரி (பேக்கரி ஒழுங்கை, ஊற்றுப்புலம்)
மரியசூசைநாதன் (இல. 136 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி)
சின்னையா சந்திரன் (8ஆம் கட்டை இம்மாஸ் நகர், அக்கராயன்)
கந்தையா நடராஜா, பழைய பொலிஸ் நிலைய வீதி, துரை கடையடி, அக்கராயன்.
சரோஜா (தம்பி குடியிருப்பு, 8ஆம் கட்டை, அக்கராயன்)
லக்ஸ்மி (மரப்பாலம் அருகில், கோணாவில்)
இராமசாமி இருதயமலர் (வலைப்பாடு அல்லது நாச்சிக்குடா)
மனோகரன் (அமலன் புகைப்பட நிலையம், கிளிநொச்சி)
இரவீந்திரன் திருமேனி (A2, யூ.என்.எச்.சி.ஆர். முகாம், தட்சணாமருதமடு)
யோகேஸ்வரன் துஸ்மிதா (D 100, ORSC, தட்சணாமடு)
ஈஸ்வரி (இல.595, கந்தபுரம்,கிளிநொச்சி)

(5220)

# தொடர்பு கொள்க

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவானது கீழே குறிப்பிட்டுள்ள நபரை பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

***கிளிநொச்சி, மல்லாவி, வவுனியா, யாழ்ப்பாணம் அல்லது புதுக்குடியிருப்பு.***

திருமதி தேவலிங்கம் குமுதினி (பிறந்த இடம் கோப்பாய், யாழ்ப்பாணம்)
தகப்பனின் பெயர்: புண்ணியமூர்த்தி
தாயின் பெயர் : யோகமலர்
(முன்னைய விலாசம்: கலம்பரை, கோப்பாய் வடக்கு,யாழ்ப்பாணம்.)

*பமீலா ஸ்ரதாகிஸ்,*
*உபபேராலய பதில் தலைமை அதிகாரி,*
*செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு,*
*மல்லாவி.*

(5219)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 04**

**பகுதி -20**

நாங்கள் விளையாட்டு அறைக்குள் சென்றபோது, டிப்ஸ் அறையில் மெதுவாக நடந்தபடி சுற்றிவந்தான். பொருட்களை தொட்டுக்கொண்டும், மற்ற விளையாட்டறையில் செய்தது போன்று கேள்வித்தொனி ஒலிக்கும் குரலில் அவற்றின் பெயர்களை கூறிக்கொண்டும் வந்தான்.

"மணற்பெட்டி? வர்ணத்தட்டு? கதிரை? தீந்தை? பொம்மை? பொம்மைவீடு?" என இந்த வகையிலே அவன் தொட்ட பொருட்கள் ஒவ்வொன்றினதும் பெயர்களைக் கூறினான். பின்பு கொஞ்சம் மாற்றிக் கொண்டான். "இது ஒரு காரா? இது ஒரு கார். இது மணலா? இது மணல். இது தீந்தையா? இது தீந்தை."

அறையில் ஒருமுறை அவன் சுற்றி வந்த பின், "ஆமாம். இந்த அறையில் வேறுபட்ட பல பொருட்கள் இருக்கின்றன.அல்லவா? அவற்றுள் அநேகமானவற்றை நீங்கள் தொட்டீர்கள். அவற்றின் பேர்களையும் சொன்னீங்கள்" என்று சொன்னேன்.

"ஓமோம்" என்றான் மென்மையாக. அவனை வேகப்படுத்த நான் முயலவில்லை. சுற்றிப் பார்க்கவும் பொருட்களை ஆராயவும் நேரம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனது உலகத்தை தனது வழியிலேயே அலசி ஆராய, நேரம் வேண்டும்.

சிறிது நேரத்துக்குப்பின், "டிப்ஸ் குஞ்சு! உங்கட தொப்பியையும் கோட்டையும் கழற்றேல்லையா?" என்று அவனிடம் கேட்டேன்.

"ஓமோம்" என்றவன், "உன்ர தொப்பியையும் கோட்டையும் கழற்று டிப்ஸ். தொப்பியை கழற்று கோட்டைக் கழற்று, டிப்ஸ்" என்று கூறினாலும் அவற்றை செய்ய எந்த முயற்சியையும் எடுக்க வில்லை.

"உங்கட கோட்டையும் தொப்பியையும் கழற்ற உங்களுக்கு விருப்பம் தானே?" என்று அவனிடம் கேட்ட நான், "அதுகளைக் கழற்றி விடுங்கோ" என்றேன்.

"கையுறைகளையும் பூட்சுகளையும் கழற்றப்போறன்" என்றான் அவன்.

"நல்லது. கையுறைகளையும் பூட்சுகளையும் கழற்றி விடுங்கோ." பதிலுக்கு நான் சொன்னேன்.

"ஓமோம்" என்ற அவன் குரல் கிட்டத்தட்ட கிசு கிசுப்பாய் வெளிவந்தது. அவன் அந்த இடத்திலேயே நின்றபடி சோம்பலான முறையில் கோட்டின் கைப்பகுதியில் பிடித்துப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அவனது அமைதி குலைந்து போயிருந்தது. அவன் தேம்பத்தொடங்கினான். எனக்கு முன்னால் நின்றபடி தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு தேம்பிக்கொண்டிருந்தான்.



"நீங்கள் எல்லாத்தையும் கழற்ற விரும்புறீங்கள் ஆனாநான் உங்களுக்கு உதவ வேணும் என்று விரும்புறீங்க அல்லவா?" என்று கேட்டேன்.

"ஓம்" என்றவனின் குரலில் விம்மல் தொனி ஒலித்தது. அங்கிருந்த சிறிய கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்ட நான், "அதற்கென்ன டிப்ஸ்.... சரி,.....




உங்கட கோட்டு, தொப்பி எல்லாவற்றையும் கழற்ற நான் உதவ வேணுமென்று நீங்க விரும்பினா நீங்க இங்க வாங்க. நான் உங்களுக்கு உதவுறன்" என்றேன். மனதில் ஒரு நோக்கத்தை வைத்துக் கொண்டே இப்படிச் சொன்னேன். நான் அவனுக்கு உதவுவதாக தெரிவித்தாலும் அந்த உதவியை பெறுவதானால் அவனாகவே ஓரிரு அடிகளை எடுத்து வைத்து வர வேண்டிய ஒரு இடத்தில் நான் அமர்ந்து கொண்டிருந்தேன். தயங்கித்தயங்கி வந்த பொழுதே "பூட்சுகளையும் கழற்ற வேண்டும்" கரகரத்த குரலில் அவன் சொன்னான். "சரி பூட்சுகளையும் கழற்றுவோம்." என்றேன். கைகளை நீட்டிப்பிடித்தபடியே "கையுறைகளையும்...." என்றான்.

"சரி. கையுறைகளையும் கழற்றுவோம்."நான் பதில் சொன்னேன். தொப்பி, கோட், பூட்சுகள் கையுறைகள் எல்லாவற்றையும் கழற்றுவதற்கு நான் உதவினேன். கையுறைகளை கோட் பொக்கற்றில் வைத்து கோட்டையும் தொப்பியையும் அவனிடம் கொடுத்தேன். அவன் அவற்றை கீழே போட்டுவிட்டான். நான் அவற்றை எடு[illegible] கதவுக்குமிழில் தொங்க விட்டுக் கொண்[illegible]

"நீ[illegible]ள் போகும் நேரம் வரும்வரை இதுகளை இங்கே வைப்போம். என்ற நான், "ஒரு மணித்தியாலத்துக்கு நாங்கள் இந்த அறையில் இருப்போம். அதற்கு பிறகு நீங்கள் வீட்ட போக வேண்டிய நேரம் வந்து விடும்" என்றேன்.

அவன் அதற்கு எதுவும் கூறவில்லை. வர்ணங்களை கரைக்கும் தட்டினருகில்சென்று தீந்தைகளைப் பார்த்தான். அங்கே அவன் நீண்டநேரம் நின்று கொண்டிருந்தான். அதற்குப் பின்பு தட்டில் இருந்த வர்ணங்களின் பெயர்களைக் கூறினான். மெதுவாக அவற்றை மீள ஒழுங்குபடுத்தினான். சிவப்பு, மஞ்சள், நீல வர்ணங்களை அவற்றுக்குரிய தட்டில் வைத்தான். பின் அவற்றுக்கிடையே பொருத்தமான அளவு இடைவெளி இருக்கும் விதத்தில் அவற்றை நகர்த்தி விட்டு, நிறமாலையில் இருக்கும் ஆறு முழு-வலு வர்ணங்கள் அதே வரிசையில் வரும் விதத்தில் ஏனைய வர்ணங்களை அந்த வரிசையில் பொருத்தமான இடங்களில் வைத்துவிட்டான்.

(தொடரும்....)

---

## திரைவிமர்சனம்

# அக்கினிப்பறவைகள்

வித்தியாசமான ஒரு படத்தைப்பார்க்க வேண்டுமென்றால் உடனே 'அக்கினிப்பறவைகளைப்' பாருங்கள் அக்கினிப்பறவைகள் ஒவ்வொருவரும் நிச்சயமாகப் பார்க்க வேண்டிய படம். படம் என்றவுடன் உடனே சினிமாவை நினைத்து விடாதீர்கள். எங்களின் அறிமுகத்தனத்தில் சினிமாவை மட்டுமே படமென்று புரிந்து வைத்திருக்கிறோம்.

விவரணப்படங்கள், ஆவணப் படங்கள், குறும்படங்கள், செய்திப்படங்கள், பிரசாரப்படங்கள், வரலாற்றுப்படங்கள் என்ற தனிவகை பற்றிய அறிதல் எங்கள் சூழலுக்கு இல்லை. ஆனால், இந்தவகைப்படங்கள் நீண்டகாலமாக உலகெங்கும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றன.

தமிழ்ச்சூழலிலும் இந்தப் படங்களின் அறிமுகம் இப்பொழுது மெல்லமெல்ல ஆரம்பித்துள்ளது. விவரணப்படங்கள், குறும்படங்கள் இதில் ஓரளவு அறிமுகமானவை. ஆனாலும் பரந்த மட்டத்திலான பார்வையாளர்களுக்கு இவை இன்னும் புதிதே.

**ஆரதி**

'அக்கினிப்பறவைகள்' புதிய படமாகவே வந்திருக்கின்றது. அது செய்திப்படமாகவும். விவரணப் படமாகவும் ஆவணப்படமாகவும் பல தளங்களில் பன்முகம் கொண்டு வெளிப்படுகிறது. இந்தப் பன்முகம் அக்கினிப் பறவைகளை உயிர்ப்புடன் சிறப்பிக்கிறது.

நாங்கள் வாழ்ந்த வாழ்வின் பதிவை அக்கினிப்பறவைகளில் காணலாம். எங்களுடைய கடந்த நாட்களின் முகத்தை அக்கினிப்பறவைகளில் பார்க்கலாம். எத்தனை பாதைகளுக்குள்ளால் எங்களுடைய பயணம் நிகழ்ந்திருக்கிறது என்பதை அக்கினிப்பறவைகள் சொல்கிறது.

இது அக்கினிப்பறவைகள் பாகம் இரண்டில் இரண்டு பகுதிகளைக் கொண்ட படம். முதலில் அக்கினிப் பறவைகள் பாகம் ஒன்று வெளிவந்திருந்தது. இப்போது வெளியாகியிருக்கும் பாகம் இரண்டு, தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த காலகட்டத்திலிருந்து இந்திய இராணுவ வெளியேற்றுகைக்குப்பின் விடுதலைப்புலிகள் மீண்டும் தமிழீழப் பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் காலப்பகுதி வரையிலான நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய படம். இந்தக் காலத்தின் போராட்ட நிகழ்வுகளையும் மக்களின் வாழ்வையும் இக்காலத்தின் இராணுவ இயந்திரம் எப்படி தமிழர் வாழ்வைப் பாதித்தது என்பதையும் பெண்களின் போராட்டப்பங்கேற்பு என்ற கோணத்திலிருந்து பார்க்கிறது. பெண்கள் எமது போராட்டத்தில் எத்தகைய பங்களிப்பை ஆற்றத் தொடங்கினார்கள். அவர்களின் ஆளுமை எவ்வாறு திரட்சி பெறத்தொடங்கியது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் பெண் போராளிகள் உருப்பெற்ற விதம், அப்படி அவர்கள் உருவாகியபோது எதிர்கொண்ட சவால்கள், சாதனைகள், அனுபவங்கள் எல்லாவற்றையும் ஒரு வரலாற்றுப் பதிகை மூலம் சாட்சிபூர்வமாக அக்கினிப் பறவைகள் முன்வைக்கின்றது.

அன்றைய நாட்கள் இந்திய இராணுவம் 'இந்திய அமைதிகாக்கும் படை' என்ற பெயரில் எங்கள் மண்ணில் நிலைகொண்டிருந்த காலம். அப்போது இந்திய இராணுவம் செயற்பட்ட விதம் எப்படி என்பதை அன்றைய நிகழ்வுகளின் மெய்ப்பதிவுகள் (வீடியோப்பதிவுகள்) மூலம் அக்கினிப்பறவைகள் சாட்சியாக நின்று காட்டுகிறது.

இன்றைய இளைய தலைமுறைக்கு இது முக்கியமான சேதி, இந்திய இராணுவத்தின் இருண்ட நாட்களில் வாழ்ந்த எமக்கு மீண்டும் அந்த நாட்களின் அவலத்தையும் நெருக்கடிகளையும் மீட்டுப் பார்க்க வைக்கிறது. இந்த மீள்நினைவூட்டல் எங்களை எச்சரிக்கையடையச் செய்கிறது. அத்துடன். விடுதலைப் பயணத்தை நோக்கி முன்தள்ளுகிறது.

எங்களின் விடுதலைப் பயணம் எத்தனைபாடுகளுக்குள்ளால் பயணித்திருக்கிறது என்பதற்கும் அக்கினிப்பறவைகள் சாட்சி. இந்திய இராணுவத்தின் இறுக்கங்களுக்கு மத்தியில், போராளிகள் எவ்வளவு கஷ்டங்களை எதிர்கொண்டார்கள், என்பதை அன்றைய நிகழ்வுகளின் பதிவுகள் சொல்கின்றன. அன்றைய அந்த நாட்களின் போராட்ட வாழ்க்கை பற்றி, அதன் அனுபவங்கள்பற்றி அன்று களத்தில் நின்ற போராளிகள் சொல்கிறார்கள். குறிப்பாக பெண் போராளிகள், அதிலும் மூத்த பெண் போராளிகள் மிக இயல்பாக அந்த நாட்களை மீட்கிறார்கள். கூடவே விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளும் எல்லாவற்றோடும் மையமாகிய தலைவர் கூறும் கதைகளும் இதில் கவனிக்கத்தக்கது

இதுபோல அன்றைய நாட்களை- இந்திய இராணுவத்தின் அட்டூழியத்தை, ஆக்கிரமிப்புக் கரங்களை பொதுமக்கள் பலரும் விமர்சிக்கிறார்கள்; கண்டிக்கிறார்கள்; திட்டுகிறார்கள்.

ஒருவகையில் அக்கினிப் பறவைகள் பாகம் இரண்டு இந்திய இராணுவத்தை விமர்சிக்கிறது எனலாம். மறுபக்கத்தில் பெண் போராளிகள் எப்படி நெருக்கடிச்சூழலை எதிர்கொண்டார்கள் என்பதைச் சொல்கிறது என்று கூறலாம்.

(21ஆம் பக்கம் பார்க்க)



# சுயமாக எழுத ஊக்கப்படுத்துங்கள்

**வெளிவாசல்பாலன்**

ஒக்ரோபர் மாதத்தில் ஆசிரியர்நாள், சிறுவர் நாள், மரநடுகைத்தினம், வாசிப்புவாரம் போன்றவற்றுடன் அநேகமாக நவராத்திரியும் வந்துவிடும். இந்த எல்லா நாட்களுக்கும் கவிதை, கட்டுரை எழுதித் தரும்படி கேட்டுவருவோர் கொண்டு வரும் வேலை உண்மையில் மிகச் சலிப்பூட்டுவது; விருப்பமிலலாதது;



எரிச்சலூட்டுவது;

அநாவசியமானது; ஏன் அது ஒரு வகையில் பிழையானது என்று கூடச் சொல்லலாம்.

இந்த நாட்களுக்காகக் கவிதையையோ கட்டுரையையோ கேட்டுவருவோர், அந்த நிகழ்வுகளில் தாங்கள் எழுதி வாசிப்பதாகக்காட்டுவதற்கு கவிதை கேட்கிறார்கள். கட்டுரைகேட்போர் இந்த நிகழ்வுகளையொட்டி வெளியிடப்படுகின்ற இதழ்களில் தங்களின் பெயரில் அவற்றை வெளியிடுவதற்காக வருகிறார்கள். சிலர் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக எழுதித் தரும் படி எந்தக்கூச்சமுமில்லாமல் வருகிறார்கள். வேறுசிலர் ஓவியங்களை வரைந்து தாருங்கள் என்றும் கேட்கிறார்கள். இதில் மாணவர்கள் முதல் வளர்ந்தவர்கள், நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்கள், உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளைச் சார்ந்தவர்கள் வரையில் அடக்கம்.

இதில் மூன்றாம் நான்காம் வகுப்புப்படிக்கின்ற மாணவர்களின் நிலைமை, மிகமிகப் பரிதாபமானது.

ஆசிரியர் நாள், மாணவர் நாள், சிறுவர் தினம் என்றால் அந்த நிகழ்வுகளில் கட்டாயம் கவிதை வாசித்தே தீரவேணும் என்பதுபோல அந்த நிகழ்வுகளை ஒழுங்கமைப்போர் யோசிக்கிறார்கள். இது தவிர்க்கமுடியாத சம்பிரதாயமாகி விட்டது. கவிதையை வளர்க்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை. அப்படியென்றால் தயவுசெய்து அங்கெல்லாம் கவிதையே வாசிக்க வேண்டாம். எப்படியோ கட்டாயக் கவிதை வாசிப்புக்காக மாணவர்கள் தூண்டப்பட்டு விடப்படுகிறார்கள்.

கவிதை எழுதுவது எப்படி? கவிதையென்றால் என்ன? என்பது பற்றியெல்லாம் கொஞ்சமும் யோசிக்காமல் அந்த மாணவர்களிடம், சிறுபிள்ளைகளிடம் கவிதையை எழுதி வரும்படி ஆசிரியர்கள் பணித்து விடுகிறார்கள்.

ஏதோ நான் வார்த்தைகளையோ, வசனங்களையோ ஒத்திசைவாக எழுதிவிட்டால் கவிதையாகிவிடும் என்ற நம்பிக்கைதான் அவர்களை இப்படிச் செயற்படத் தூண்டுகிறது.

மாணவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் என்ன திருஞான சம்பந்தரைப்போல கொஞ்சம் கலங்கியவுடன் அருள்கிடைத்து தோத்திரம் பாடவும், கவிதை எழுதவும்? ஆனால், அவர்கள் கவிதையுடன் கட்டுரையுடன் தான் பள்ளிக்குப் போக வேண்டும். என்ன செய்வார்கள் அவர்கள்?

அக்கம் பக்கத்தில் யார் கொஞ்சம் எழுதவும் வாசிக்கவும் இலக்கியத்தில் ஈடுபாட்டோடும் இருக்கிறார்கள் என்று தேடத்தொடங்குகிறார்கள் இந்த மாணவர்கள். எப்படியோ தேடிப்பிடித்தும் விடுவார்கள். எழுதிக்கொடுக்காமல் தப்பமுடியாது எனும்படிக்கு விடாப்பிடியாக நின்றும் விடுவார்கள். காரியத்தைச் சாதித்தும் விடுவார்கள்.

சிறுவர்களாக இருக்கிறார்களே! வீடுதேடி வந்து கேட்கிறார்களே! அவர்களுடைய உளம் பாதிகக்கூடாது என்று. வேறுவழியின்றி எழுதிக் கொடுக்கவே வேண்டியுள்ளது.



சில வேளை, வருவோரிடம் 'நீங்களே எழுதுங்கள். உங்களால் எழுதமுடியும்.எழுதிப்பாருங்கள் சுயமாக எழுதுவதுதான் நல்லது. வேண்டு மானால் செம்மைப்படுத்தி உதவலாம் என்றால் அவர்களுடைய முகம் மாறிப்போகிறது. எதுவும் பேசாமல் தயங்கியபடி நின்று எப்படியோ எழுதி வாங்கிக் கொண்டுபோவோம் என்று விடாப்பிடியாக நிற்கிறார்கள்.

ஆக, இந்தத்துறையில் ஈடுபடுவோரின்பாடு, இவ்வாறான சந்தர்ப்பங்களில் மிகவும் சிரமமானது. அதைச் சொல்லிமாளாது.

'இனிமேல் நீங்கள்தான் எழுதவேண்டும்.'என்று சொல்லி, ஒரு தடவை உதவி அனுப்பினாலும் அடுத்த தடவையும் வந்து நிற்பார்கள்.

சில சமயம் கூட இன்னொரு ஆளும் கேட்டுவரும்.

இதெல்லாம் ஏன்? இப்படி இரந்துகேட்டு கவிதையை வாங்கி வாசித்து - கட்டுரையை வெளியிட்டுத்தான் ஆகவேண்டுமா? ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர்களும் பிள்ளைகளை இப்படித்தான் அணுகவைக்கிறார்கள்.

நாடகம், ஓவியம் போன்றவற்றாலும் இதுதான் நிலைமை. பெரும்பாலான நிகழ்வுகளிலும் இதே தான் கதை. அநேகமாக தமிழ்த் தினப்போட்டி நாடகங்களை வெளியாரின் ஒத்துழைப்போடுதான் உருவாக்க வேண்டியிருக்கிறது. பிறகலைகளிலும் இப்படித்தான் செயற்பாடுகள்.

பிள்ளைகளின் ஆற்றலை வளர்ப்பதற்குப் பதிலாக, அவர்களை வேறுயாரோவிடமெல்லாம் போய்க் கேட்டு எழுதிவரும்படி சொல்லி அவற்றைப்பெற்று அரங்கேற்றுவது சிறப்பானதா? வேறொருவர் எழுதியதை இன்னொருவர் பெயரில் பதிவு செய்வதும் வெளியிடுவதும் சரியானதா? இவை அடிப்படையில் பிழையானவை. இங்கேயிருந்துதான் மோசடிகளும், உழைப்பை மறைப்பதும், கூச்சமில்லாமல் சுரண்டுவதும், அதற்காக கொஞ்சமும் வெட்கப்படாமலிருப்பதும் தொடங்குகிறது.

இதேபோல பொது நிறுவனங்கள், அமைப்புகள், அரச அலுவலகங்களின் ஏற்பாட்டில் நடக்கின்ற விழாக்கள், சிறப்பு நாட்கள் போன்றவற்றில் வாசிக்கப்படுகின்ற, அரங்கேற்றப்படுகின்ற அச்சிடப்படுகின்ற விடயங்களும் இரவல்தான். இந்த இரவலில் எழுதுகிறவருடைய எண்ணங்கள், அனுபவங்கள் மட்டும் தானிருக்கும். பதிலாக உரியவரே அவற்றை தம்சொந்த அனுபவத்தோடும் எண்ணங்களோடும் எழுதினால் அது சிறப்பாக இருக்கும். அழகியலில் அது குறைவானதாக இருந்தாலும் உண்மையில் அது உயர்ந்திருக்கும். ஆகவே எந்தத் தயக்கமுமில்லாமல் அவர்கள் எழுதட்டும் அதற்கு முயற்சிக்கட்டும். அதுவே சிறப்பு. அது புதியதை நமக்குத் தரும். புதியவர்களும் வருவார்கள்.

இதில் ஒரு விடயத்தையும் கவனிக்கவேணும். எழுத்துத்துறையுடன் சம்பந்தப்பட்டோரிடம் உதவியைப்பெறுவோர், பொதுவாக நடக்கின்ற வெளியீட்டு நிகழ்வுகள், விமர்சன அரங்குகளுக்குக்கூட வருவது குறைவு. அதெல்லாம் வீண் விடயங்கள் என்று கருதுகிறார்களோ என்னவோ!

நூல்வெளியீடு, விமர்சன அரங்கு, ஓவியக்காட்சி, ஒளிப்படக் காட்சி என்பவற்றிலெல்லாம் கலந்து கொள்ளும் ஆட்களின் தொகை எப்போதும் குறைவாகவேயிருக்கிறது.

சிலர் தங்களுடைய பிள்ளைகளுக்கு பரதநாட்டியம் பழக்குகிறார்கள். சிலர் இசைக்கருவிகளைப்பழக்குகிறார்கள். ஆனால் அவற்றில் முதல் அடிப்படைநோக்கம் அவை ஒருவகைப்பெருமையை தருகின்றன என அவர்கள் கருதுவதே. ஏனெனில் அப்படிப் படித்த பிள்ளைகளைப் பிறகு அந்தத் துறைகளில் ஈடுபடுத்துவோர் மிகக் குறைவு.

இதேபோல படித்து சித்தியடைந்து உயர்கல்விக்காக பல்கலைக்கழகம் சென்றவர்கள் அங்கே படிக்கின்றபோது சுயமாக எழுத அவதிப்படுவதையும் இங்கே கவனிக்கலாம். அவர்கள் எழுதுவதற்கும், அதற்கான விடயங்களைப் பெறுவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதில் கலைத்துறை - மொழியியல் சம்பந்தப்பட்டவை மட்டும்தானென்றில்லை. சகல துறையினருக்கும் இது பொருந்தும். ஏனென்றால் பொது வாசிப்பற்ற சூழல்தான் இப்போது பெருகிவருகிறது. வாசிப்பதை மலினமாகக் கருதும் ஒரு பெரும்போக்கும் வளர்ந்துவிட்டது. வாசிப்பை அதிகமாக்கும்போது, விரிவாக்கும் போது ஒருவர் பல விடயங்களைத் தெரிந்து கொள்வார். சுயமாக பலவற்றிலும் இயங்கத் தொடங்கிவிடுவார். அந்தளவுக்கு அது சக்திமிக்கது.

சிலர் சொல்கிறார்கள் 'பத்து விரல்களும் ஒரேமாதிரி இருப்பதில்லை - எல்லோருக்கும் எல்லாம் தெரிந்திருப்பதில்லை. கலை என்பது பிறவியில் வருவது' என்று நீளமாக.

அப்படியென்றால் தாங்களும் பிறவிக்கலைஞர்கள் என்று நிரூபிக்க வருகிறார்களா? அல்லது சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரி சாட்டுச்சொல்லி நழுவுகிறார்களா?

சரி, எழுதத்தான் முடியவில்லை. நடிக்கத்தான் இயலவில்லை. வரையவும், படிக்கவும், இசைக்கவும், ஆடவும்தான் வாய்க்கவில்லை. இந்தத்திறன்களோடு இயங்குகிற ஏனையவர்களை மதிக்கலாம், ஊக்கப்படுத்தலாமல்லவா!

நாடகம், ஓவியக்காட்சி, ஒளிப்படக்காட்சி, நூல் வெளியீடு, அறிமுக நிகழ்வு, விமர்சன அரங்கு இசையரங்கு போன்றவற்றுக்கு ஆகக் குறைந்தது ரசனையாளர்களாக வாவது செல்லலாமே. அதுவுமில்லை நமது சூழலில் சிலர் கருதுகிறார்கள் அது நேரச்செலவுக்குரியதென்று. ஆனால், அவற்றின் பெறுமதி, முக்கியத்துவம், அருமை ஒன்றையும் அவர்கள் அறிந்திருப்பதில்லை. கண்காட்சிகளுக்குக்கூட திரள்வோரின் தொகை குறைவானதே.

இந்த விடயங்களில் போட்டிகளை நடத்துவோர் அதை உரியவாறு நடத்துவதும் இல்லை. இது எல்லாத்தரப்பிலும் நிகழும் தவறான காரியம்.

போட்டி நடத்தப்படுகிற முறைகளிலும் பிழைகளுண்டு. அதே போல போட்டியை மதிப்பிடுபவர், தீர்ப்பாளர், என்போரிடமும் போதிய புதிய, விரிந்த அறிவும் பார்வையும் அனுபவமும் இருப்பதில்லை.

கிடைக்கிற சந்தர்ப்பத்தை தமது அந்தஸ்த்துக்குரிய ஒரு அலுவலாகப் பயன்படுத்தி தமது மட்டமான அறிவு, ரசனை அளவு கோல்களை வைத்து மதிப்பிடுகிறார்கள்; தீர்ப்பளிக்கிறார்கள்.

இது பங்குபற்றுவோரின் திறன்களைச்சிதைக்கிறது. தவறான வழிகளையும் தரமற்ற போக்கையும் வளர்க்கிறது.

பொதுவாகவே இவையெல்லாவற்றுக்கும் காரணம், பள்ளிகளிலிருந்து வெளியே பெற்றோர் வரையில் இருக்கிற பொறுப்பற்றதனமும் அறியாமையும் விருப்பின்மையும், தவறான கணிப்புகளும் தான்.

இங்கே அண்மையில் வெளிவந்துள்ள 'விஜய்' என்ற மாணவர் இதழ் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆசிரியர் தலையங்கத்தைப்பற்றிச் சொல்லவேண்டும்.

மனிதன் எத்தனைதான் அறிவியல் வளர்ச்சி பெற்றிருந்தாலும் அவனை உயிர்ப்புள்ளவனாக, உணர்ச்சியுள்ளவனாக, மனிதனாக வைத்திருப்பவை கலைகளும் இலக்கியமுமே என்கிறது 'விஜய்'

உண்மைதான். இயந்திரத்துக்கும் மனிதனுக்கும் இடையிலான வேறுபாடு மனிதன் உணர்வும் உயிரும் உள்ளவன். உணர்வை உயிரூட்டுபவை கலைகளும் இலக்கியமுமே.

இதனால்தான் போலும் உலகெங்கும் கலைகளுக்கும் இலக்கியத்துக்கும் அதிகளவு விருதுகளும் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. படைப்பாளிகளும் கலைஞர்களும் கௌரவிக்கப்படுகிறார்கள்.

நோபல் பரிசில்கூட இலக்கியத்துக்குத்தனியிடம் இருக்கிறது.

இன்றே 'விஜய்' சொல்வது போல் உங்களின் மாணவர்களை. உங்களுடைய பிள்ளைகளை சுயமாக ஏதாவதொன்றில் ஊக்கப்படுத்துங்கள்.

இந்த உலகம் அழகாக இருக்க வேண்டுமல்லவா. அதில் அழகாகவும் அமைதியாகவும் நீங்களும் இருக்க வேண்டுமல்லவா.



மழைகாலம் ஆரம்பமாகிவிட்டது. எங்கள் விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளும் தீவிரம் பெற்றுவிட்டன.

கூடவே எங்கள் மண்ணின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் நினைவு நாளும் வருகின்றது.

எல்லாமே எங்கள் மண்ணோடு தொடர்புபட்டவைதான்.

## பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

காரணம் இந்த மண்தான் எங்கள் வாழ்வியலின் ஆதாரம். எங்கள் நிகழ்காலம், எதிர்காலம் எல்லாவற்றுக்கும் அடிப்படையானது.

எனவேதான் மண்ணையும், மண்ணைக்காக்க வீரமரணம் அடைந்த மாவீரர்களையும் நாங்கள் நினைவில் நிறுத்தி எங்களது சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

மண்ணைப் பாதுகாப்பதில் மரங்களுக்குப்பிரதான பங்கு உண்டு என்பதும், பல்வேறு தேவைகளுக்காக மரங்களை நாங்கள் வெட்டி அழிப்பதும் நடந்து வருவதும் எங்களுக்குத் தெரிந்த விடயம்தான்.

ஒரு மரத்தை வெட்ட நாங்கள் முனையும் போது கடைசி ஐந்து மரங்களையாவது நடுவதன் மூலம் மரம் அழியும் வேகத்தை கட்டுப்படுத்தலாம். அதன் ஊடாக இந்த மண்ணையும் பாதுகாக்கலாம்.

மாவீரர் நாளையொட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு மரநடுகைத் திட்டங்களை ஏற்பாடு செய்து மேற்கொண்டு வருகின்றது.

இந்த மண்ணின் மீது பற்றுக்கொண்ட நாங்கள் அனைவரும் இந்த மரநடுகைத் திட்டங்களுடன் இணைந்து செயற்பட முனைய வேண்டும்.

அதன் மூலம் பாதுகாப்பான ஒரு எதிர்காலத்தை உருவாக்க முனைவோமாக?

(சி-10552)

# நெற்பயிர்ச்செய்கையில் அதி கூடிய விளைவு பெற...!!

விவசாயிகள் விதை நெல்லைத் தெரிவு செய்யும் போது பீடைகளை எதிர்த்து வளரக்கூடிய நெல்லினங்களைத் தெரிவு செய்து கொள்வது நல்லது. கூடுதலான முளை திறன் 85 வீதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். நெல்லின் விளைவுதிறன் அதாவது நிறைவான மணி திரண்டிருத்தல் வேண்டும். விதை நெல்லுடன் சேர்ந்து களைகளின் விதைகள் சேர்ந்திருக்கும். களைகள் விதை கலக்கப்படாததாகவும் இருத்தல் வேண்டும். வேறு இன நெல்களும் கலந்திருக்கக் கூடாது. நோயற்ற நெல்லினம் தூய்மையான இனம் என்பன முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக கவனிக்க வேண்டியது நிலம் பண்படுத்தல், நிலம் பண்படுத்தலின் போது இரு உழவுகளிற்கிடையில் குறைந்தது இரண்டு கிழமைக்கு ஒரு தடவை இடைவெளிவிட்டு உழுதல் வேண்டும். நிலம் நன்கு மட்டப்படுத்தப்பட வேண்டும். விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட நெல்லினங்களை விதைப்பது நல்லது. அத்தோடு அறிவுறுத்தப்பட்ட அளவின் படி விதைத்தல் வேண்டும்.

நீர் முகாமைத்துவம் மிக மிக முக்கியமானது. உரிய நேரத்தில் உரிய அளவு கிடைக்க வேண்டும். இதற்கு கிளை வாய்க்கால்கள் சரியாக அமைந்திருத்தல் வேண்டும். வாய்க்கால் சரியாக அமையாவிட்டால் நீர் விரயமாகின்றது. விரையமாகும் போது உரிய காலப்பகுதியில் நீர் வழங்க முடியாமல் பயிரழிவு ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. நிலம் மட்டப் படுத்தப்பட்டிருந்தால் நீர் மூலம் கூட களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

நெல்லுடன் போட்டி போட்டு வளரும் களைகளைக் கட்டுப்படுத்துதல் அவசியமாகும். களைகள் பயிருடன் போட்டி போட்டு வளருகின்றன. களைகளானது இடத்துக்கு, சூரிய ஒளிக்கு, நீருக்கு, பசளைக்கு என்றெல்லாம் போட்டி போட்டு வளருவதால் நெற்பயிர் வீரியத்துடன் வளர முடியாமல் பாதிப்படைகின்றது. இதனால் விளைவு குறைவடையும்.

களைகள் சில பீடைகளின் வாழ்விடமாகவும் உறைவிடமாகவும் இருக்கின்றன. களைகள் மூலம் நோயகளும் பரவுகின்றன. எனவே முக்கியமாக களை கட்டுப்படுத்தல் வேண்டும். அடுத்ததாக பயிரிடும் போது விதைப்புக்கு முன் அடியுரம் போட வேண்டும். மாட்டெரு, கூட்டெரு, பசுந்தாள் பசளைகள், வைக்கோல் போன்றவற்றை ஆரம்ப உழுதலின் போது போடலாம். அல்லது செய்கை உரங்களை அடியுரமாக அளவுப் பிரமாணத்தின் படி போட வேண்டும். அப்போதுதான் பயிர் முளைக்கும் போதே ஆரோக்கியமாகவும் வீரியம் நிறைந்தும் வளரும். இதன் பின் யூரியா அல்லது அமோனியம் சல்பேற் பயிரின் நிலையினைப் பொறுத்து விதைக்க வேண்டும். மண்ணின் தன்மையை பொறுத்து ரி.டி.எம் (T.D.M) கதிர் அரும்பு நிலையில் இருக்கும் போது இட வேண்டும்.

*பீடைகளைக் கட்டுப்படுத்தல்.*

நெல்வயல்களில் விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற பூச்சிகள் நிறைய இருக்கின்றன. அவற்றுள் ஊசித்தட்டான், தும்பி, குழவி, போத்தல் வண்டு, லேடிபேட் வண்டு, ஆமை வண்டு, வலைச்சிலந்தி, நீர்ப்பரப்பு, மூட்டுப்பூச்சி எனப்பலவகையான பூச்சிகள் காணப்படுகின்றன. இப்பூச்சிகளை இனம் கண்டு கொள்ளாமல் பீடை நாசினி விசுறும் போது நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்து விடும். ஏனெனில் பயிர்களின் மேற்பரப்பில் நன்மை செய்யும் பூச்சிகளும் பயிரின் அடிப்பகுதியில் தீமை செய்யும் பூச்சிகளும் காணப்படும். ஆகவே அவதானித்து பீடைநாசினிகளை விசிற வேண்டும். இதே நேரத்தில் அளவுக்கதிகமான செயற்கைப் பசளை இடுவதாலும் நன்மை செய்யும் பூச்சிகள் இறந்து விடும். வயல்களில் அதிகமாக நன்மை செய்யும் பூச்சிகள் பல்கிப் பெருகுவதற்கு விவசாயிகளின் கையில் தான் உள்ளது. செயற்கை உரங்களைக் குறைத்து இயற்கைப் பசளைகளை இட்டால் மண்புழுவும் அதிகம் உற்பத்தியாகும். மண்புழு விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைச் செய்கிறது. வயல்களில் நன்மை செய்கின்ற பூச்சிகள் காணப்படுமாயின் பூச்சி நாசினியை விசிறத்தேவையில்லை. பயிர்களுக்குஏற்படுகிற சிறு தாக்கம் பெருமளவில் பயிரைத் தாக்காது இழப்பை ஈடுசெய்யும் ஆற்றல் நெற்பயிருக்கு உண்டு.

ஒவ்வொரு விவசாயிகளும் தங்கள் தங்கள் வயல்களில் உள்ள நெற்பயிர்களை ஆரோக்கியமாக இருக்கின்றதா பூச்சிப் பீடைத்தாக்கம் பயிரைத் தாக்குகின்றதா அல்லது கட்டுப்பாட்டோடு இருக்கின்றதா! என்பதை அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் வயல்களுக்கு சென்று அவதானிக்க வேண்டும். கிழமைக்கு ஒரு தடவையாவது வயல்களுக்குள் இறங்கிப் பார்க்க வேண்டும். முக்கியமாக கவனிக்க வேண்டியது நன்மை செய்யும் பூச்சிகளின் அளவு, தீமை செய்யும் பூச்சிக்களின் அளவு, களைகளின் அளவு, மட்டங்களின் அளவு, ஒரு மட்டத்தில் உள்ள இலைகளின் எண்ணிக்கை காலநிலை நீர்மட்டம், நீர்ப்பூச்சிகளின் எண்ணிக்கை என்பவற்றை அவதானித்து செயற்பட்டால் பயிர் ஆரோக்கியமாக இருப்பதுடன் உச்ச விளைவையும் பெற்றுக் கொள்ளலாம்.

**சிவகமலா**

(19 பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் விடுதலை அமைப்பு எத்தகைய சவால்களையெல்லாம் எதிர்கொண்டது என்பதையும் காட்டுகிறது என்றும் சொல்லலாம்.

காட்டில் பெண் போராளிகள் புகுந்ததிலிருந்து காட்டைப்பழகி, காட்டில் வாழ்ந்து, காட்டில் போராடி, காட்டிலே வெற்றிபெற்று ஊர்திரும்புகின்ற வரலாறு - காட்சிகள் ஆச்சரியப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. இது நாமெல்லோரும் அறிந்த சங்கதிதான் என்றாலும் இன்று அவற்றை மீளத்தொகுத்து அதுவும் சாட்சி பூர்வமாக காட்சியாகப் பார்க்கையில் மனம் சிலிர்க்கிறது.

எல்லாவற்றையும் நிதானமாக நின்று எடைபோட்டு, திட்டமிட்டு, காரியங்களாற்றி வெற்றிபெறுகிற தலைவரின் அடையாளங்கள் தான் அக்கினிப்பறவைகளின் மையம்.

அந்த இருண்ட நாட்களில், மணலாற்றுக்காட்டுப்பகுதியில் மிக உறுதியாகவும் மிக மகிழ்வாகவும் மிக நிதானமாகவும் தலைவர் இயங்குகின்றதை ஒவ்வொரு நிகழ்வுப் பதிவையும் வெளிச்சமிடுகிறது. பெண்போராளிகளிடத்தே நம்பிக்கையையும் வீரத்தையும் உறுதியையும் ஆற்றல் வெளிப்பாடுகளையும் வளர்த்த நாட்களவை.

மிகச் சுவாரஷ்யமாக இன்று மூத்த பெண் போராளிகள் தாங்கள் உருப்பெற்ற கதையைச் சொல்கிறார்கள். இவர்கள் கதையைச் சொல்லச் சொல்ல காட்சிகள் சாட்சியமாக விரிகின்றன. அக்கினிப்பறவைகளை தொகுத்த விதம், பிரதியெழுதிய விதம், நெறிப்படுத்திய விதம் எல்லாம் ஒருங்கிணைந்து பார்வைச் சுவாரஷ்யத்தை தருகின்றன.

அக்கினிப்பறவைகளில் நெருக்கமான இடங்கள் பலவுண்டு. அதில் பெண் போராளிகளின் உருவாக்கத்தில்- சுதந்திரப்பறவைகள் அமைப்பின் தொடக்கத்தில் பங்களித்திருந்த தியாகி திலீபனின் உண்ணாவிரதக் காட்சி, லெப் மாலதி கோப்பாயில் வீரச்சாவடைந்த அந்தக் களத்தின் கதை, மேஜர் சோதியா நோயுற்றுச் சாவடைந்தமை. இவ்வாறு பல நிகழ்வுகள் இதயத்தைக் கரையச் செய்பவை.

எங்களின் வரலாறு இப்படித்தான் நகர்ந்திருக்கிறது. கண்ணீரோடும், குருதியோடும் பயணிக்கிற விடுதலைப் பயணம் எங்களுடையது. முட்களும், மேடு பள்ளங்களும் சூழ்ச்சிகளும் பொறிகளும் நிறைந்த பாதையில் எங்களின் பயணம் நடந்திருக்கிறது.

ஆனால், எவ்வாறிருந்தாலும் நாங்கள் விடுதலையை நோக்கிப் பயணித்தே தீருவோம் என்ற சத்தியத்துடன் நடந்திருக்கிறோம் என்பதற்குத்தக்க சாட்சியாக அக்கினிப்பறவைகளும் இருக்கின்றது. விடுதலைப் பயணத்தில் பெண்களின் பங்களிப்பும், பாத்திரமும் எத்தகையது என்பதற்கு உதாரணமாக இந்தப் படம் இருக்கிறது. தலைவர், பெண்களை விடுதலைப் போராட்டத்தில் இணைத்த, வளர்த்த, செயற்பட வைத்த வரலாற்றைச் சொல்லி ஈழத்தமிழர்களின் முக்கியதொரு வரலாற்றுக் காலகட்டத்தை பதிவுசெய்து, வெளிப்படுத்தியிருக்கிறது.

ஒரு வகையில் மக்கள் எல்லோரும் அறிய வேண்டிய செய்தியை சொல்கிறது. அக்கினிப் பறவைகள்.

இன்னொருவகையில், வரலாற்று நிகழ்ச்சிகளை சாட்சிபூர்வமாக தொகுத்துத் தருகிறது அக்கினிப் பறவைகள் எனலாம். இதில் இந்திய இராணுவத்தை விமர்சிப்பதும் பெண்போராளிகளின் எழுச்சியைச் சொல்வதும் முக்கியமானது.

அடுத்தது நெருக்கடிக் காலத்தில் இயக்கம் இயங்கிய விதம் பற்றிய விவரிப்பு.

இப்படிப் பலவுண்டு.

எல்லா நெருக்கடிகளுக்குள்ளும் நின்று போரிட்டதுடன் மட்டுமல்லாது முடிந்தளவுக்கு அன்றைய பதிவுகளைச் செய்துதந்த போராளிகளை நிச்சயம் பாராட்டவேண்டும். இதில் பலர் பிறகு மாவீரர்களாகி விட்டார்கள். இவ்வாறான ஆவணப் படுத்தலுக்கு திட்டமிட்டுச் செயற்படுத்திய தலைவர் பிரபாகரன் அவர்களின் திறன் மெச்சுதலுக்குரியது.

தமிழர்களின் வரலாற்றைப் பொறுத்தவரையில் அநேகமாக வரலாற்றை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துவதிலும் பதிதலும் எப்போதும் அக்கறை குறைவாகவே இருக்கிறது. அந்தக் குறைபாட்டை அக்கினிப் பறவைகள் நீக்குகிறது. அத்துடன் அக்கினிப்பறவைகளும் ஒரு புதிய வரலாற்றின் தொடக்கமாகவும் பதிவாகவும் வெளிப்பாடாகவும் இருக்கிறது.

இது சிறப்பல்லவா. இயக்குநர் சேரமதிக்கும் எழுத்துரு நிதர்சனம் மகளிர் பிரிவிற்கும் பாராட்டுக்கள்.

(17 பக்கத் தொடர்ச்சி)

என்று அழகாகக் கூறுகின்றார். நல்ல நூல்களே நல்ல ஆசான்கள். ஆதலால் அந்நூல்களுக்குப் பாதிப்பு எதுவுமே வந்திடாமல், பாதுகாப்பது நம்கடனன்றோ? கீறுதல், வெட்டுதல், கிழித்தல், மடித்தல், தொலைத்தல் போன்ற செயற்பாடுகள் எந்த ஒரு மனிதனுக்கும் ஆகாதவை. நூல்களைத் தினமும் வாசிப்பதன் மூலம் மொழி வாழ்வும், கலைச்சிறப்பும், அறிவியல் பெருக்கமும் அஞ்ஞானம் நீங்கலும் இலகுவாக ஏற்படுத்தப்படும். புதுமையொளிக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதானால் அன்றே புதுமை அகம் புத்தகம் என்றாயிற்று. நாகரிகப் பாதையில் உலகம் முன்னேறியுள்ளதைக் குறிக்கும் மைற்கற்கள் நாங்களே!

பல்வேறு வகைப்பட்ட நூல்களைத் தாங்கியதாய் விளங்கும் நாற்கூடத்தை பல நாட்டறிஞர்கள் பலரும் ஒன்று கூடிவாழும் ஒரு பெரும் கலைக்கோவில் என்று கூறின் மிகையாகாது. அதனால் போலும் "உயர்ந்த நூல்நிலையமே உண்மையான கல்லூரி" என்பார் கார்வைல் அவர்கள்.

ஒரு நல்ல நூாற்கூடம் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடமாகின்றது. எழுத்தாற்றல் மிக்க எழுத்தாளர்களுக்குத் தரவுத்தளமாகின்றது. மாணவர் அறிவுக்கு விருந்தாகின்றது. ஏழைகளுக்கு அருங்கொடையாகின்றது. அறிவுப்பசி உள்ளோர்க்கு ஆனந்தத்தையும் ஓய்வையும் வழங்குகின்றது. தீயபழக்கங்களில் இருந்து சிந்தைதிருந்திவாழ விரும்புவோர்க்கு மருந்தாகின்றது.

*வாசிக்க வருபவரின் வருகையேற்றும்*
*மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும்*
*ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்*
*அமைந்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை*
*நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்*
*நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்*
*மாசற்ற தொண்டிழைப்பீர் சமுதாயச்சீர்*
*மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்"*

எனப் பாரதிதாசன் முழங்குவது போல நூலகப் பணிசெய்வோம். அறிவுச் செல்வத்தை வளர்த்தெடுப்போம். அச்சுவாகனமேறி எம்மைத் தேடிவந்து குவிந்துள்ள புத்தகச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்து வாழ்வோம் வளம் பெறுவோம்.

# நாங்கள் வாழும் கலிகாலம் — முடிவுக்கு வரப் போகுது கவனம்...?

வணக்கம் பிள்ளையள்! என்னமாதிரி சுகங்கள்? போனகிழமை சொல்லிப்போட்டு குறையில விட்டிட்டன். எங்கை பெரிசா வெளியாலயும் வெளிக்கிடேல்ல. வீட்டுக்குள்ளையே கிடந்ததால இன்னும் கொஞ்சம் உங்களுக்குச் சொல்லலாம். அஞ்சு நாளா என்ன சனம் பாருங்கோ! மூச்சு விடவே இடமில்லாத மாதிரி...எக்கச்சக்க சனம்! ஒரு விசயம் பாருங்கோ, எனக்குத்துண்டறப் பிடிக்கேல்லை. மேடையில கலைநிகழ்ச்சியள் நடக்கேக்கிள்ளை எல்லாரும் இருந்து பார்க்கலாம் தானே! தெரியேல்லை எண்டு சொல்லிக்கொண்டு, எழும்பி நிண்டு கொண்டு எல்லாரையும் மறைச்ச ஆக்களின்ர செயலுக்கான விஞ்ஞானவிளக்கம் எனக்கு விளங்கேல்லை. இருந்து பார்த்தால், கண் மட்டத்துக்கு மேல இருந்த மேடை எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும். எழும்பி நிண்டால் என்னமாதிரி? இயல், இசை, நாடகம் எண்டு முத்தமிழ் பெத்தெடுத்த இந்தக் கலையளை மதிக்கிறது, அதை எல்லாரும் பார்த்துப் பயனடைய வழி விடிற விசயத்திலயும் தங்கி இருக்கிது. "இருங்கோ...! இருந்து பாருங்கோ!" எண்டு கத்திக்கத்தியே கன காவல் துறைக் காரரின்ரை தொண்டை அடைச்சுப்போய், ஏதோ பழைய பாடகர் கண்டசாலாவின்ர குரலோட திரிஞ்சினம்.

அப்ப அப்பிடியே ஒழுங் காப்பார்த்துக்கொண்டே போகலாம் எண்டு பார்த்தால் கடற்புலிகளின்ர படகு உட்பட சிலதுக்குள்ளை உள்ளடவே ஏலாத அளவுக்கு சனம் போய்ப்பார்க்கேலாமல் போய்ச்செண்டு கவலையிருந்தாலும் போகேலாத அளவுக்கு கனதொகையில சனம் வந்திருந்தது ஒருவகையில சந்தோசமும்தான்! அதால பின்பக்கத்தில அமைக்கப்பட்டிருந்த 'விடியல்' படைவீட்டுக்குள்ளை போனன். அங்கை தான் துப்பாக்கிச் சூட்டுப் போட்டியும் நடந்திச்சு. முதல்நாளே போட்டு வந்த ஆக்கள் மூலம், எல்லாம் நான் அறிஞ்சு வைச்சிருந்தனான். ஒரு மாதிரி அந்த நீண்ட வரிசையில போய் நானும் இணைஞ்சு கொண்டன். எனக்கு முன்னால நிண்ட இளசு ஒண்டு "அப்பு!சும்மா பகிடி விடாமல் அந்த நிழலில போயிருந்து வேடிக்கை பாருங்கோ! இதொண்டும் விளையாட்டில்லை" எண்டார். "தம்பி! உது எனக்கு சுண்டக்காய் விசயம். நான் தலையில பழம் வைச்சிருக்க விட்டிட்டே குறி பார்த்துச் சுடுவன்" ஏங்கிப்போய் உண்மையாவோ அப்பு? "அவர் கேட்டார்." "பின்ன நீர் தலையில பலாப்பழம் வைச்சுக்கொண்டு நில்லும். நான் காட்டுறன் வித்தை!" "ப்பூ! பலாப்பழமே!" நக்கல் சிரிப்புச் சிரிச்சார் அவர். முன்னுக்குச் சுட்டுமுடிச்ச சில பொடியங்கள், திரும்பவும் தங்களைச் சுட விடச் சொல்லி, அடம்பிடிச்சுக் கதை அளந்துகொண்டிருந்தாங்கள். இதென்னடா வெட்கக்கேடு! பொம்பிளைப் பிள்ளையள் ஆமியை அடிச்சுப்பறிச்சு எடுத்து வைச்சிருக்கிற ஆயுதத்தால, அஞ்சுரூபா கொடுத்து பலூனுக்கு அடிக்கோணும் எண்டு ஆண்வர்க்கம் அடம்பிடிக்கிது. இன்னுமொரு விசயத்தையும் சொல்லோணும். வரிசையில நிண்டு வந்த சில நோணாப்பொம்பிளையள் சுடுற இடத்துக்குக்கிட்ட வந்தவுடன, 'ஐயோடி! குய்யோடி!' நான் வரேல்லை. எனக்குப் பயமாயிருக்கிது. "அது டும் டும் மெண்டு பெரிசா சத்தம் வரிது..." "...ஆ...ஊ...எண்டு நர்த்தனம் ஆடிக்கொண்டு நிண்டினம் Handbag உம் கொளுவிக்கொண்டு பெரிசா வந்திட்டினம். எட பக்கத்தில நிண்ட அந்தப் பிள்ளையளைப் பார்த்தெண்டாலும் கொஞ்சம் முன்வரோணும் அல்லோ!" அப்படியே என்ர முறையும் வந்திச்சு. காட்டித்தந்த மாதிரிச் சுட்டன்...1...2...3... கண்ணாடியும் கிட்டப்பார்வைக்கானது. ஏதோ சுமாரா அடிச்சன். நான் சுட்ட நேரம் பார்த்து, கொதிக்கிற வெய்யில்லை பலூன் 2 தானாவே வெடிச்சிட்டிது. "அப்பு! பரவாயில்லை 2 அடிச்சிருக்கிறீங்கள். இருந்தாலும் பரிசுக்குக் காணாது," அங்கை நிண்டபிள்ளை சொல்லிச்சு. "நான் சும்மா ஒருக்காச் சுட்டுப் பார்க்கத்தானே வந்தனான் பரிசெல்லாம் அவசியமில்லை'', எண்டு சொன்னபடி, என்ர கைப் பைக்குள்ள காலையில கடையில வேண்டின அந்தத் தொப்பியை மளமள வெண்டு எடுத்து தலையில போட்டன். என்னை ஆரெண்டு நினைச்சியள்? உண்மையிலயே சுட்டுப்பரிசெடுத்த பக்கத்து வீட்டுத் தம்பி ஒராளுக்குக் கிடைச்ச தொப்பி மாதிரி, ஒண்டு காலமை கடையில வேண்டிக் கொண்டு தான், மைதானத்துக்குள்ளையே வந்தனான். ஏரம்புவுக்கு முன்னால நிண்டு கொண்டிருந்த இளசு என்னைத் தொப்பியோட பார்த்து வியந்துபோய்ச்சிது. என்ன நினைக்கிறீயள் என்ர 'செற்-அப்' ஐப்பற்றி? அண்டைக்கு முழுக்க அந்தத் தொப்பி கழற்றவே இல்லை. ஆக்களெல்லாம் நான் அஞ்சும் சுட்டெடுத்த பரிசுத்தொப்பி எண்டு நினைச்சு, மூக்கில விரலை வைச்சுப்பார்த்துக்கொண்டு போச்சினம்.

அப்பிடியே அனைத்துலகத் தொடர்பகத்திலையும் வெளிநாட்டில வாழிற எங்கட சனங்களின்ர செயற்பாடுகள் பற்றி கனவிசயங்களை அறிஞ்சுகொள்ள முடிஞ்சிது. யுத்த அச்சுறுத்தல்கள் ஒண்டுமே இல்லாத ஒரு வசதியான சூழலிலையும் தங்கட தாயகத்தை அவையள் ஆழமா நேசிச்சு, தமிழ்மொழியையும் வளர்த்தெடுக்கிறதைப் பார்க்க சந்தோசமாய் இருந்திச்சு, அதிலையும் தாங்கள் நேசிக்கிற தாயகம் பற்றிய படங்களைத் தாங்கி நிற்கிற உடுப்புக்கள் கனக்க அவையள் வெளியிட்டிருக்கினம். பார்க்க ஆசையாசையா இருந்திச்சு. இஞ்சையிருக்கிற கடையளில 'கலிபோர்னியா', 'லண்டன்', 'ஓப் போடு', 'பாபா', கில்லி, பல்லி எண்டு போட்டிருக்கிற உடுப்புக்கள் தான் எடுக்கலாம். அந்தக் கண்காட்சி, இந்தக்கண்காட்சி, தையல் பயிற்சி, கைவினைப் பொருள்- பட்டறை எண்டு 1008 செய்தியள் மட்டும் பத்திரிகையளில நிரம்பி வழியும். கடை முழுக்க அந்நியப்பொருட்களை வைச்சுக்கொண்டு, கண்ணாடிப் பெட்டியளில சுதேசியத்தை வைச்சுக் கைவினைப் பொருள் கண்காட்சி நடத்திறதிலை என்ன பயன்? எங்கை பார்த்தாலும் தையல் வகுப்புக்கள்! அதில ஒரு நாலு பேர் ஏதாவது படம் (எ+டு பனைமரம் கடற்கரை) அல்லாட்டி கவிதை வரியள் எண்டு-ரிசேர்ட்டுகளில தைச்சு Souvenir - ஞாபகார்த்தமா விற்கத் தொடங்கினால் என்னவாம்? சரி! ஏதோ அந்த வெளிநாட்டுச் சனங்கள் எண்டாலும் உதைப்பற்றி யோசிக்கினம். அதாவது அங்கையிருந்து வாற ஆக்களிட்டை சொல்லி விடோணும் ஏதாவது வரியோட இருக்கிற (அழகிய விடுதலையே! உன்னைப்பற்றிய கனவுகளை மட்டும் உள்ளத்திலே சிறைப்படுத்தி வைத்திருக்க அனுமதிப்பாயா??) ரி.சேர்ட் ஒண்டு எனக்குக் கொண்டு வரச்சொல்லி.

அப்பிடியே அதை முடிச்சுக் கொண்டு வந்த நேரம் தான், புளியம்பழம் உலுப்பின மாதிரி 'காயா!...மீயா...!' எண்ட சத்தத்தோட, மேல இருந்து தொப்...தொப்பெண்டு கொஞ்சப்பேர் குதிச்சினம். "ஐயோ, பிள்ளையள் கவனம்! பார்த்து!" "அப்பு! இதெல்லாம் எங்களுக்கு சிம்பிள். எப்பிடி எங்களை எல்லாம் ஞாபகம் வைச்சிருக்கிறீங்களோ இல்லாட்டி மறந்தாச்சோ?' பொலிச்சி பிஸ்கற் சைஸில பத்துப் பேருக்குக் குறையாது. பெரிய ஒரு ட்ரக் வாகனத்தில இருந்து குதிச்ச அவையள் கேட்டினம். அவையளின்ர முகங்களைப் பார்த்தன். யாழ்ப்பாணம் போன நேரம் பளைப்பக்கம் கண்டு, கதைச்ச ஆக்கள்தான் எல்லாரும். பேர்தான் வடிவா எல்லாம் ஞாபகம் இல்லை... ஏதோ சிட்டு, கிட்டு, குயில், கியில், காக்கா எண்டு, எல்லாரின்ர பேரும் ஞாபகத்துக்கு வராட்டியும், எல்லா முகமும் மனசை விட்டு அகலாமல் கிடந்திச்சு, என்ர பேரையும் ஞாபகம் வைச்சுச் சொல்லிச்சினம். "ஐயோ! பிளைளையள உங்கட பேருகள் எல்லாத்தையும் பாடம் வைச்சிருக்கிற அளவுக்கு எனக்கு ஞாபக சக்தி இல்லை. அதே மாதிரி உங்கட முகங்களை மறக்கிற அளவுக்கு என்ர மனசுக்கு சக்தி கிடையாது." 1,2 மணித்தியாலம் நிண்டு கதைச்சதை மறக்காமல், தூரத்தில நிண்டு கொண்டிருந்த மற்றாக்களையும் கூப்பிட்டிச்சினம். மேலும் பல தெரிந்த முகங்கள்! ஆழ்மனசில ஏதோ ஒரு வலியோட ஒரு சந்தோசமான உணர்வு. என்னதான் நாங்கள் இந்தப் போராட்டத்தில ஒரு லட்சத்துக்குக் குறையாத உயிர்களை இழந்திருந்தாலும், இண்டைக்கு ஒவ்வொருத்தரும் மற்றாக்களை தன்ர உறவா நினைக்கிற காலம் ஒண்டு உருவாகியிருக்கிது. வயல், வாய்க்கால், வரம்பு, கிணறு, வேலி, கதியால் எண்டு பிரிஞ்சு போய்க் குறுகி இருந்த எங்கட ஒவ்வொருத்தற்றை பார்வையும் இண்டைக்கு விரிந்திருக்கு. நான், என்ரை வீடு, குடும்பம் எண்ட ஒடுக்கமான உரிமை, இண்டைக்குப் பரந்துபட்டதாய் எங்கட இனம் எண்டிற அளவுக்கு வந்திருக்கிது. தாங்கள் படிக்கிறதாவும், கராட்டி பழகப்போறதாயும் ஆர்வமாச் சொல்லிச்சினம். அந்த முகங்களைப்பார்த்தன். மக்களை ஆழமா நேசிக்கிற பண்பும், தொப்பி வியாபாரியின்ர தொப்பியளை எடுத்துக்கொண்டு போய் 'சூ'க்காட்டின ஆக்களின்ர குறும்புத்தனமும் நிறைந்திருந்திச்சு. சே! அந்தக் காலத்திலயே நாங்கள் ஆயுதம் ஏந்திப்போராடியிருந்தால்...! எங்கட அரசியல்வாதிகளும் ஒத்துழையாமை இயக்கம், உண்ணாவிரதம் எண்டு தங்கட இயலாமையை மூடி மறைச்சிட்டினம். எது ஒரு இடத்தில எடுபடுகிதோ, அந்த சக்தியைத்தான் நாங்கள் பிரயோகிக்கோணும். இண்டைக்கும் சிலதுகள் அதை உணர்ந்து கொள்ளாமல், கொழும்பில இருந்து அறிக்கை விடுகிதுகள். இந்தப்பிள்ளையளைப் பற்றிச் சொல் லேக்கிள்ளைதான், எனக்கு ஒரு விசயம் ஞாபகத்துக்கு வருகிது. கீழ்ப்பந்திக்கு வாங்கோ, சொல்லிறன்!

'நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக்கலிகாலம் வெகுவிரைவில முடிவுக்கு வரப் போகுது. கடற்கோள்களும், பூகம் பங்களும் இந்தப் பூமியின் வாழ்விடப் பிரதேசங்களை அழிச்சு இல்லாமல் செய்யப்போகுது. இந்தியாவின்ர ஒரு குறிப்பிட்டளவு நிலப்பரப்பு மட்டும் தப்பும். அங்கை வாழிறதுக்குத் தகுதியான ஆக்கள் தேர்ந்தெடுக் கப்படுவினம் எண்டெல்லாம் சொல்லி அப்பிடித் தேர்ந்தெடுக்கப்பட்டு, அழிவில்லாத வாழ்க்கை வாழ உங்களுக்கு விருப்பமெண்டால், இந்தியாவின்ரகிளை கொழும்பில இருக்கு. 'பிரம்ப குமாரிகள் சமாசம் எண்டு பெயர். அதுக்குப் போய் தொடர்ச்சியான தியானங்களில ஈடுபட்டு, ஆன்மீக உச்சம் அடையோணும். அதுக்கு பற்றுறவுகள் எல்லாம் அறுத்து, மச்சம் சாப்பிடிறதைக் கைவிட்டு, தியானத்தில மணித்தியாலக் கணக்கா ஈடுபட்டு ஒரு புள்ளியைக் காணவேணுமாம்!

அப்பிடி உலகம் இருக்க, அந்தப்பிள்ளையளைத் திரும்பக் காணக்கிடைச்சது எனக்கும் நல்ல சந்தோசம். 1956,58,72,77 எண்டு கனகாலகட்டத்திலயும் தூங்கிக் கிடந்ததுக்கு, மானசீகமாக அந்தப் பிள்ளையளிட்ட மன்னிப்புக் கேட்டன். "இனி எப்ப எங்களைப் பார்க்க வருவீங்கள்? பார்த்தீங்களே நாங்கள் உங்களை உடனயே கண்டு பிடிச்சிட்டம்." "பார்ப்போம் அம்மா! அங்கால் பக்கம் வந்தால், கட்டாயம் உங்களைப் பார்க்க வாறன். ஆனால் இந்த முறை நான் வாறநேரம், நீங்கள் கண்டுபிடிச்ச மெஷின் (Mashine) இல ஒண்டு எனக்குத் தரோணும், ஞாபகப்பரிசாக!" "நாங்கள் கண்டு பிடிச்ச மெஷினோ?" "ஓ...நீங்கள் கண்டுபிடிச்சு, உங்கட கிணற்றடியில பூட்டி வைச்சிருக்கிறீங்களாம்! பட்டனை அழுத்தின உடனே Automatio ஆக பவுடரை முகத்தில 'புஷ்' எண்டு ஊதித்தள்ளுமாம்! "அந்தக் கருவிதான்" மளமளவெண்டு தங்கட முகத்தில இருந்த பவுடரைத் துடைச்ச அந்த வால்களுக்கு திடீரெண்டு மூக்குகள் நீண்டிச்சு. "உங்களுக்குத் தாற எண்டால், மிளகாய்த்தூள் போட்டுத்தான் தருவோம்!" ஏதோ ஒரு உரிமையோட பட்டுக்கொண்ட கோபம் கொஞ்ச நேரத்தில புரிந்துணர்வில தணிஞ்சது 'தாயக விடுதலை கிட்டும் வரை ஓயாத அந்தப் பிள்ளையளிட்டை இருந்து, விடைபெற்றுக் கொண்டு வந்தன்.

அஞ்சுநாளா எல்லாரும் எல்லா இடமும் சுத்திப்பார்த்திருப்பீங்கள், தயவுசெய்து முதல்பெண் மாவீரரின் நினைவு நாள்.

எண்ட இந்த நிகழ்வின்ர கனதியைக் குறுக்கிப் போடாதிங்கோ! மாலதியின்ர உயிர்த்தியாகத்தில தொடங்கி இண்டை வரைக்கும் பெண்கள் சாதிச்சுப் பெற்ற பிரயோசனத்தை விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் எண்ட அளவில அனுபவிச்சனீங்கள். அதுக்கான பலகட்ட வேலைத் திட்டங்களைப் பார்க்கக்கூடின ஒரு அரிய வாய்ப்பாய் இதைக் கருதோணும். உங்கட சகோதரியள் சுமக்கிற சுமையின்ர ஒரு சின்னப்பகுதியைக் கண்டனீங்கள். இதைப்பற்றி கொஞ்சம் ஆழமா நீங்கள் சிந்திச்சுப் பார்க்கோணும். சும்மா கலர் கலரா சாறியளைக்கட்டிக் கொண்டு (?) படங்களில 4,5 டான்ஸ் ஆடிற காட்சிப்பதுமையளையே இன்னும் ஹீரோயின்களெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிற ஆக்கள், கோப்பாய் வெளியில அந்தப்பிள்ளையில தொடங்கி, ஒரு வரலாறையே எழுதிக் கொண்டிருக்கிற ஹீரோயின்களை இனம் காணோணும். சங்ககாலத்தில இருந்தே மன்னார் முத்துக்குப் பேர் பெற்றது. அந்த வகையில தன்னை உருவாக்கி, தன்னைப்போல் இன்னும் பலரை உருவாக்கி நிற்கிற மாலதி என்கிற மாவீர முத்துவின்ர நினைவெழுச்சி வார நிகழ்வுகளுக்குப் பிறகாவது கன விசயங்களை நாங்கள் ஆழமாச்சிந்திச்சுப் பார்க்கோணும்!

சிந்திச்சுப்பார்க்க வேண்டியது உங்கட சோலி. ஆனால் இந்தத் தாத்தாவுக்கு நீங்களெல்லாரும் சில வாக்குறுதியள் தரவேணும். தாய் வழிச்சமுதாயத்தில இருந்து தமிழ் தோற்றம் பெற்றாலும் பெட்டைக் கோழி கூவி விடியாது, போயும் போயும் ஒரு பொம்பிளை, பெட்டைத்தனம், பேதை எண்டெல்லாம் இருக்கிற சொற்பயன்பாடுகள் நியாயமானவை தானோ எண்டிறதைச் சிந்திச்சுப்பார்த்து, விளங்கிக் கைவிடுங்கோ! பெண்களின்ரை சரிசமன் நிலை பற்றியும், பால் வேறுபாடுகளுக்கப்பால இருக்கிற மனிதம் பற்றி தலைவர் சொன்னதையும் உள்வாங்கிக் கொள்ள இனிமேலயும் நீங்கள் பின்னிற்கக்கூடாது. அதே நேரம் இந்தக் கடப்பாடு பற்றி எந்த விதச் சிந்தனையளும் இல்லாமல் விதி விலக்காக வெறுமனே நாலு புதுச்சாறியளிலையும், புதுவகை நகையளிலையும் திருப்தி கண்டு கொண்டிருக்கிற பெண் ஜந்துக்களும் தங்களை மாற்றிக் கொள்ளோணும். இந்த அப்புவின்ர நியாயமான விருப்பங்களை ஏற்றுக்கொள்ளுவீங்களெண்டு நம்புறன். எங்களுக்குக் கெதியா விடிஞ்சால், எல்லாருக்கும் தானே நல்லது!!



**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலரே வணக்கம்!*

*இந்தியாவின் "சந்தன மரக்கடத்தல் மன்னன்" என்று வர்ணிக்கப்படும் வீரப்பன் தமிழக அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளாரே? வீரப்பன் குறித்தும், அவரது செயற்பாடு, மற்றும் சாவு குறித்த உமது கருத்து என்ன? சொல்ல முடியுமா பாவலரே?*

*அ.மதனகுமாரன்,*
*கிளிநொச்சி.*

மன்னன் கொல்லப்பட்டு விட்டார்; ஆனால் மன்னனை உருவாக்கிய சக்கரவர்த்துதிகள் அதிகார பீடங்களில் இருக்கிறார்கள். ஏவியவனை விட்டு அம்பை நொந்து என்ன பலன்.

*பாவலரே வணக்கம்!*

*நம்மில் பலர் நாகரிகம் என்பதனை ஆடையில் மாத்திரமே காட்டுகின்றார்கள். பாவலா! நாகரிகம் என்பது ஆடையிலா? நடத்தையிலா? விடைதாரும் பாவலரே?*

*அ.மதன்,*
*கிளிநொச்சி.*

ஒய்யாரக் கொண்டையிலே தாளம்பூவாம் அதன் உள்ளே இருக்கிறது. ஈரும் பேனுமாம்-நாகரிகத்தை ஆடையில் மட்டும் காட்ட விரும்புபவர்கள் தங்கள் நிர்வாணத்தை மட்டும் மறைக்க முயல்பவர்களே!

*பாவலரே வணக்கம்!*

*ஒருவரோடு நண்பராக பழகிவிட்டு இடையில் முகம் முறிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*கி.சரிதா,*
*புதுக்குடியிருப்பு.*

சந்தர்ப்பவாதி நட்புக்கு விரோதி.

*பாவலரே வணக்கம்!*

*இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி கூறுங்களேன் பாவலரே?*

*அ.அமலன்,*
*வன்னேரி.*

இது பாதுகாப்பு ஒப்பந்தமல்ல இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தம்.

*பாவலரே வணக்கம்!*

*சந்தன மரக்கடத்தல் மன்னன் வீரப்பனையும் விடுதலைப்புலிகளையும் தொடர்பு படுத்தி செய்தி வெளியிடுகின்றார்களே?*

*கு.கிறிஸ்ரின்,*
*அடம்பன்.*

மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது தமிழக, இந்திய அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மகாநிபுணர்கள்.

*பாவலரே வணக்கம்!*

*சினிமாவையும் சின்னத்திரையையும் ஒப்பீடு செய்ய முடியுமா உம்மால்?*

*சந்திரன்,*
*யாழ்ப்பாணம்.*

சினிமா நாட்டைக் கெடுக்கிறது. சின்னத்திரை வீட்டைக் கெடுக்கிறது. (ஒரு சில படங்களையும் ஒரு சில நிகழ்ச்சிகளையும் தவிர)

*பர்வலரே வணக்கம்!*

*இன்றைய உலகில் மேலாண்மை செலுத்துவது சனநாயகமா, சர்வாதிகாரமா பாவலரே?*

*இசைராசா,*
*வவுனியா.*

இரண்டுமல்ல நிறைவேற்று அதிகாரம்.

*பாவலரே வணக்கம்!*

*பாவலா-சமாதானத்திற்கான நோபல் பரிசு ஒரு கறுப்பின பெண்மணிக்கு வழங்கப்பட்டுள்ளதை பற்றி...?*

*கோணேஸ்,*
*முல்லைத்தீவு.*

அந்தக் கறுப்பின வெண்புறாவிற்கு வாழ்த்துக்கள்.

*பாவலரே வணக்கம்!*

*கருணா ஈ.என்.ரி.எல்.எவ். கூட்டுக் கட்சி, உருவாக்கத்திற்கு மறைமுக சக்திகள் உண்டா?*

*ம.ரூபன்,*
*மானிப்பாய்.*

தமிழ் மக்களால் தூக்கி எறியப்பட்டவர்கள், யாரோடு கூட்டுச் சேர்வார்கள் என்றோ, அல்லது யார் அவர்களைக் கூட்டுச் சேர்ப்பார்கள் என்றோ தெரியாதா? பேரினவாத-மேலாதிக்கவாத சக்திகளின் கூடாரங்கள்தான் இப்போது இவர்களின் முகவரிகள்.

*பாவலரே வணக்கம்!*

*சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முயற்சிகள் நடைபெறுகின்றனவே இது எந்த அளவில் சாத்திய மாகும்?*

*வ.லவன்.*
*நீர்வேலி.*

சபையே இன்றைக்கோ நாளைக்கோ என்று நம்பிக்கை அற்ற நிலையில் தள்ளாடிக்கொண்டிருக்கும் போது சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து என்னபயன்.

* * *




*"என்ன தொலைக்காட்சியில சந்தனக்கடத்தல் வீரப்பனை பிணமாக் காட்டினவங்களாம் பாத்தநீயே..."*

*"பாக்காம, ஆனா அவனைப்போல இல்லை. இது பின்லாடன் கேசோ தெரியா...."*

*"சும்மா... பெண்சாதி வந்து அடையாளங்காட்டினவளாம்."*

*"அது சரி சந்தனக்கடத்தல் வீரப்பனைக் கைது செய்து கோட்டில ஏத்தாம ஏனாம் கொலை செய்தவங்கள்"*

*"ஆங்....அவனைக் கோட்டில ஏத்தினா கன அரசியல் வாதியளுக்கு சாயம் வெளுத்துப் போம்... பின்ன செயலலிதாம்மா படுக்கிற கட்டில் சந்தன மரத்தில தான் செய்தது. வனவள அமைச்சரா இருந்த ஒரு விசுவாசி- இந்தக்கட்டிலோட அம்மாவுக்கு யானைத் தந்தமும் பரிசாத் தந்தவராம்... வீரப்பன் இவ்வளவு காலம் மறைஞ்சு வாழுறதுக்கு கர்நாடக, தமிழக அமைச்சர்களின்ர சந்தனக்கட்டில்களும் ஒரு காரணமாம்.*

*"எட கடைசியில அவனை கோட்டுக்கே விடாம கைவிட்டதுக்கு இது தான் காரணமோ?"*

*"அது சரி-இந்திய தொலைக் காட்சி தன்ர செய்தியில எங்கட தலைவர் பிரபாகரனுக்கும் வீரப்பனோட தொடர்பிருந்தது எண்டொரு சின்ன துப்பும் குடுத்திருக்கு கவனிச்சியோ...."*

*"கவனியாமல..... இஞ்ச வந்து எங்கடதலைவருக்கு விலை வச்சவை தானே- பின்ன அங்கத்தயில் வீரப்பன் போல யோ தலைவர்-எங்கட லட்சியம் கடத்தலில்ல விடுதலை...."*

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-92



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-92**

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -91



**ஜே.பேரின்பம்,**
**தனியார் பேருந்துக் கழகம்,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*பொன்னு விளையிற பூமியடா*
*எங்கள் புலிகள் மீட்ட பூமியடா*
*பஞ்சம் பறந்திடும் நாளையடா*
*எங்கள் களம் செழித்திடும் நேரமடா.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*அரிசிவிலை அதிசயமாய் வன்னியிலும் அதிகமாச்சு- இனி*
*தரிசு நிலம் உழுதேனும் நெல் விதைப்போம்*
*பெருகி வரும் தேவைகளை ஈடு செய்ய-உடல்*
*உருகியேனும் உழவு செய்து கதிரறுப்போம்.*

செ.ந.தனேஸ்,
நிதித்துறை.

*தொழில்நுட்ப வளர்ச்சியாம், கணனி யுகமாம்,*
*உலகமயமாதலாம், உலகை உலுப்புகின்றது.*
*உழவர் நாம் உழுது வயல் செய்து, ஏழை எம்*
*உறவுகள் வாழ உதவுவோம்.*

சு.செல்வி,
பரந்தன்.

*உலகம் போற்றும் உத்தம தலைவன் வாழும் தேசமதில்*
*உழவர் நாம் ஏர் பூட்டி கழனி செய்து*
*நாளை மலரும் நம் தமிழீழமதில் புதுமணம் பரப்பி*
*புதுப் பொலிவுடன் விளங்க அயராது உழைப்போம்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*சென்நெல் விளையும் பூமிதனில்*
*பண்ணாக பதனிட்டு விதை விதைத்து*
*பொன்விளைவாய் பன்மடங்காய் பயன் பெறும்*
*உழுதுண்டு வாழ்வார் தெய்வங்களே.*

க.நந்தன்,
பூநகரி.

*கண்ணிவெடி விதைக்கப்பட்ட கழனியது*
*கண்மணிகள் மீட்டுத்தந்த பூமியிது.*
*ஏர் செய்து நாம் வாழும் காலமது*
*நெல்விதைக்க வேண்டுமெடா வேகமெடு.*

வா.சுகு,
வடமராட்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.



T.V, Radio, VCD, VCR (டெக்) மற்றும் சகல விதமான இலத்திரனியல் பொருட்கள் திருத்துதல்.

நிழற்பட (போட்டோ கொப்பி) பிரதியாக்கல் சேவை
பற்றரி மீள் மின் ஏற்றுதல்

தரமான தமிழ் திரைப்படங்களின் ஒளி நாடா வாடகைச் சேவை
போன்ற சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளவும்,

ஜப்பான் தொழில் நுட்பத்திலான பாவித்த T.V (தொலைக்காட்சி பெட்டி)
VCR (டெக்) இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனையாளர்கள்.

## அலையோசை தொழில்நுட்பவியலகம்

கரடிப்போக்கு, யாழ்சாலை, கிளிநொச்சி தொ.பே. 021-228 5831 உரிமையாளர்: க. சுந்தரவரதன்

(சி-10394)



Born to Lead .....

DAIDO BRAND NEW MOTOR CYCLE

வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில்
தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

உங்களின் சிறந்த டைடோ உந்துருளி தெரிவுகளுக்கு
எமது காட்சியறைக்கு வாருங்கள்

## சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

(வடபகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்)

இல. 496,496/1 நாயகி கட்டடம், யாழ்சாலை பரந்தன், கிளிநொச்சி.

(சி-10500)

FedEx Express®

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

WESTERN UNION®

இப்பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிடவும் பெறவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

E.mail:- thirumurugan @ lycosmall.com

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
[Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
[பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310

(சி-10133)

பணப் பரிமாற்றம்
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் துரிதமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

எமது காட்சியகம் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

Siri Graphics

## EXPOAIR எக்ஸ்போ எயார்

வான்வெளியில் உங்கள் நண்பன்

your friend in the skies

யாழ்-கொழும்பு பயணத்தின் போது
றோல்ஸ் றோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.